சுவடி : 39
ஏடு : 9
மார்ச்சு 2016
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
**தி.துரை சித்தார்த்தன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
72994 41712
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# மெத்தப் படித்த தமிழின அறிஞர்களே! முதல் தலைமுறை வாக்காள இளைஞர்களே! வாக்குப் போடாதீர்! வாக்குப் போடாதீர்! அரசமைப்புச் சட்டத்தைப் புறந்தள்ளுங்கள்!



"சிந்தனையாளன்" திங்கள் இதழ் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் அதிகாரம் வாய்ந்த ஏடு.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி 8-8-1976இல் தொடங்கப்பட்டது.

1977இல் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று அக்கட்சி முடிவெடுத்தது. ஏன் அந்த முடிவு?

1. இந்திய அரசமைப்புச் சட்ட விதிகள் 13(3)b; 372(3)b; 395 இவை "நால்வருணத்தை"க் காப்பாற்றுகின்றன. அதனால்தான் தமிழர், எல்லோரும் சூத்திரர், 2016 மே மாதத்திலும்;

2. விதிகள் 13, 16(5), 25, 26, 372(3)b, 395 இவையெல்லாம் "பழக்க வழக்கச் சட்டத்தை"க் காப்பாற்றுகின்றன. அதனால்தான், வேத ஆகமத்தைக் கற்றாலும் சூத்திரர்கள் எப்போதும் கோயில் கருவறையில் நுழைய உரிமை இல்லை.

இவற்றை நன்றாக அறிந்தவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர். இவற்றை அடியோடு மாற்றிட 1947 முதல் 1951 வரை முயன்ற அம்பேத்கர் - இராசேந்திர பிரசாதும் மற்றும் பழமைவாதப் பார்ப்பனர்களும் எதிர்த்ததைத் தாங்கிட முடியாமல், 1951இல் அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

அவரைப் பார்த்து, மாநிலங்கள் அவையில், "இவ்வளவு மோசமான ஒரு சட்டத்தை ஏன் இயற்றினீர்கள்?" என, 2-9-1953 முற்பகலில் ஓர் உறுப்பினர் கேள்வி கேட்டார்.

மேதை அம்பேத்கர் தந்த விடை என்ன?

"நான் ஒரு வாடகைக் குதிரை போல் பயன்பட்டேன். என்னுடைய விருப்பத்துக்கு மாறாக எதையெல்லாம் எழுதச் சொன்னார்களோ அதையெல்லாம் எழுதினேன்" (I was a hack. I had to do what I was asked to do much against my will) என, அறிவு நாணயத்தோடு விடை பகர்ந்தார், அவர்.

அதே நாடாளுமன்ற உறுப்பினர், அடுத்து உடனேயே, குத்தலாக இன்னொரு கேள்வியைக் கேட்டார். மற்றவர்களும் கேட்டனர்.

நொந்த உள்ளத்தோடு, மீண்டும் பின்வருமாறு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் விவரமாக விடை தந்தார்.

"இந்திய அரசமைப்பை உருவாக்கும் வரைவுக்குழுவின் தலைவராக நான் இருந்ததாக நண்பர்கள் கூறினார்கள். யாராவது அரசமைப்புச் சட்டத்தை எரிக்க வேண்டுமென்று இன்று முன்வந்தால், நான் துணிவுடன் அதை எரித்துச் சாம்பலாக்க முதலாவது ஆளாக இருப்பேன். அச்சட்டத்தை நான் விரும்ப

வில்லை. அது யாருக்கும் உதவாது" (My friends say that I was the Chairman of the Drafting Committee of the Constitution of India. I dare say that, if anybody came forward to burn the Constitution of India, I will be the first person to burn it out. I do not want it. It will not help anybody).

மேதை அம்பேத்கர் நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் 2-9-1953இல், துணிந்து அரசமைப்புச் சட்டத்தை எரிப்பேன் என முழக்கமிட்டார்.

அதைத்தான் - தந்தை பெரியார் 26-11-1957இல் தமிழ்நாட்டின் ஊர்தோறும் செயலில் செய்து காட்டினார். அவர் ஆணைப்படி 10,000 பேர் அரசமைப்புச் சட்டத்தை எரித்தோம்.

அச்சட்டத்தை 1951 சனவரி 15 முதல் படித்துப் புரிந்து கொண்ட நான், அரசமைப்புச் சட்ட முழு நூலையும் மண்ணெண்ணெயில் நனைத்து ஏடு ஏடாகக் கிழித்துப் பெரம்பலூர் கடைவீதியில் எரித்தேன்.

3-11-1957 தஞ்சையில், "வருணத்துக்குப் பாதுகாப்பாக இருக்கிற அரசமைப்புச் சட்ட விதிகளை அச்சிட்டு எரிப்பது" எனப் பெரியார் அறிவித்தார். அப்படிச் சட்டம் எரிக்கப்பட்டால் என்ன தண்டனை அளிப்பது என்பது பற்றி அப்போது ஒரு சட்டமும் இல்லை. 11-11-1957இல், காமராசர் அரசு அதற்கென "தேசிய கவுரவ அவமதிப்புச் சட்டம்" என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றியது.

அச்சட்டப்படி 10,000 பேரில், 2997 பேர் தண்டிக்கப்பட்டு, ஒரு மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை சிறையிலிருந்தனர்.

தந்தை பெரியார் பார்ப்பனரைக் கண்டித்தார்; பார்ப்பனரைக் குத்தச் சொன்னார்; அரசமைப்புச் சட்டத்தை எரிக்கத் தூண்டினார் முதலான 3 குற்றங்களுக்காக 6 மாதம் வீதம் தண்டிக்கப்பட்டு - ஏக காலத்தில் 6 மாதம் சிறை அனுபவிக்க வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, 14-12-1957இல் சிறை வைக்கப்பட்டார்.

13-6-1958 முற்பகலில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். 7 மாத காலம் தமிழகத்தில் பயணம் மேற்கொண்டார்.

01-2-1959இல் வடநாட்டுக்குப் பயணம் மேற்கொண்டார். உ.பி., தில்லிப் பயணங்களை முடித்துக் கொண்டு, 19-2-1959 இரவு பம்பாயை அடைந்தார்.

பம்பாயில் "CURRENT" ஆங்கில வார இதழ் ஆசிரியர் டி.எஃப். கரகா, 24-2-1959இல் பெரியாரைப் பேட்டி கண்டார்.

அவர் அரசமைப்புச் சட்ட எரிப்புப் பற்றிப் பெரியாரிடம் கேள்வி கேட்டவுடன், தயக்கமின்றி, "India's Constitution is a fraud" எனப் பெரியார் விடை கூறினார்.

அப்போது "கரண்ட்" ஆசிரியர் எடுத்த பெரியாரின் பெரிய நிழற்படம், அடுத்த கிழமை "Current" இதழின் முகப்புப் பக்கத்தில் இச்செய்தியுடன் வெளிவந்தது. அது எனக்கு உந்துவிசையானது.

**பெரியாரின் அந்தப் புரிதலைத் தக்க சான்றுகளுடன் நிறுவவேண்டும்** என முடிவெடுத்த நான், "இந்திய அரசமைப்புச் சட்டம் : ஒரு மோசடி" என்ற தலைப்பில், 1974 ஆகத்து-செப்டம்பரில் 30க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதி, 17-8-1974இல் திருச்சியில் நான் தொடங்கிய "சிந்தனையாளன்" கிழமை இதழில், 21-9-1974 முதற்கொண்டு வெளியிட்டேன்.

அக்கட்டுரைகளை ஒரு சேரத் தொகுத்து, 15-4-1980 இல் ஒரு நூலாக வெளியிட்டேன். நிற்க.

வெறும் நான்காம் வகுப்புப் படித்த பெரியார் 1947 முதல் தமிழில் அரசமைப்புச் சட்ட வரைவைப் படித்துப் புரிந்து கொண்டும், 1957 முழுவதும் தாம் சந்திக்கும் வழக்குரைஞர்களிடமெல்லாம் அதுபற்றி வாதிட்டு அறிந்தும் - துணிந்து அரசமைப்புச் சட்டத்தில், "நால் வருணம்" - "பழக்கவழக்கம்" இவற்றைக் கெட்டியாகக் காப்பாற்றும் விதிகளை மட்டும் தமிழில் அச்சுப்போட்டு, ஒரு படி 3 பைசா என விற்று, அதைக் கொளுத்தச் சொன்னார்.

மெத்தப் படித்த அறிஞர் சி.என். அண்ணாதுரை, "என்ன இருந்தாலும் பெரியார் அவர்கள் அரசமைப்பை எரிக்கலாமா?" என்று தான், அன்று, தமிழகச் சட்ட மன்றத்தில் கருத்துச் சொல்ல முடிந்தது.

ஏன்?

தந்தை பெரியாரின் மேற்கண்ட கொள்கைகளைப் பற்றிப் பேசுவதற்கு உரிய இடம் மாநிலச் சட்டம் அன்று. அதற்கு உரிய இடம் தில்லிப் பாராளுமன்றம் மட்டுமே.

என் சிற்றறிவைக் கொண்டு, மேலே கண்ட கருத்தை விளக்கி, நான் 1957 பிப்பிரவரியில் திருச்சியில் தொடங்கிய "குறள் முரசு" கிழமை இதழில், "தேர்தல் கூத்தாடிகள் திரை கிழிகிறது!" என 3 கட்டுரைகளை

யும், “அண்ணாதுரைக்குச் சவால்!” என இரண்டு கட்டுரைகளையும் எழுதினேன். அவை “விடுதலை” நாளேட்டில் உடனுக்குடன் மறுவெளியீடு செய்யப்பட்டன.

தந்தை பெரியார் தம் இறுதி மூச்சு வரை, நால் வருண ஒழிப்பு, பழக்கவழக்கச் சட்ட ஒழிப்பு, கோவில் கருவறையில் தீண்டாமை ஒழிப்பு இவற்றில் முழு நாட்டம் கொண்டிருந்தார்.

பெரியாரின் தலைமை மாணவர் என நெஞ்சார எல்லோராலும் பாராட்டப் பட்ட அறிஞர் அண்ணாதுரை அவர்கள், 1962 முதல் 1967 பிப்பிரவரி வரையில், தில்லி மாநிலங்கள் அவையில், உறுப்பினராக விளங்கினார்.

மேதை அம்பேத்கர், அன்று 1947இல் முன்மொழிந்த - இந்துச் சட்டத்திருத்தத்தை அவர் ஒரு தடவையேனும் படித்துப் பார்த்து, விளங்கிக் கொண்டு, ஒரு நாளாவது - ஒரு தடவையாவது, அதுபற்றி மாநிலங்கள் அவையில் பேசியிருக்க வேண்டாமா? மற்ற மாநிலங்களைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தலைமை அமைச்சர் பண்டித நேருவுக்கும் அதுபற்றிப் புரிய வைத்து, தனிநபர் சட்டத் திருத்த வரைவு ஒன்றை - Private Member’s Bill முன்மொழிந்திருக்க வேண்டாமா?

அண்ணாதுரை அவர்களின் மறைவுக்குப் பின்னர், 1971-76 வரை; பின்னர் 1989, 2004, 2009 என 4 தடவைகள் தமிழகத்தை ஆண்ட தி.மு.க. சார்பில் மக்களவையிலும் மாநிலங்கள் அவையிலும் குறிப் பிட்ட எண்ணிக்கை வலிமையுடன் திகழ்ந்த தி.மு.க. வினர், அத்தகு முயற்சியை அதன் பிறகாவது மேற் கொண்டிருக்க வேண்டாமா?

அ.தி.மு.க., இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, மார்க் சிஸ்ட் கட்சி, ம.தி.மு.க. முதலான கட்சிகளின் தலை வர்கள் இதுபற்றிக் கவலைப்பட்டிருக்க வேண்டாமா?

மெத்தப் படித்த தமிழ் இன-திராவிடர் இயக்க அறிஞர்களே!

விட்டில் பூச்சிகள் விளக்கொளியில் மோதி மோதிச் சாவது போல் - கோடை இடிபோன்ற மேடை முழக் கங்கள், எதுகை, மோனை வைத்த கட்டுரைகள், வெளிப் பகட்டுகள், வீர உரைகள் இவற்றில் தோய்ந்து கிடக்கும் இளைஞர் பட்டாளமே!

நீங்கள் சட்டம், வரலாறு, சமூக இயல், அம்பேத்கர் சிந்தனைகள், பெரியார் சிந்தனைகள், மார்க்சு-லெனின் கொள்கைகள் இவற்றை மாந்தாமல் விட்டு விட்டு - 2016லும், தமிழ்நாட்டில் வாழும் 7.5 கோடி மக்களுள் - இந்துக்களில் 97 பேராக உள்ள பார்ப்பனர் அல்லாத - ஆரியர் வழி வராத எந்தப் பெரிய மனிதர் ஆனாலும் - பிறப்பில் அவர் சூத்திரர் தானே! சாகும் போதும் அவர் சூத்திரர் தானே! சூத்திரர் பேசும் பைந் தமிழ், கோவில் கருவறையில் ‘நீசர்’ மொழி தானே!

இதுபற்றி நீங்கள் ஆர்வத்தோடு அறிந்து விவாதிக்க வேண்டாமா?

கண்ணுக்கு மெய்யாக நாம் பார்க்கிற உடல் உழைப்பாளி மக்கள் - என்ன அரசியல் அறிவைப் பெறமுடியும்?

இன்றைக்கும் இந்தியாவிலுள்ள உயர் அதிகாரப் பதவிகளில் மக்கள் தொகையில்-100க்கு 15 பேராக உள்ள மேல் சாதிப் பார்ப்பனர், மற்றும் மேல்சாதி சற்சூத் திரர் தானே, 75% இடங்களை ஆக்கிரமித்துள்ளனர்!

“ஆகமம் கற்றாலும் சூத்திரர் அர்ச்சகர் ஆகும் உரிமை அரசமைப்புச் சட்டப்படி இல்லை” என்ற மானங்கெட்ட “மாந்த இழிநிலை”யை மாற்றிட, நீங்களும் நாங்களும் மற்றவர்களும் செய்யப்போவது என்ன?

அறிஞர் அண்ணாதுரை முதல் எந்தப் பெரிய அறிஞரும் ஏறெடுத்துப் பாராத - மேதை அம்பேத்கர் 1947இல் முன்மொழிந்த - அந்த இந்துச் சட்டத் திருத்த வரைவின் உயிர் நாடியான பிரிவின் வரைவை - இதோ, கீழே பாருங்கள்! படியுங்கள்! கலந்துரை யாடுங்கள்! களம் காணுங்கள்!

‘நடைமுறையில் உள்ள பழைய சட்டங்கள் யாவும் நீக்கப்பட வேண்டும்’ என்பது டாக்டர் அம்பேத்கரின் உண்மையான கொள்கையும் விருப்பமும் ஆகும்.

அதை மனத்தில் கொண்டு, “இந்துச் சட்டத் திருத்த மசோதா” (The Hindu Code Bill) ஒன்றை உருவாக்கி, 1947இல் அரசமைப்புச் சட்ட அவையில் அவர் முன்மொழிந்தார்.

அதன் நோக்கம், காரணம் (Object and Reason) பற்றி முன்னுரையில் காணப்பட்டுள்ளதாவது :

Short title, extent and commencement

1. This Act may be called The Hindu Code, 1948.
2. It extends to all Provinces of India.
3. It shall come into force on the first of January, 1950 (Part I, Section 1, Page 1).

இத்தலைப்பின்கீழ், டாக்டர் அம்பேத்கர், இந்துச் சட்டத்தில் ஒரு தலைகீழ் மாற்றம் கொண்டுவரும் திருத் தத்தை முன்மொழிந்தார். அதற்கான மசோதாவின் 4ஆவது பிரிவாக உள்ள அத்திருத்தம் பின்வருமாறு உள்ளது.

4. Overriding effect of Code : Save as otherwise expressly provided in this code -

a) Any text, rule or interpretation of the Hindu Law or any custom or usage in force immediately before this code shall cease to have effect with respect to any of the matters dealt with in this code; and

b) Any other law in force immediately before the commencement of this code shall cease to have effect in so far as it is inconsistent with any of the provisions contained in this code.

இவற்றின் பொருள் : இந்தச் சட்டத்தில் திட்டவட்ட மாகக் குறிப்பிடப்பட்டவை நீங்கலாக,

அ) இந்துச் சட்டம் பற்றிய மூலபாடம், விதி, பொருள் விளக்கம் அல்லது இந்தச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால் ஏற்கெனவே நடப்பில் இருந்த எந்தப் பழக் கச் சட்டமும் வழக்கச் சட்டமும் - இந்தச் சட்டம் நடப் புக்கு வந்தவுடனே நீக்கப்பட்டுவிடும். இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்ட எந்த ஒன்றும் உடனடியாக நடப்புக்கு வந்துவிடும்.

ஆ) இந்தச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால், இந்தச் சட்டத்துக்குப் பொருந்தாத தன்மையில் இதற்கு முன்னர் நடப்பிலிருந்த எந்தச் சட்டமும் உடனடியாக நீக்கப் பெற்றுவிடும்.

இந்தச் சட்டத் திருத்தத்தை அம்பேத்கர் முன்மொழிந்த உடனேயே அவைத் தலைவர் இராசேந்திர பிரசாத், அம்பேத்கரைப் பார்த்து என்ன சொன்னார்?

"Dr. Ambedkar, Mind you! I will not allow this section of the Code to be passed" "அம்பேத்கர் அவர்களே, ஜாக்கிரதை! நீங்கள் முன்மொழிந்துள்ள இந்தப் பிரிவை மட்டும் அவையால் நிறைவேற்றப்பட நான் அனுமதிக்கமாட்டேன்" என்றே சொன்னார்.

இந்தப் புறக்கணிப்பை 1951 வரையில் மேதை அம்பேத்கர் தாங்கிக் கொண்டார்.

**இந்தத் திருத்தம் இந்துச் சட்டத்தில் ஏற்றப்பட்டி ருந்தால்,**

**26-1-1950க்குப் பிறகு,**

1. **மனு ஸ்மிருதி செல்லாது;**
2. **யக்ஞவல்க்ய ஸ்மிருதி செல்லாது;**
3. **பராசர ஸ்மிருதி செல்லாது;**
4. **சைவ, வைணவ ஆகமங்கள் செல்லுபடியாக மாட்டா;**
5. **பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற பிறவி பேதம் வடநாட்டிலும்; பிராமணன், சூத்திரன் என்கிற பிறவி பேதம் திராவிட தேசத்திலும் இருக்க மாட்டா;**
6. **தொட்டால் தீட்டு, கோவில் கருவறையில் மட்டும் தீட்டு என்கிற வேறுபாடு இந்துவாகப் பிறந்த எவருக்கும் இருக்காது;**
7. **ஆணும் பெண்ணும் சமுதாயம், குடும்பம், சமயம் எல்லாவற்றிலும் சமஉரிமை உள்ளவர்கள் ஆவார்கள் என்ற உரிமைகள் கிடைத்திருக்கும்.**

சைவப் பெரியார்கள் மறைமலை அடிகள், கா. சுப்பிரமணியம் பிள்ளை, திராவிட இயக்கப் பேரறிஞர் கள் தமிழ்ப் பேரறிஞர் ச. சோமசுந்தர பாரதியார் முதலியோர்க்கும் -

சி.என். அண்ணாதுரை, எஸ்.இராமநாதன் ஆகியோர்க் கும் 1957 வரையில் இது உறைக்காமல் போனது. ஏன்? ஏன்?ஏன்? இதுபற்றிச் சிந்திக்கத் தவறியது ஏன்?

'சூத்திரப் பட்டம் ஒழிய வேண்டும்' என்கிற மான உணர்ச்சி ஒவ்வொரு தமிழனுக்கும் வராமற் போனது ஏன்?

எந்த வகையான கொள்கை வேறுபாடு - கருத்து வேறுபாடு இருந்தாலும் - திராவிடன் - தமிழன் என்கிற இந்து - "மனிதன்" என்கிற ஒவ்வொருவனும் தனக்கு உரிய சமத்துவ உரிமை துலாம்பரமாக வந்து சேர, இன்றுள்ள இந்துச் சட்டமும், அச்சட்டத்துக்குப் பாதுகாப்புத்தரும் இந்திய அரசமைப்புச் சட்டமும் ஒழிக் கப்பட வேண்டும் என்து புரிய வேண்டாமா?

அத்தகைய அரசமைப்புச் சட்டப்படி நடக்கும் தேர்த லைப் புறந்தள்ள வேண்டாமா? வாக்குப் போட மறுக்க வேண்டாமா?

நாம் எல்லோரும் அத்திக்கு நோக்கிப் பயணிப்போம். வாரீர்! வாரீர்!

**01-03-2016** **- வே. ஆனைமுத்து**

# பல்கலைக்கழகங்கள் மீது படையெடுக்கும் மோடியின் இந்துத்துவ ஆட்சி

- க. முகிலன்

"சாதாரணமாக யோசித்துப் பார்ப்போமானால், இந்தியாவில் தேசியம் என்கிற பதமே தப்பான வழியில், மக்களை ஏமாற்றிப் பிழைக்க ஒரு கூட்டத்தார் - அதாவது மேல்சாதியார் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களால் கற்பனை செய்யப்பட்டு, அவர்களுக் குத் தரகர்களாக இருந்தால்தான் பிழைக்க முடியும் என்று கருதிய சில பார்ப்பனரல்லாதார்கள் என்பவர் களால் ஆதரிக்கப்பட்டு, இவ்விரு கூட்டத்தார் சூழ்ச்சி யாலும், பாமரர்களை ஏமாற்றிச் சிலர் பிழைக்க உப யோகிக்கப்பட்டு வரும் ஒரு பாதகமும், அபாயகரமு மான அர்த்தமற்ற ஒரு வார்த்தையாகும்" (பெரியார் 19.5.1929இல் பாலக்காட்டில் ஆற்றிய சொற்பொழிவு; 'குடிஅரசு' 19.5.1929; பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனை கள் 1974ஆம் ஆண்டுப் பதிப்பு, முதல் தொகுதி, பக்கம் 371).

பெரியார் 1929இல் குறிப்பிட்டுள்ளதுபோல், நரேந்திர மோடி 2014இல் நாடாளுமன்றத்தில் தனிப்பெரும்பான் மையுடன் தலைமை அமைச்சராக ஆட்சியில் அமர்ந்தது முதல், "தேசியம்" என்ற சொல் 'பாதகமும், அபாயகரமுமான' அடக்குமுறைக் கருவியாக ஏவப் பட்டு வருகிறது.

இட்லரும், முசோலினியும் தேசியம் என்கிற பதாகையை உயர்த்திப் பிடித்தே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். உலகையே அச்சுறுத்தும் கொடுங் கோலர்களாயினர். "தேசிய சோசலிசக் கட்சி" என்பது தான் இட்லர் கட்சியின் பெயர். முசோலினியின் இளைஞர் படைக்குத் தரப்பட்ட தத்துவ-ஆயுதப் பயிற்சியை நேரில் பார்த்து வந்தபின், ஆர்.எஸ்.எஸ். 'ஷாகா'




*கருத்துரிமையின் குரல்வளையை நெறிக்கும் மோடியின் இந்துத்துவ ஆட்சி*




எனப்படும் பயிற்சிக் கிளைகளை அமைத்தது. இட்லரும் முசோலினியும் கடிவாளமில்லா அரசதிகாரத்தைப் பெற்றதால் கொடிய சர்வாதிகாரிகளாயினர். மோடியும் இத்திசை நோக்கி நாட்டை நடத்திக் கொண்டிருக்கிறார்.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்கிற பதாகையைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, இதற்கு மாறுபட்ட கருத்துடையோரைத் தன் அரசதிகாரத்தால் வீழ்த்திடத் துடிக்கிறத மோடியின் ஆட்சி.. இந்துத்துவக் கோட்பாட்டை எதிர்ப்பவர்கள் மீது 'தேச விரோதி' (Anti-national) என்கிற முத்திரை குத்தப்படுகிறது. இந்தியத் தண்டனைச் சட்டத்தில் தேச விரோதச் செயல்களை ஒடுக்குவதற்கென பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட 124 (அ) பிரிவு ஈட்டிப் பாய்ச்சப்படு கிறது. பிரிட்டனிலேயே தேச விரோதக் குற்றச் சட்டப் பிரிவு என்பது கைவிடப்பட்டுவிட்ட பிறகும், இந்தியா வில் நடுவண் அரசும், மாநில அரசுகளும் தம்மை எதிர்ப்போரை அச்சுறுத்தவும், பழிவாங்கவும் 124 (அ) பிரிவை அவ்வப்போது ஏவிவிடுகின்றன.




*கன்னையா குமார் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஜே.என்.யு. மாணவர்கள் ஆர்ப்பாட்டம்.*

இருபதாம் நூற்றாண்டில் தேசியத்தின் பெயரால் அய்ரோப்பாவில் இரண்டு உலகப் போர்கள் நடந்தன. அவற்றால் ஏற்பட்ட பெரும் உயிரிழப்புகளும் துன்பங்களும் தேசியம் என்ற சொல்லைப் போற்றுதலுக்குரிய சொல்லாகக் கருதவிடாமல் செய்துவிட்டன. "தேசியம்" என்ற சொல்லை ஆதிக்கத்துக்கான அடையாளச் சொல்லாக அந்நாடுகளின் அகராதிகள் விளக்கமளித்துள்ளன. ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கில அகராதியில், 'தேசியம்' (Nationalism) என்ற சொல்லுக்கு, "மற்ற நாடுகளை விடத் தன் நாடு உயர்ந்தது என்கிற கோட்பாட்டின் அடிப்படையிலான வன்முறை வடிவிலான நாட்டுப் பற்று" என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. இந்திய அரசு தீட்டுகின்ற எந்தவொரு திட்டத்தின் பெயருக்கும் முன்னொட்டாக தேசியம் என்கிற சொல் இணைக்கப்பட்டிருக்கும்-தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம். அய்ரோப்பாவில் 'தேசியம்' என்கிற முன்னொட்டு எதிலும் இடம்பெறுவதில்லை.

ஏனெனில் இந்தியத் தேசியம் என்பது போலியானது; பொய்யானது. எனவே சுதந்தரப் போராட்டக் காலம் முதலே பார்ப்பன-பனியா ஆதிக்கச் சக்திகள் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்களால் உருவாக்கப்பட்ட 'இந்தியத் தேசியம்' என்கிற சட்டகத்துக்குள்-சிறைக்குள் வரலாற்று வழியில் மொழி அடிப்படையில் அமைந்துள்ள உண்மையான தேசிய இனங்களை அடைத்திட முயன்று வருகின்றன. காங்கிரசுக் கட்சியோ அரசியலடிப்படையிலான இந்தியத் தேசியத்தைத் தூக்கிப் பிடித்தது. பா.ச.க. தன் சங் பரிவாரங்களுடன் கூடுதலாகக் "கலாச்சாரத் தேசியம்" என்பதையும் சேர்த்துக் கொண்டுள்ளது.

இதன்மூலம் சமற்கிருதமும் இந்தியும் மட்டுமே இந்தியாவின் மொழிகள் என்று கூச்சலிடுகின்றன. பிற தேசிய இனங்களின் மொழிகளை அழிக்கத் துடிக்கின்றன. வரலாற்றின் நெடிய போக்கினூடாக ஒரே மொழி பேசும் மக்களிடையே உருவான பண்பாட்டுக் கூறுகளை, தத்துவ மரபுகளை மறுத்து, இந்தியாவில் வாழும் எல்லா மொழி பேசுவோரும் - இசுலாமியர், கிறித்துவர் உள்ளிட்ட அனைவரும் இந்துத்துவப் பண்பாட்டை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. 'இந்துத்துவப் பண்பாடே இந்தியப் பண்பாடு' என்று விளக்கமளிக்கின்றன. இதை ஏற்காதவர்களும் எதிர்ப்பவர்களும் தேசத்துரோகிகள் என்று கண்டிக்கின்றன.

நரேந்திர மோடி தலைமை அமைச்சராக ஆட்சியில் அமர்ந்த பின், இந்துத்துவ - சங் பரிவாரங்கள் ஆக்டோபஸ் போல் தங்கள் கொடிய கைகளை எல்லாத் திசைகளிலும் சுழற்றித் திரிகின்றன. இந்துத்துவ எதிர்ப்பாளர்களைக் காவு கொள்ளத் துடிக்கின்றன.

வாஜ்பாய் ஆட்சிக் காலத்திலேயே கல்வியைக் காவிமயமாக்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன - மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலமாக! ஆனால் இப்போதோ, பா.ச.க.வின் மாணவர் அமைப்பான அகில பாரதிய வியார்த்தி பரிசத் (ஏ.பி.வி.பி.) மூலம் பல்கலைக்கழகங்களை இந்துத்துவ ஆதிகத்தின் கீழ் கொண்டுவரக் களத்தில் குதித்துள்ளது. இதற்காக நடுவண் அரசு வெளிப்படையாக ஏ.பி.வி.பி.க்கு ஆதரவாகச் செயல்படுகிறது.

அய்தராபாத் மய்யப் பல்கலைக்கழகத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ரோகித் வெமுலா, ஒடுக்

கப்பட்ட வகுப்பு மாணவர்களின் போர்க்குணம் மிக்கப் போராளியாக உருவாவதைத் தடுத்திட, நடுவண் அரசு, துணைவேந்தர் மூலம் பல்வேறு ஒடுக்குமுறை களை ஏவியது. இறுதியாக ரோகித்தைத் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளியது. இதற்கு ஏ.பி.வி.பி. அமைப்பு ஒரு கருவியாகச் செயலாற்றியது.

2016 சனவரி 17 அன்று ரோகித் வெமுலா தற்கொலை செய்துகொண்டதற்கு நடுவண் அரசும், துணைவேந்தரும், ஏ.பி.வி.பி. மாணவர் அமைப்புமே காரணம் என்கிற கண்டனப் போராட்டங்கள் இந்தியா முழுவதும் நடந்தன. இந்த எதிர்ப்பு அலை ஓய்வ தற்குள், உலக அளவில் புகழ்பெற்ற தில்லியில் உள்ள சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் மாணவர் தலைவர் கன்னையா குமார் தேசத்துரோகக் குற்றச் சாட்டின்கீழ் கைது செய்யப்பட்டிருப்பது, இந்துத்துவ ஆதிக்கத்தைப் பல்கலைக்கழக மாணவர்களிடையே நிலைநாட்டுவதற்காக நடுவண் அரசு தன் அதிகாரத் தை எந்த அளவுக்கு இழிந்த தன்மையில் பயன் படுத்துகிறது என்பதைப் பறைசாற்றுகிறது. ரோகித் வெமுலாவைப் போலவே, கன்னையா குமாரும் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். ஏகலைவன்கள் உருவாகாமல் தடுப்பதில், துரோணாச்சாரிகள் போல் இந்துத்துவச் சக்திகள் செயல்படுகின்றன.

சவகர்லால் நேரு பல்கலைக்கழகம் நடுவண் அரசின்கீழ் 1969இல் நிறுவப்பட்டது. இன்று உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது. பெரும் பாலான பல்கலைக்கழகங்கள் பட்டங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாக மாறிவிட்ட நிலையில், இன்றளவும் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் ஒரு பல்கலைக்கழகத்தின் பங்கு என்னவாக இருக்க வேண் டும் என்பதை எடுத்துக்காட்டுவதில் சவகர்லால் நேரு பல்கலைக்கழகம் (J.N.U) ஒரு சிறந்த முன்னோடியாக விளங்குகிறது. ஜே.என்.யு. வகுப்பறைக் கல்வியை வெறும் ஏட்டுக் கல்வியாக மாற்றிவிடாமல், அதன் பயன்பாட்டைச் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் தளங்களில் வெளிப்படுத்துவதற்கான பயிற்சிப் பட்ட றையாகவும் இயக்கி வருகிறது. அதனால்தான் இந்தியா வின் உயர்நிருவாகத் துறை, அயலுறவுத் துறை, வர லாற்றுத் துறை, கல்வித் துறை, காவல் துறை முதலா னவற்றில் ஜே.என்.யு.வில் படித்தவர்கள் இடம் பெற்றுச் சிறந்து விளங்குகின்றனர்.

ஜே.என்.யு. தொடங்கப்பட்ட காலம் முதலே, எல்லாத் துறைகள் குறித்தும், இந்திய - உலக அரசியல் குறித்தும் மனந்திறந்த, தடையற்ற விவாதங்கள் அங்கு நடை பெற்று வருகின்றன. இந்தப் பன்முகப் பார்வையும் விவாதங்களும் மக்களாட்சியில் சனநாயகத்தின் வேர் களாகும். முற்போக்குச் சிந்தனை எனும் செழுமிய




மரபு நிலவி வந்தது. இப்பல்கலைக்கழகத்தில் 24 மணிநேரமும் இயங்குகின்ற ஒன்பது அடுக்கு கொண்ட நூலகத்தில் ஆண், பெண் என எப்பொழுதும் குழுமி இருப்பர். இருபால் மாணவர்களையும் ஒரே விடுதியில் தங்க வைத்து, பால் சார்ந்த கற்பிதங்களை உடைத் தெறிவதுடன், எத்தகைய பாலியல் வன்முறைகளை யும் ஒடுக்குவதற்கான ஒரு முன்னோடி ஒழுங்கமைப் பையும் இப்பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

**ஜே.என்.யு.வின் பெரும் சிறப்பு என்பது, இருநூறு உருபாய்க்கும் குறைவான பருவக் கட்டணத்தில் உலகத்தரம் வாய்ந்த கல்வியைச் சமூகத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்குவது ஆகும். அதனால்தான் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த கன்னையா குமார் அங்கன்வாடி ஊழியராகப் பணி புரியும் தன் தாயின் உருபாய் 3500 மாத வருவாயில் ஜே.என்.யு.வில் பயில முடிகிறது. மேலும் இப்பல்கலைக் கழகத்தின் வலிமையான மாணவர் அமைப்பும், அதன் அடிப்படையிலான அரசியல் அமைப்பும், அதற்கான தேர்தலும் ஒரு வலுவான சனநாயக ஆட்சி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட் டாகத் திகழ்கிறது. எனவேதான் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த - ஏழைக் குடும்பத்தில் பிறந்த கன்னையா குமார் ஜே.என்.யு. மாணவர் அமைப்பின் தலைவராக உயர முடிந்தது.**

ஜே.என்.யு. மாணவர் தலைவர் கன்னையா குமார் தேச விரோதக் குற்றச்சாட்டின்கீழ் தளைப்படுத்தப்பட்ட தன் தொடக்கப்புள்ளி 9.2.16 அன்று ஜே.என்.யு. வளாகத்தில் நடந்த சிறிய நிகழ்வாகும். மரண தண்ட னைக்கு எதிரான கலை நிகழ்ச்சியை நடத்த மாணவர் சிலர் பல்கலைக்கழகத்திடம் இசைவு பெற்றிருந்தனர். 2013 பிப்ரவரி 9 அன்று அப்சல் குரு தூக்கிலிடப் பட்டார். அப்சல் குரு தூக்கிலிடப்பட்டபோதே, இந்தியாவின் தலைசிறந்த சட்ட வல்லுநர்கள் இத்தீர்ப்பில் உள்ள பல முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டினர். அப்சல்குரு அரசுக்கு ஒரு பலிகடாவாக ஆக்கப்பட்டார் என்றும்

எழுதினார். ‘‘சிந்தனையாளன்’’ இதழும் எழுதியது. ஒரு குறியீடாக அந்நாளை மரண தண்டனைக்கான எதிர்ப்பு நாளாகத் தேர்வு செய்திருந்தனர். 2015 பிப்ரவரி 9 அன்று இந்நிகழ்ச்சி அமைதியாக நடந்தது. ஆனால் 2016இல் இந்நிகழ்ச்சிக்கு ஜே.என்.யு. தந்த இசைவைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. இதன் பின்னணியில் ஏ.பி.வி.பி. இருந்தது என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

அனுமதி மறுக்கப்பட்ட நிலையிலும் ஜே.என்.யு.வில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் 9.2.2016 அன்று மரண தண்டனை எதிர்ப்பு நிகழ்ச்சியை நடத்திட மாணவர்கள் சிலர் கூடினர். அப்போது, ஏ.பி.வி.பி. மாணவர்கள் அங்கு வந்து ‘தேசத் துரோகி அப்சல் குருவுக்கு ஆதரவாக நிகழ்ச்சியை நடத்தக்கூடாது’ என்றுகூறித் தடுக்க முயன்றனர். இருபிரிவு மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்ட சூழ்நிலையில், மாணவர்களை அமைதிப்படுத்திட மாணவர் தலைவர் கன்னையா குமார் அந்த இடத்திற்கு வந்தார். அப்போது அந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த மாணவர்களில் சிலர் ‘தேச விரோத’ முழக்கங்களை எழுப்பியதாகக் கூறப்படுகிறது. ஆனால் கன்னையா குமாரும் தேச விரோத முழக்கங்களை எழுப்பினார் என்கிற செய்தியை ஏ.பி.வி.பி. மாணவர்கள் திட்டமிட்டுப் பரப்பினர். இந்துத்துவச் சக்திகள் இதை உடனே உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்கின் பார்வைக்குக் கொண்டு சென்றன.

தன்னை ஒரு தேசத்துரோகி என்று பொய்யான பரப்புரை செய்யப்படுவதைக் கண்டித்து, 11-2-2016 அன்று கன்னையா குமார் ஜே.என்.யு. மாணவர்களிடம் உரையாற்றினார். அவரது பேச்சின் ஒவ்வொரு சொல்லும் எரி ஈட்டியாக எதிரிகள்மீது பாய்ந்தது. ‘‘எங்களுக்குத் தேச பக்திக்கான சான்றிதழ் ஆர்.எஸ்.எஸ். சிடமிருந்து வேண்டாம். 80 விழுக்காட்டுக்கும் மேல் ஏழைகள் வாழும் இந்த நாட்டில், நாங்கள் ஏழைகள் நலனுக்காகவே உழைப்போம். அதுவே எங்கள் தேசபக்தியாகும். இவர்களுக்கு (சங் பரிவாரங்களுக்கு) உண்மையில் பிரச்சினை எங்கே வருகிறது? மக்கள் சனநாயகத்தைக் குறித்துப் பேசும் போதும், செவ்வணக்கத்தோடு நீல வணக்கத்தை இணைத்துச் சொல்லும் போதும், மார்க்சோடு அண்ணல் அம்பேத்கரின் பெயரை இணைக்கும் போதும் இவர்களுக்குச் சிக்கல் வருகிறது. இதை உறுதிப்பாட்டுடன் செய்யும்போது இவர்கள் வயிற்றில் புளியைக் கரைக்கிறது. இந்தக் காவிக் கும்பல் ஆங்கிலேயரின் அடிவருடிகள். ஆர்.எஸ்.எஸ். சின் வரலாறு என்பதே ஆங்கிலேய ஏகாதிபத்தியத் தோடுதான் பிணைந்திருக்கிறது. இந்தத் தேசத் துரோகிகள் நம்மிடம் தேசபக்திக்கான சான்றிதழைக் கோருவது வெட்கக்கேடானதல்லவா?’’ என்று கன்னையா குமார் ஆற்றிய உரை இந்துத்துவத்தின் முகத்திரையைக் கிழித்தது.




*தில்லியில் நீதிமன்ற வளாகத்திற்குள் பாசக வழக்குரைஞர்கள் கன்னையா குமாரைத் தாக்கிய காட்சி*

‘‘ஓ! கன்னையா குமார் என்கிற ஏகலைவனை இனியும் விட்டு வைக்கக் கூடாது’’ என்று உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் முடிவு செய்தார். கன்னையா குமார் உரையாற்றிய பிப்பிரவரி 11 அன்று இரவும், மறுநாள் பிப்பிரவரி 12 காலையும் தில்லியின் காவல் துறை ஆணையர் பி.எஸ். பாசியிடம் பேசினார். அன்று நள்ளிரவே (12-2-16) பாசி தலைமையில் காவல்துறை ஜே.என்.யு. வளாகத்துக்குள் நுழைந்து கன்னையா குமாரைக் கைது செய்தது. அவர்மீது இந்தியத் தண்டனைச் சட்டம் 124(அ)வின்கீழ் தேசத்துரோகக் குற்றச்சாட்டும், 120(ஆ)வின்கீழ் சதித்திட்டக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டன. இதற்கு முன்னோட்டமாக 12-2-16 அன்று காலை வானூர்தி நிலையத்தில் ராஜ்நாத்சிங் செய்தியாளர்களிடம், ‘‘தேச விரோத முழக்கத்தை எழுப்பும் எவரையும் இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஊறுவிளைவிக்கும் வகையில் கேள்வி கேட்கும் எவரையும் இந்த அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது’’ என்று கூறினார்.

13-2-16 அன்று கன்னையா குமாரைக் காவல்துறையினர் நீதிமன்றத்தில் நேர்நிறுத்த அழைத்து வந்த போது, நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே பா.ச.க.வின் வழக்குரைஞர்கள் கன்னையா குமாரையும் ஜே.என்.யு.வின் மாணவர்களையும் ஆசிரியர்களையும் தாக்கினர். காவல்துறை ஆணையர் தன் படைகளுடன் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். கன்னையா குமார் தாக்கப்படுவதைப் படம்பிடித்த ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டனர். தில்லி உயர்நீதிமன்றம் மூன்று நாள்கள் கன்னையா குமாரைக் காவல்துறை காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி அளித்தது. 17-2-16 அன்று முதல் நீதிமன்றத்தின் காவலின்கீழ் கன்னையா குமார்

இருக்கிறார். பிணையில் வெளியிடுமாறு கன்னையா குமார் அளித்த விண்ணப்பத்தின் மீது 2-3-16 அன்று விசாரணை நடக்க உள்ளது.

கன்னையா குமார் 12-2-16 அன்று நள்ளிரவில் தளைப்படுத்தப்பட்டது முதல், ஜே.என்.யு.வில் மாண வர்கள், ஆசிரியர்கள் ஒன்றுதிரண்டு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அதேசமயம் ஏ.பி.வி.பி.யினரும் சங்பரி வாரங்களும் கன்னையா குமார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை ஆதரித்து, 'தேசபக்தி' பரப்புரை செய்து, பேரணி நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

கன்னையா குமார் தேசத் துரோக முழக்கத்தை எழுப்பினார் என்பதற்குத் திட்டவட்டமான ஆதாரத் தைக் காவல்துறை காட்டவில்லை. அந்நிலையில், பா.ச.க.வின் அமைச்சர்களும், தலைவர்களும், சட்டமன்ற -நாடாளுமன்ற உறுப்பினர்களும் கன்னையா குமாரை ஒரு தேசத் துரோகியாகப் படம்பிடித்துக் காட்டுவதும், கடுமையாகக் கண்டிப்பதும், அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமையாக வழங்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்தரத்தைத் தம் காலின் கீழ் போட்டு மிதிப்பதாகும்.

உச்சநீதிமன்றம் அளித்துள்ள பல தீர்ப்புகளில், அரசுக்கு எதிராகவும் வேறு எது குறித்தும் எத்தகைய முரண்பட்டக் கருத்தையும் கூறுவதற்கு எவருக்கும் உரிமை உண்டு. அக்கருத்தில் வன்முறையில் ஈடுபடு மாறு நேரடியாக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தால் தவிர, அம்மாறுபட்டக் கருத்தைக் கூறியவர் மீது எத்தகைய நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. இந்துத்துவத்துக்கு எதிராகப் பல ஆண்டுகளாகக் கருத்துரைத்துவரும் ஜே.என்.யு. வைக் கைப்பற்ற வேண்டும் என்ற வெறியால் உந்தப் பட்டு, எத்தகைய ஆதாரமும் இல்லாமல் 124(அ) பிரிவின்கீழ் கன்னையா குமாரை நடுவண் அரசு தளைப் படுத்தி இருக்கிறது. அய்தராபாத் பல்கலைக்கழகத்தில் நடுவண் அரசு துணைவேந்தர் மூலம் செயல்பட்டது. ஜே.என்.யு.விலோ நடுவண் அரசு நேரடியாகத் தலை யிட்டுள்ளது.

ரோகித் வெமுலாவின் தற்கொலை குறித்து உலக அளவில் கண்டனங்கள் எழுந்தது போலவே, கன்னையா குமார் கைது செய்யப்பட்டுள்ளதற்கும் உலக அளவில் கண்டனங்கள் வந்தவண்ணம் உள்ளன. அமெரிக்கா வின் சிறந்த மொழியியல் அறிஞரும் உலக அளவில் மதிக்கப்படும் சிந்தனையாளருமாகிய நோம் சாம்ஸ்கி ஜே.என்.யு. துணைவேந்தருக்கு அனுப்பிய மின்னஞ்சல் செய்தியில், காவல்துறை, பல்கலைக்கழக வளாகத்திற் குள் நுழைந்து கைது செய்ததைக் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளார். அதனால்தான் குற்றஞ்சாட் டப்பட்ட மற்ற அய்ந்து மாணவர்களைப் பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்து கைது செய்யும் முயற்சியில் காவல்துறை ஈடுபடவில்லை.

மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் (கல்வி யைக் காவிமயமாக்கும் அமைச்சர்) இரானி நாடாளு மன்றத்தில், ''தேச விரோதச் செயல்களில் ஈடுபடும் தீய சக்திகள் நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும்




*கன்னையா குமார் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஜே.என்.யு. ஆசிரியர் சங்கம் 14-02-2016 அன்று செய்தியாளர்களுடன் நடத்திய கூட்டம்*

அவற்றின் வேரறுக்கப்படும். பாரத மாதா அவமதிக் கப்படுவதை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று போர்க்களத்தில் நிற்பதுபோல் நாடாளுமன்றத் தில் முழங்கினார்.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் (CPI) தேசியச் செயலாளர்-தமிழ்நாட்டைச் சேர்ந்த து. இராசாவின் மகள் மீதும் தேச விரோதக் குற்றம் கூறப்படுகிறது. இதுகுறித்து பா.ச.க.வின் தலைவர்களில் ஒருவரான எச்.இராசா, "து. இராசா தன் மகளைச் சுட்டுக்கொன்று தன் தேச பக்தியை மெய்ப்பித்திருக்க வேண்டும்; நான் அவரிடத்தில் இருந்தால் அவ்வாறு செய்திருப்பேன்" என்று, 18-2-16 அன்று கோவையில் பேசினார். காந்தியாரைச் சுட்டுக்கொன்ற ஆர்.எஸ்.எஸ். கும்பல் இப்படித்தானே பேசும்! மோடி சைவப் பூனை போல் நடித்துக் கொண்டிருக்கிறார் - கருவாட்டின் வாசனையை மட்டும் நுகர்ந்து கொண்டு!

11-2-16 அன்று ஜே.என்.யு. மாணவர்களிடம் உரையாற்றிய போது கன்னையா குமார் குறிப்பிட்டது போல், சங்பரிவாரங்களுக்கும் பா.ச.க.வுக்கும் தேசபக்தி பற்றிப் பேசுவதற்கு எள்ளளவும் தகுதி இல்லை. காந்தியைக் கொன்ற கோட்சே நீதிமன்றத்திலேயே "சாவர்க்கர் புகழ் ஓங்குக" என்று முழக்கமிட்டான். காந்தி இந்திய தேசத்தின் தந்தை அல்ல. அவர் பாக்கிஸ் தான் தேசத்தின் தந்தை என்று கோட்சே ஆணவத் துடன் கூறினார். காந்தியார் கொல்லப்பட்டபோது இந்தியா முழுவதும் பார்ப்பனர்கள் இனிப்பு வழங்கி மகிழ்ந்து கொண்டாடினர். தன்மீது விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நீக்கியதற்காக 1939 அக்டோபர் 9 அன்று சாவர்க்கர் வைசிராயைச் சந்தித்துத் தன் நன்றியையும் அரசுக்கு ஆதரவையும் தெரிவித்தார். 1942 ஆகத்து மாதம் காங்கிரசுக் கட்சி "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் நடத்திய போது, அரசு வேலைகளில் இருக்கும் இந்து மகா சபையினர் பதவி விலகக் கூடாது என்றும் பிரித் தானிய ஆட்சிக்கு ஆதரவாகச் செயல்பட வேண்டும் என்றும் சாவர்க்கர் அறிவுறுத்தினார்.

இதேபோன்று 1951இல் பா.ச.க.வின் முன்னைய அவதாரமான ஜனசங்கத்தை நிறுவிய ஷியமா பிரசாத் முகர்ஜி வங்காள ஆளுநருக்கு 1942இல் எழுதிய மடலில், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை வங்காளத்தில் எவ்வாறெல்லாம் ஆங்கில ஆட்சி ஒடுக்க லாம் என்று 'தேச பக்த கருத்து'களைத் தெரிவித்தார். சங் பரிவாரத்தில் சாவர்க்கர் மட்டும் 1920க்கு முன் சுதந்தரப் போராட்டத்தில் கலந்துகொண்டார். ஆனால் 1923 முதல் இவரும் ஆங்கில ஆட்சியுடன் சமரசம் செய்துகொண்டார்.

வாஜ்பாய், அத்வானி உள்ளிட்ட எந்தவொரு தலை வரும் சுதந்தரப் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.



*கல்வியைக் காவிமயமாக்கும் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி*

எனவே தேசபக்தி தங்களுக்கு மட்டுமே உரியது என்று சங் பரிவாரம் கூறுவதைப் போன்றதோர் பித்தலாட்டம் வேறு எதுவும் இல்லை.

**பெரியாரின் மொழியில் சுருக்கமாகச் சொல்வதா யின், "தேசியம் என்ற சூழ்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்ட தற்கான காரணமே பார்ப்பனிய சனாதன தர்மங்களைப் பலப்படுத்தவே ஒழிய வேறில்லை."**

**"இந்தியா ஒரு நேஷனா?" என்று 1930ஆம் ஆண்டில் சேலம் மாநாட்டில் பெரியார் வினாத் தொடுத்தார். தன் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டுப் பிரிவினையைக் கோரினார். தேசியவாதிகள் இன்றள வும் பெரியாரையும் அம்பேத்கரையும் தேசவிரோதி களாகவே காட்ட முயல்கின்றனர்.**

இந்திய தேசியவாதிகளின், இந்துத்துவவாதிகளின் உண்மையான குறிக்கோள் 85 விழுக்காட்டினராக உள்ள கீழ்ச்சாதி - ஒடுக்கப்பட்ட மக்களைச் சுரண்டி, பார்ப்பன-பனியா ஆட்சியை நிலைநிறுத்துவதேயாகும். எனவேதான் 85 விழுக்காடாக உள்ள ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காகவும் விடு தலைக்காகவும் போராடுவோரை 'தேசவிரோதி' என்று முத்திரை குத்துகின்றனர். 85 விழுக்காட்டினராக உள்ள ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களுக்கு எதிராக, தேசியம்-தேசபக்தி-பாரத மாதா - இந்துத்துவா என எவை குறுக்கே வந்தாலும் அவற்றைத் தாக்கித் தகர்ப்போம்.

**சோதிராவ் புலே-பெரியார்-மேதை அம்பேத்கர் ஆகிய மூவரின் கொள்கைகளை இன்றையச் சூழலுக்கு ஏற்ப மறுவாசிப்புச் செய்து, மார்க்சிய ஒளியில் பட்டை தீட்டி, இந்துத்துவ-இந்திய தேசிய ஆதிக்கச் சக்திகளை முறியடித்து உழைக்கும் மக்களின் விடுதலையை வென்றெடுப்போம்.**

# கன்னையா குமார், சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் 2016 பிப்பிரவரி 11 அன்று மாணவர்களிடையே ஆற்றிய எழுச்சி உரை

**தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் கன்னையா குமார் மாணவர்களிடையே ஆற்றிய உரையின் தமிழாக்கம்:**

எங்களுக்குத் தேசபக்திக்கான சான்றிதழ் ஆர்.எஸ்.எஸ். சிடமிருந்து வேண்டாம். 80 விழுக்காட்டிற்கும் மேல் ஏழைகள் வசிக்கும் இந்த நாட்டில், நாங்கள் ஏழைகள் நலனுக்காகவே உழைப்போம். அதுவே எங்களின் தேசபக்தியாகும்.

எங்களுக்கு, பாபாசாகேப் அம்பேத்கர் மீது முழுமையான நம்பிக்கை இருக்கிறது. இந்த நாட்டின் அரசியல் சட்டத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்த அரசியல மைப்பின் மீது யாராவது விரல் நீட்டினால், அது சங்பரிவாரத்தின் விரலோ அல்லது வேறு எவருடைய விரலோ, அந்த விரலை நாங்கள் ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டோம்.

ஆனால், ஜண்டேவாலாவிலும், நாக்பூரிலும் கற்பிக்கப்படும் சாசனத்தின்மீது எங்களுக்குத் துளியளவும் நம்பிக்கையில்லை. எங்களுக்கு மனுஸ்மிருதியின் மீது எவ்வித நம்பிக்கையுமில்லை. இந்த நாட்டிலுள்ள சாதியவாதத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை.




அண்ணல் அம்பேத்கர்தான் அரசியல் சாசன உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்று குரல் கொடுக்கிறார். அவர்தான் தூக்கு தண்டனையை ஒழிக்க வேண்டும் என்கிறார். அவர்தான் கருத்து உரிமையைப் பேசுகிறார்.

நாங்களும் எங்கள் அரசியல் சாசன உரிமைகளை எதன் பொருட்டும் விட்டுக்கொடுக்கமாட்டோம். சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் 'ஜிஹாதிகள்' இருக்கிறார்கள். வன்முறையைப் பரப்புகிறார்கள் என்று சுப்பிரமணியன் சுவாமி சொல்கிறார். துணிவிருந்தால் ஆர்.எஸ்.எஸ். அடிவருடிகளை அழையுங்கள். நாங்கள் சவால் விட்டுக் கேட்கிறோம். ஏபிவிபி தங்களது முழக்கங்களில், "இரத்தத்தால் திலகமிடுவோம் என்றும், குண்டுகளால் ஆரத்தி எடுப்போம்" என்றும் கூறுகிறார்களே? இந்த வெட்கங்கெட்டவர்கள் யாருடைய இரத்தத்தை இந்த ஊரில் ஓடவிடப் பார்க்கிறார்கள்?

ஆம். நீங்கள் குண்டுகளைப் பாய்ச்சியிருக்கிறீர்கள். ஆங்கிலேயர்களோடு இணைந்து கொண்டு, இந்தநாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்கள் மீது குண்டுகளைப் பாய்ச்சியிருக்கிறீர்கள். இந்த ஊரில் ஏழைகள் தங்கள் பசியைக் குறித்துக் கவலைப்படுகிறீர்கள். பட்டினியில் வாடும் மக்கள் தங்கள் உரிமையைப் பற்றி பேசுகிறார்கள். நீங்கள் அவர்கள் மேல்தான் உங்கள் குண்டுகளைப் பாய்ச்சுகிறீர்கள். இஸ்லாமியர்கள் மீதும், பெண்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடினால், பெண்கள் சீதையைப் போல இருக்க வேண்டும் என்று அவர்கள் மீதும் அடக்குமுறை செலுத்துகிறீர்கள். இந்த நாடு சனநாயக நாடு தானே? அது, மாணவர்கள், ஊழியர்கள், ஏழைகள், கூலித் தொழிலாளி மற்றும் விவசாயிகள் ஆனாலும், அம்பானி அல்லது அதானி ஆனாலும் அனைவருக்கும் சனநாயக உரிமைகளை வழங்கியிருக்கிறதே?

பெண்களின் உரிமைகள் குறித்துப் பேசும்போது, நாங்கள் பாரதியப் பண்பாட்டை அழிக்க நினைப்பதாகக் குற்றஞ் சுமத்துகிறார்கள். ஆம், நாங்கள் அழிக்க நினைக்கிறோம்; சுரண்டல் பண்பாட்டை அழிக்க விரும்புகிறோம்; சாதியப் பண்பாட்டை அழிக்க நினைக்கிறோம்; மனுவாத, பார்ப்பனியப் பண்பாட்டை அழிக்க விரும்புகிறோம்.

இவர்களுக்கு (காவி பரிவாரங்களுக்கு) உண்மையில் எங்கே பிரச்சினை வருகிறது? மக்கள் சனநாயகத்தைக் குறித்துப் பேசும்போதும், செவ்வணக்கத்தோடு, நீல வணக்கத்தை இணைத்துச் சொல்லும் போதும், மார்க்ஸோடு, அண்ணல்

அம்பேத்கரின் பெயரை இணைக்கும்போதும் வருகிறது. இதை உறுதியோடு செய்யும்போது இவர்கள் வயிற்றில் புளியைக் கரைக்கிறது. இந்தக் காவிக் கும்பல் ஆங்கிலேயர்களின் அடி வருடிகள் ஆர்.எஸ்.எஸ்.சின் வரலாறு என்பதே ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்தோடுதான் பிணைந்திருக்கிறது.

இந்தத் தேசத் துரோகிகள்தான் நம்மிடம் தேசபக்திக் கான சான்றிதழைக் கோருகிறார்கள். வேண்டுமென்றால் எனது மொபைலைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள் தோழர் களே. என் தாய், சகோதரிகளைப் பற்றி அசிங்கமான சொற் களில் திட்டித் தீர்க்கிறார்கள். பாரத மாதாவைப் பற்றிப் பேசு கிறது இந்தக் கும்பல். உங்கள் பாரத மாதாவில் எனது தாய் இல்லையென்றால், பாரத மாதா மீதே எனக்கு உடன்பாடு கிடையாது.

இந்த நாட்டின் வறுமையில் வாடும் பெண்களில் என் அம்மாவும் ஒருவர்; அவர் அங்கன்வாடியில் 3000 ரூபாய்க் குக் கூலி வேலை செய்கிறார். அதில், எங்கள் குடும்பம் நடக்கிறது. இந்தக் கும்பல் அவருக்கு எதிராகக் கெட்ட வார்த் தையில் பேசுகிறது. இந்த நாட்டின் ஏழை, தலித், விவசாயி களின் மாதாக்கள் யாரையும் இவர்கள் பாரத மாதாவாக ஏற்றுக்கொள்வதில்லை. உங்களுக்குத் துணிவிருந்தால் புரட்சி வெல்லட்டும் என்றோ, பகத்சிங் புகழ் ஓங்குக என்றோ, சுகதேவின் புகழ் ஓங்குக, அம்பேத்கரின் புகழ் ஓங்குக என்றோ கூறமுடியுமா? அப்பொழுது நம்புகிறோம்; காவிக் கும்பலுக்கு இந்த நாட்டின்மீது நம்பிக்கை இருக்கிறது என்று...

ஆனால், அம்பேத்கரின் 125ஆவது பிறந்த நாள் கொண்டாடுவதாக நாடகம் ஆடுகிறீர்கள். சாதியம்தான் இந்த நாடு சந்திக்கும் முதன்மையான பிரச்சினை என்று அண்ணல் அம்பேத்கர் கூறினாரே... உண்மையாக அக்கறை இருக்கு மானால், தனியார் துறையில் இடஒதுக்கீட்டை அமல்படுத் துங்களேன். அப்பொழுது நம்புகிறோம். காவிக் கும்பலுக்கு இந்த நாட்டின்மீது நம்பிக்கை இருக்கிறது என்று...

பல்கலைக்கழக வளாகம் இருப்பதே எதற்காக? சமூகத் தில் நிலவும் சூழலைக் குறுக்கு விசாரணை செய்வதற்குத் தானே...? பல்கலைக்கழகங்கள் இந்தப் பணியில் தோற் றால், நாடு, நாடாகவே இருக்காது.

இந்தத் தேசத்தோடும், அம்பேத்கரும், பகத்சிங்கும் இந்நாட்டின் நலனுக்காகக் கண்ட கனவுகளோடும் நாங்கள் ஒன்றிப்போனவர்கள். உணவு, உடை, இருப்பிடம் என அனைத் திலும் சமத்துவத்தை உறுதி செய்யும் கனவுதான் எங்களு டையது. இந்தக் கனவுக்காகத்தான் ரோஹித் தன்னுடைய உயிரைக் கொடுத்தான். மத்திய அரசுக்கு நாங்கள் சவால் விடுகிறோம். ஐதராபாத்தில் ரோஹித்துக்கு என்ன நடந்ததோ, அதைக் கண்டிப்பாக இந்த வளாகத்தில் நடக்கவிடமாட்டோம்.

நன்றி : **தீக்கதிர்**

# தொலைக்காட்சியும் தமிழும்!

விளம்பரங்கள் தொலைக்காட்சி யைத்தி றந்தால்
விளம்பரம்செய் வோர்க்கிதுவீண் செலவு கண்டீர்!
உளம்நொந்து போகின்றோம் விளம்ப ரத்தால்!
ஊடகத்தார்க் கிதுவருவாய்! ஆனால் இந்த
விளம்பரத்தால் ஒரு பயனும் இல்லை யென்று
மிக நன்றாய் அறிந்துளரே மக்க ளெல்லாம்!
வளர்ந் துவரு முலகத்தோ டொன்றை எண்ணும்
மக்களிதைத் தவிர்க்கமுடி யாம லுள்ளார்!

தமிழாய்ந்த தமிழறிஞர் ஒருவர் அன்றே
தமிழ்மெல்லச் சாகுமெனச் சொல்லி யுள்ளார்!
தமிழையொழிப் பதில்இற்றை நாளில் இங்கே
தனிச்சிறப்பு தொலைக்காட்சிக் கேயுண் டென்போம்!
தமிழி(ல்)பிற மொழிகளையெல் லாம்க லந்து
தமக்கென்றோர் தனிமொழியைப் படைத்துக் கொண்டார்!
தமிழ்மொழியில் தொலைக்காட்சி நடத்து வோரே
தமிழின்தூய் மைதன்னைக் கெடுக்க வேண்டாம்!

பார்ப்பனர்க்கு நாடுமொழி யெதுவு மில்லை!
பண்டைநாள் தமிழகத்தில் புகுந்து விட்டார்
பார்ப்பனரே எங்கேயும் முதலி டத்தில்!
பார்ப்பனியத் தைச்சார்ந்தே நாட்டின் ஆட்சி!
பார்ப்பனியத் தமிழ்மீது பற்றே யில்லை.
பைந்தமிழை 'நீச'மொழி யென்று சொன்ன
பார்ப்பனச்சங் கரன்நாவைத் துண்டித் தோமா!
பரமாச்சார் யாளாமே பார்ப்ப னர்க்கு!

**இன்றைக்கும் இக்கொடுமை தொடரக் காண்போம்!**
**இழைத்துக் கொண்டிருப்போரை ஒழிக்கா துள்ளோம்!**
**என்றைக்கு விடியுமெனக் காத்தி ருந்தால்**
**எந்நாளும் தீர்விதற்கு வாரா திங்கே!**
**ஒன்றையினித் தமிழரெல்லாம் உணர்தல் வேண்டும்!**
**உரிமையுள நம்நாட்டைப் படைக்கும் நாளே!**
**நன்றுய்க்கும் நாளென்ற புரித லோடு**
**நமக்கென்றோர் நாட்டையுரு வாக்க வாரீர்!**

**- மருதநாடன்**

# வரப்போகுது! வரப்போகுது! மின்னல் வேகத் தொடர்வண்டி! மோடி அரசின் மூடத்தனமான திட்டம்! கருட பகவானை வணங்கும் கற்றறிந்த மூடர்களே! சிந்தியுங்கள்! எது இப்போது வேண்டும்? ஏன்?

வே.ஆனைமுத்து

பாரதிய சனதாக் கட்சியின் அதிகாரம் வாய்ந்த ‘இந்தியப் பிரதமர் வேட்பாளராக’, குசராத் மாநில முதலமைச்சராக இருந்த நரேந்திர தாமோதரதாஸ் மோடி 2014இல் தூக்கி நிறுத்தப்பட்டார்.

அவரது ஆட்சிக் காலத்தில் குசராத் மாநிலத்தில் பயன்பெற்ற பெருந்தொழில் முதலைகள் கவுதம் அதானியும், டாட்டாவும் நரேந்திர மோடியின் தேர்தல் செலவுக்காகப் பணத்தை வாரி இறைத்தார்கள். தேர்தல் என்றாலே அப்படித்தான்.

1980இல், மீண்டும் பிரதமராக இந்திரா காந்தியைக் கொண்டுவர, எல்லாம் செய்தவர், டாட்டா.

1991 மே திங்களில் இராஜீவ் காந்தி, வேண்டாத பயணத்தைத் தமிழ்நாட்டுக்கு மேற்கொள்ளத் தன் சொந்த வானூர்தியைத் தந்தவர் சீமைச் சாராயத் தொழில் மன்னர், விஜய் மல்லய்யா.

அந்தப் பாதையிலேயே, பாரதிய சனதாக் கட்சிப் பிரதமர் நரேந்திர மோடியும் பயணிக்கிறார்.

‘‘இந்தியாவில் தொழில் தொடங்குங்கள்; இங்கே எதை வேண்டுமானாலும் உற்பத்தி செய்யுங்கள்; இந்தியாவுக்குள் விற்பனை செய்யுங்கள்! உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுங்கள். நீங்கள் வந்தவுடனே வேண்டிய பரப்பு இடம் - வேண்டிய அளவு மின்சாரம்; வேண்டிய அளவு தண்ணீர்; எடுபிடி வேலைக்கு எங்கள் நாட்டு அதிகாரிகள் எல்லாம் தருவோம்’’ என்று, உலக நாடுகளுக்கெல்லாம் பயணம் போய் அழைப்பு விடுத்து வந்தார், மோடி.

மோடி, சப்பான் நாட்டுக்கும் போனார். அங்கே மின்னல் விசையில் ஓட்டப்படுகிற - ஒரு மணிக்கு 300, 350 கிலோ மீட்டர் ஓடுகிற அதிக விசை தொடர் வண்டியைப் பார்த்து அசந்து போன மோடி, பசுமை தேங்கிய காட்டில் சிறகை விரித்து ஆடுகிற ஆண் மயிலைப் பார்த்து, தானும் அதுபோல் சிறகை விரித்து ஆட காட்டுக்கோழி - வான்கோழி முயன்றதைப் போல், அங்கேயே, இந்தியாவில் ‘‘புல்லட் இரயில்’’ விட முடிவெடுத்துவிட்டார்.

முதலில், சப்பானுக்கு அந்த முன்னேற்றம் எதனால் வரமுடிந்தது என்று நாம் சிந்திக்கவேண்டும்.

சப்பானியர் பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகப் படிப்பு முடிய சப்பான் மொழியிலேயே படிக்கிறார்கள்; அறிவாளிகளாக இருக்கிறார்கள்.

கப்பலில், வானூர்தியில் அயல்நாடுகளிலிருந்து எந்தப் பொருள் இறக்குமதி செய்யப்பட்டாலும் சப்பான் மொழியில் அந்தப் பொருளுக்கு உரிய பெயரை வைத்து, அப்புறம் தாண்டி மக்களிடையே புழக்கத்துக்கு விடுகிறார்கள்.

2015 திசம்பர் 12 சனிக்கிழமை இந்தியாவுக்கு வருகை தந்த சப்பான் பிரதமர் ஷின்சோ அபே (Shinzo Abe)வுடன் பல முக்கிய ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார், மோடி.

அவற்றுள் முதன்மையானது, இந்தியாவில் சப்பான் அணுமின் உலை அமைக்க ஏற்பாடு செய்ய முடிவு செய்வது.

சப்பானில், புகுஷிமாவில் அணு மின் உலை வெடித்து, அது அடியோடு மூடப்பட்ட பிறகு, இன்று வரை சப்பானியரே தங்கள் நாட்டில் புதிய அணுமின் உலையைக் கட்டவில்லை. இருப்பினும் சீன நாடு தொடர்ந்து புதிய அணுமின் உலையை நிறுவுகிறது. அதைப் பார்த்தவுடன் சப்பான் பிரதமர் அபேவுக்கும் அந்த ஆசை வந்திருக்கிறது. அதுபற்றித் தீர ஆய்வு செய்யும்படி, சப்பான் நாட்டு அதிகாரிகளுக்கு, பிரதமர் அபே ஆலோசனை கூறியுள்ளார்.

ஆனால் இந்தியப் பிரதமர் மோடியும், சப்பான் பிரதமர் அபேவும் அதே 12-12-2015 அன்று 1,200 கோடி டாலர் செலவுத் திட்டத்தில் - அதாவது ஏறக்குறைய ஒரு இலட்சம் கோடி ரூபா செலவில், மும்பைக்கும், அகமதாபாத்துக்கும் இடையே உள்ள 527 கிலோ மீட்டர் தொலைவுக்கு, பறக்கும் மின்விசை தொடர் வண்டியை விடுகிற (Bullet Train) திட்டத்தை நிறைவேற்றத் திட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

பட்டிக்காட்டான் யானையை முறைத்துப் பார்த்து வாய் பிளந்தது போல், ஓட்டைத் தொடர் வண்டிகளில் பயணிக்கும் இந்தியர்களின் நாட்டில் இருந்து சப்பானுக்குப் போன மோடி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் பேராவல் கொண்டிருக்கிறார்.

இந்த ஒப்பந்தப்படி, 25-2-16இல் நாடாளுமன்றத்தில் 2016-17க்கான இரயில்வே, வரவு-செலவுத்

திட்டத்தை முன்வைத்த அமைச்சர் சுரேஷ் பிரபு இந்த அதிவேக இரயில் திட்டததை நிறைவேற்றப் போவதாக அறிவித்துள்ளார்.

இது முழுவதுமாக மடத்தனமானது. ஏன்?

I. 1. இந்தியாவில் இன்று ஏறக்குறைய 1,11,500 தொடர்வண்டிகள் இயக்கப்படுகின்றன. இவைகளி லுள்ள கழிப்பறைகளில் பாதி எண்ணிக்கை அறை களில் தண்ணீர் இருப்பதில்லை. 2. கழிப்பறை களில் நிலையங்களில் விழும் மலத்தைப் பெண் துப்புரவுப் பணியாளர்களே அள்ளித் தூள்மை செய்கிறார்கள். 3. சில இரண்டாம் வகுப்புப் பெட்டி களில் எலிகள் ஓடியாடிப் பைகளை வெட்டு கின்றன. 4. மூட்டைப்பூச்சி தொல்லை தூக்கத் தைக் குலைக்கிறது. 5. பொறுப்பற்ற பயணிகள் பெட்டிக்குள்ளேயே போடும் பழத்தோல்கள், நிலக்கடலைத் தொலும்புகளை ஊனமுற்ற பிச்சைக்காரர்களே கூட்டிப் பெருக்கிவிட்டுப் பிச்சை கேட்டுக் கெஞ்சுகிறார்கள்.

II. 1. சென்னையிலிருந்து தில்லிக்குப் போக இரண்டு இரவுகள், ஒரு பகல் பயணிக்க வேண்டும். 90 விழுக்காடு ஏழை, நடுத்தரப் பயணிகள், இரண் டாம் வகுப்புப் பெட்டிகளில், சமையலறை (Pantry Car) ஊழியர்கள் விற்கும் உணவையே வாங்கி உண்ண வேண்டிய கட்டாயம் இருக்கிறது. தேநீர், காப்பி, சிற்றுண்டி, பகல் உணவு எதுவும் - 1990க்குப் பிறகு, நாய்கூடத் தின்ன முடியாததாக இருக்கிறது.

1978 முதல் 2015 முடிய 37 ஆண்டுகளில், 100 தடவைகளுக்குமேல் தில்லிக்குப் போய் வந்த என் பட்டறிவில் கண்டவை இவை.

2. நடைமேடைகளில் தொடர்வண்டி நீர் (Rail Neer) ஒரு லிட்டர் 15 ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

3. நிலையைங்களில் நடைமேடைகளில் உள்ள குடிநீர்க் குழாய்களில் பெரும்பாலும் நீர் வருவ தில்லை.

III. ஆண்டுதோறும், பிப்பிரவரியில் இந்திய அரசு வரவு-செலவுத் திட்ட அறிவிப்பில் அறிவிக்கப்படும் புதிய தொடர் வண்டிப் பாதைகள் அமைப்பு, புதிய தொடர் வண்டிகள் இயக்குதல் எதுவும் காங்கிரசு ஆட்சியிலும் நிறைவேற்றப்படவில்லை; வாஜ்பேயி ஆட்சியிலும் நிறைவேற்றப்படவில்லை; 2014க்குப் பிறகு வந்த மோடி ஆட்சியிலும் நிறைவேற்றப்பட வில்லை.

எடுத்துக்காட்டாக, தமிழகத்தில், 2011இல் தொடங் கப்பட்ட செங்கோட்டை - புனலூர் இரயில் பாதை, இடையில் சுரங்கம், பாலம் வேலை நடைபெற வேண்டி இருப்பதால், 2016லும் அது முடிக்கப்படவில்லை.

சென்னை-திருப்பதி; சென்னை-புதுச்சேரி வழித் தடங்களில் விடப்படுவதற்காக, 2015 சூனில் கட்டி முடிக்கப்பட்ட இரண்டு இரயில்கள், சென்னை அய்.சி.எஃப். தொழிற்சாலையில் முடக்கப்பட்டுள்ளன.

IV. தமிழ்நாட்டுக்காரர் ஆயிரக்கணக்கில் ஆண்டு தோறும் மலேசியா, சிங்கப்பூர் முதலான பக்கத்து அயல்நாடுகளுக்குப் போய் வருகிறார்கள். மலேசியா விலும் சிங்கப்பூரிலும் தொடர் வண்டியில் பலர் பயணிப்பார்கள்; சிலர் மகிழுந்து, சிற்றுந்துகளில் பயணிப்பர்.

மகிழுந்து, பேருந்து ஓடும் சாலைகள் மிக அகல மாகவும், மேடு பள்ளம் இல்லாமலும் இப்போதும் இருக்கின்றன.

அங்கு, தொடர் வண்டிகள் நிலையங்களில் நிற்கும் போது-பெட்டிகளில் நுழைவதற்கான பாதையின் ஓரம் நடைமேடையைவிட ஒரு அங்குலம்கூட உயரமாக இல்லை. அதனால் முதியவர்கள், குழந்தைகள் மூச்சைக் கட்டி ஒரு அங்குலம்கூட ஏறிப் பெட்டிக்குள் போகும் தேவையே இல்லை. நடைமேடையிலிருந்து எளிதாகப் பெட்டியில் ஏறலாம்.

இந்தியாவில், நிலைய நடைமேடைகளிலிருந்து, பெட்டிக்குள் ஏற, 1.5 அடி (அ) 2 அடி உயரத்துக்கு ஏறவோ, இறங்கவோ வேண்டியிருக்கிறது.

இந்தியா முழுவதிலும் 98 விழுக்காடு தொடர் வண்டிகள் அரசினால் - பொதுத் துறையில் இயங்கப் படுகின்றன.

மண்டல அதிகாரிகள் மட்டத்தில், இன்றும் பார்ப் பனர்கள், காயஸ்தர்கள் - 1996க்குப் பிறகு வந்த பீகாரிகள், வங்காளிகள் இவர்களே பெரிய அதிகாரி களாக இருக்கிறார்கள்.

நடைமேடையை 1 அடி 1.5 அடி உயர்த்தினால் தொடர்வண்டிப் பெட்டிகளில் ஏற, இறங்க எளிதில் முடியும் என்கிற அறிவும் பொறுப்பும் இவர்களுக்கு வரவில்லையே!

இந்தியாவில் உள் தொடர்வண்டி நிலையங்களில் (1) பழைய தில்லி, (2) புதுதில்லி, (3) ஹெளரா, (4) தமிழ்நாட்டில் தூத்துக்குடி நிலையங்கள் மோசமான வை. தில்லி நிலையங்களில் பகலிலும் இரவிலும் பல்லாயிரம் பேர் இருக்கிறார்கள். ஒரு இருநூறு பேர் கூட உட்கார நாற்காலி, பெஞ்சு எதுவுமில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்கிற 790 கழி சடைகளுக்கும் இது உறைக்கவில்லையே! அமைச் சர்கள் என்கிற மடையர்களுக்கும் இதில் அக்கறை இல்லையே!

**இருப்பதைச் செப்பம் செய்ய முடியாத இந்திய அரசு, இந்தியத் தொடர் வண்டித்துறை, இந்திய**

**அரசு நிருவாகத் துறைகள், மக்கள் தலைவர்கள் இவை பற்றி மிக மிக அக்கறை எடுத்துக் கொண்டு விவாதிக்க வேண்டும். அரசின் மூடத்தனமான - திருட்டுக்கு வழிவிடும் இத்தகைய திட்டங்களை எல்லாம் கண்டனம் செய்ய வேண்டும்.**

மோடி, புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொள்ள ஆசைப்படுவது போல, சப்பானைப் பார்த்து - அதிவிசை மின்தொடர் வண்டியை 2016-2017க்குள், இந்தியாவில் ஓட்டிக்காட்ட ஒப்பந்தம் போட்டிருப்பது கடுங்கண்டனத்துக்குரியது; மூடத்தனமானது.

வெகுமக்களை எழுத்தறிவு அற்றவர்களாகவும், ஏட்டறிவு பெற்றவர்களை வயிறு கழுவ ஏற்ற படித்த மூடர்களாகவும் வைத்துக் கொண்டு - 'சப்பானைப் பார்! மும்பையைப் பார்!' என்பது பச்சை அயோக்கியத் தனம் அல்லவா? ஏன்? ஏன்?

இரண்டாம் உலகப்போரில் (1939-1945) சப்பான் பேரழிவுக்கு உள்ளானது. அது திறமையான கல்வி பெற்றவர்ளாகவும், சமூக அக்கறை உள்ளவர்களாக வும் சப்பானிய மக்களை உருவாக்கியது.

1871இலேயே, மெய்ஜி சப்பான் மீட்புத் (Meiji Restoration) திட்டத்தின்கீழ், கல்வி அமைச்சகம் என ஒன்றை சப்பான் அரசு அமைத்தது. அந்த ஆண்டுக்கு முன்னரே "எல்லோருக்கும் கல்வி" என்கிற கொள் கையை அங்கு அறிமுகப்படுத்தியிருந்தார்கள். 1900 க்குள் பள்ளிக்குப் போகும் வயதுள்ளவர்களில் 90 விழுக்காடு குழந்தைகளைத் தொடக்கப் பள்ளிகளில் சேர்த்துவிட்டார்கள். பள்ளிக் கட்டணம் இல்லை என்பதை, 1900லேயே சப்பான்அரசு அறிவித்தது.

**இப்போது தொடக்கக் கல்வி 6 ஆண்டுகள்; கீழ்நிலை உயர்நிலைப் பள்ளிக் கல்வி 3 ஆண்டுகள்; உயர்நிலைப் பள்ளிக் கல்வி 3 ஆண்டுகள் படிக்கிறார் கள். எல்லாம் கட்டாயக் கல்வி; தரமான கல்வி.**

அடுத்த மேல் படிப்புக்குப் போக விரும்புகிறவர்கள் இரண்டு அல்லது நான்கு ஆண்டுகள் பல்கலைக் கழகத்தில் படிக்கிறார்கள்.

சப்பானின் வடக்குத் தீவில் உள்ள ஹொக் காடியொ என்ற ஊரிலிருந்து, காமிஷிரதகி இரயில் நிலையத்திலிருந்து, 80 கிலோ மீட்டர் தொலைவி லுள்ள பள்ளிக்கு ஒரே ஒரு மாணவி போய்ப் படித்து வர ஒரு தனி இரயிலே விடப்படுகிறது. இது இன்றைய சப்பானில்!

ஆனால் இன்றைய இந்தியாவில், பள்ளிக்குப் போகும் வயதுள்ள குழந்தைகளில் 95 விழுக்காட்டு பேர் தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிச் சேருகிறவர்களில் 44 விழுக்காடு குழந்தை களே, 16ஆம் வயதில் 10ஆம் வகுப்பை முடிக்கிறார் கள்.



*பள்ளி செல்லும் ஒரே மாணவிக்காக சப்பானில் தனி தொடர் வண்டி இயக்கப்படுகிறது.*

இந்த இந்தியர் எல்லோரும் தொடக்கக் கல்வியை மட்டும் அவரவர் தாய்மொழி வழியில் கற்கிறார்கள். அதற்குப் பிறகு 100க்கு 60 பேர். ஆங்கில வழியில் 2016இல் படிக்கிறார்கள்.

**ஆங்கிலம்-தமிழனுக்கோ, தெலுங்கனுக்கோ, கன்னடத்தானுக்கோ, மலையாளிக்கோ, பஞ்சாபிக் கோ, வங்காளிக்கோ, இந்திக்காரனுக்கோ தாய் மொழி ஆகாது. ஆனால், இந்த எல்லா இந்திய மொழி மடையர்களும் 6ஆம் வகுப்பு முதல் ஆங்கி லத்தில் படிக்கிறார்கள். அப்படி ஆங்கில வழியில் படிக்கிற எந்தத் தமிழனும், எந்த இந்தியனும் திறமை யான கல்வி பெற்றவனாக இல்லை; இல்லை; இருக்க முடியாது.**



*இந்தியப் பிரதமர் மோடி - சப்பான் பிரதமர் ஷின்சோ அபே*

இந்தப் படித்த மடையர்களை வைத்துக் கொண் டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, 12-12-2015 சனிக் கிழமை மாலை, வாரணாசி (எ) காசியில், கங்கை ஆற்றின் கரையில், சப்பான் பிரதமர் அபேவுடன் ஆரத்தி பூசை போட்டுவிட்டு, Bullet Train - என்கிற பறக்கும் அதிவேக மின்வண்டித் திட்டத்தை நிறை வேற்றிட ஒப்பந்தம் போட்டிருக்கிறார்.

இது எதிர்கால இந்தியத் தலைமுறை குடிமகன் ஒவ்வொருவனின் தலையிலும் புதிய கடனைச் சுமத்தப் போகிறது!

எச்சரிக்கை! எச்சரிக்கை!

# காஷ்மீரைப் பாருங்கள்
# நம்மால் அறியப்பட்ட காஷ்மீர்!
# நாம் அறிய வேண்டிய காஷ்மீர்!
# ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பும், இந்திய அரசமைப்பும்

7

(2016 சனவரி இதழின் தொடர்ச்சி)

ஷேக் அப்துல்லா விரும்பியபடி "தனிச் சுதந்தர காஷ்மீர்" உருவானால், "ஜம்மு-காஷ்மீர்" இந்தியாவை விட பாக்கித்தானுக்குத்தான் நெருக்கமாக இருக்கும். இரு நாட்டு மக்களிடையே உள்ள மத அடிப்படையிலான நெருக்கம், மற்ற நெருக்கத்தையும் உறவையும் ஊட்டி வளர்க்கும் என்றும் பாக்கித்தான் தரப்பு நிர்வாகிகளிடம் பேசினார், ஷேக் அப்துல்லா.

அய்.நா. அவையில் காஷ்மீர் சிக்கல் பற்றி விவாதிக்கப்பட்டபோது, இந்தியாவைச் சேர்ந்த மன்னர் ஆட்சிப் பகுதிகளைப் போல இல்லாமல், காஷ்மீருக்கெனத் தனி மதிப்பை (அந்தஸ்தை)க் காப்பாற்றிக் கொண்டு, ஆட்சி செய்தார், அப்துல்லா. இந்தியாவுடன் மன்னர் அரிசிங் செய்துகொண்ட இணைப்பு ஒப்பந்தம் இதற்கு உதவியாக இருந்தது.

ஷேக் அப்துல்லாவின் நூதனமான அணுகுமுறைகள், ஜம்மு-காஷ்மீரில் அவர் உருவாக்கிக் கொண்ட அரசியல் எதிரிகள் மற்றும் காஷ்மீர் மண்ணில் அப்போது தோன்றியிருந்த பொதுவுடைமைக் கட்சிகளின் வளர்ச்சி போன்றவைகள் இந்திய அரசியல் வாதிகளிடையே வெறுப்பை ஏற்படுத்தின. உள்துறை அமைச்சர் வல்லபாய் பட்டேல் அதுபற்றிக் கவலைப்பட்டார். ஆனால் பிரதமர் நேருவின் போக்கு வேறு தன்மையில் இருந்தது. அவர் உலக அரசியல் அரங்கில், இந்தியாவுக்கு ஒரு சிறந்த மதிப்பை உண்டாக்குவதன் மூலம் - தன்னை ஓர் ஒப்புயர்வு அற்ற உலகத் தலைவராகக் காட்டிக் கொள்ள ஆசைப்பட்டார். ஏன்?

**தன் முன்னோர் பிறந்த மண் ஜம்மு-காஷ்மீர்! அதை இந்தியாவின் ஒரு பகுதியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற "சொந்த மண்" பற்று, அவருக்கு! அதனால், சுதந்தர இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வரைவை, "அணி சேராத" நாட்டுக்கு உரியதாக அவர் அமைத்தார். அது, "பஞ்சசீலக் கொள்கை" என்று குறிப்பிடப்பட்டது. அந்த '5 அம்சக் கொள்கை' ஆரவாரமாக வரவேற்கப்பட்டது.**

ஆனால் பாக்கித்தான் ஆட்சி வசம் தங்கிவிட்ட காஷ்மீர் பகுதிக்கு இப்ராகிம்கான் குடிஅரசுத் தலைவராக இருந்தார்.

அவருடைய அரசு "போர்க்கால நிருவாகக் குழு" என்று அழைக்கப்பட்டது. அவருடைய அமைச்சர் அவையில் - மீர்பூர், பூஞ்ச், காஷ்மீர் பள்ளத்தாக்கு, ஜம்மு உள்ளிட்ட சில பகுதிகளிலிருந்தும் சிலர் அமைச்சர்களாக அமர்த்தப் பெற்றிருந்தனர். இந்த அரசை அங்கீகரித்து, அந்த அங்கீகாரத்துக்கு அய்.நா. அவையில் ஒப்புதல் பெற்றுவிட பாக்கித்தான் தரப்பினர் முயன்றனர். அய்.நா. அவை அதை ஒப்புக் கொள்ளவில்லை. 1948 ஆம் ஆண்டு ஆகத்து 13ஆம் நாளிட்ட அதன் தீர்மானப்படி, "அய்.நா. அவையின் கண்காணிப்புக்குழுவின் பார்வையிலுள்ள - உள்ளூர் நிருவாகத்துக்கு உட்பட்ட பகுதி" என்றே, அய்.நா. அவை குறிப்பிட்டது.

மறுபுறம், ஷேக் அப்துல்லாவை முகங்கோணாமல் வைத்துக் கொள்ளுவதுதான், காஷ்மீரை இந்தியாவுடன் நிரந்தரமாக வைத்துக் கொள்ள ஒரே வழி என்று நம்பிய இந்திய அரசியல் வாதிகள் - அவருடைய "தேசிய மாநாட்டுக் கட்சி"க்கு ஆதரவாகச் செயல்படுவதிலேயே அக்கறையாக இருந்தார்கள். அதாவது, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தேசிய மாநாட்டுக் கட்சிக்கு எதிராக வேறு ஒரு கட்சி உருவாவதையோ, வளருவதையோ, மற்ற அரசியல் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் விரும்பாத நிலைமை இருந்தது. இது, காஷ்மீர் பள்ளத்தாக்கில் வரவேற்புப் பெற்றிருந்தாலும், மற்ற பகுதிகளில் கடும் அதிருப்தியைச் சந்தித்தது. நேரு முதலான பெருந்தலைவர்கள் ஷேக் அப்துல்லாவுக்கு முதன்மை கொடுத்ததை அம்மாநிலத்தில் இயங்கிய ஜன சங்கம், பிரஜா பரிஷத் போன்ற கட்சியினர் வெறுத்தனர்.

அத்துடன் இந்துக்கள் அதிகமாக உள்ள ஜம்முவில் மட்டுமின்றி, புத்த மதத்தினர் அதிகமாக உள்ள லடாக் பகுதியிலும் வெறுப்பு இருந்தது. ஷேக் அப்துல்லாவைத் தங்களுக்கான தலைவராக ஏற்க அவர்கள் மறுத்தனர். மேலும், நேருவுக்கு அவர்கள் எழுதிய ஒரு கோரிக்கை மடலில், "லடாக்கை-ஜம்மு பகுதியுடன் இணைத்து இந்தியாவின் ஒரு மாநிலமாக அமைக்க வேண்டும்; அல்லது கிழக்கு பஞ்சாப் பகுதியுடன் சேர்த்து, ஷேக் அப்துல்லாவின் ஆட்சியிலிருந்து தங்களை விடுவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்.

மற்ற பகுதிகளின் பொது மக்களுடையவும், அரசியல் தலைவர்கள் பலருடையவும் நம்பிக்கையை ஷேக் அப்துல்லா விரைவில் இழந்தார்.

''தனிச் சுதந்தர காஷ்மீர்'' என்கிற ''தனிநாடு'' ஆசை ஷேக் அப்துல்லாவை ஆட்டிப் படைக்கிறது'' என, எல்லோரும் பேசத் தலைப்பட்டனர். 'நிலையான கொள்கை இல்லாதவர் ஷேக் அப்துல்லா' என்கிற கருத்து, காங்கிரசுக் கட்சிக்குள்ளும் வளர்ந்தது. இருப்பினும் நேரு தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.

ஆனால் ஷேக் அப்துல்லாவோ, ''காங்கிரசுக் கட்சிக்குள்ளும் மதவாதப் போக்கு அதிகரித்துவிட்டதாகவும், இந்தியாவில் மதவாத அரசியல் தவிர்க்க இயலாதது'' என்றும் ஒரு பெரிய குற்றச்சாற்றை வீசினார்.

அத்துடன் காஷ்மீரின் சிறப்பு நிலையை இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்தினார். அதனால், இந்திய அரசமைப்பில் 306-(அ) என்ற புதிய விதி எழுதப்பட்டு, பின்னர் அது 309ஆம் விதியாக (Article)ச் சட்டமாக்கப்பட்டது.

நேருவை நோக்கி, ஒரு பக்கம் அப்துல்லா, மறு பக்கம் பாக்கித்தான் நெருக்குதல், இன்னொரு பக்கம் இந்து மதவாத அரசியல்வாதிகள் என அழுத்தம் தர, நான்காவது திசையிலிருந்து அய்.நா. அவை வாக்கெடுப்புக்கு விரட்டிக் கொண்டிருந்தது.

அப்போதைய சூழலின் கடுமையைத் தடுக்க எண்ணிய நேரு, ஷேக் அப்துல்லா கேட்டுக் கொண்டபடி, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு மேலும் பல உரிமைகளைத் தந்தார்; அதை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 370ஆம் விதியாக ஆக்க ஒப்புக் கொண்டார். இவ்விதி இந்திய அரசமைப்பு அவையில் 17-10-1949 அன்று சட்டப் பிரிவாக அறிமுகப்படுத்தப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. இதற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது. இதை எதிர்த்து ஜம்முவில் வாழ்ந்த இந்து அரசியல் வாதிகள் பெரும் போராட்டம் நடத்தினர்.

அடுத்து இந்திய அரசமைப்பு அவையில், இந்திய அரசமைப்புச் சட்ட இறுதி வரைவு 26-11-1949 அன்று முறையாக ஒப்புக்கொள்ளப்பட்டு, 26-1-1950 அன்று அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்தது.

அச்சட்டப்படி, கவர்னர் ஜெனரல் (Governor - General) என்ற பதவியின் பெயர் மாற்றப்பட்டு, ''குடிஅரசுத் தலைவர்'' என மாற்றம் பெற்றது.

டாக்டர் இராசேந்திர பிரசாத் விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் குடிஅரசுத் தலைவர் (President of Indian Republic) ஆனார்.

(தொடரும்)

## திருத்தணியில்
# 'புரட்சிக் கவிஞர் பாசறை'
## தொடக்க விழா

30.01.2016 காரி மாலை 6 மணியளவில் திருத்தணி மங்கலங்கிழார் கல்வி அறக்கட்டளை வளாகத்தில் புரட்சிக் கவிஞர் பாசறை தொடக்க விழா நடைபெற்றது, அரிமா பு.வெ. முருகேசனார் தலைமை ஏற்க, கொ.எ. புரந்தரன் முன்னிலை வகித்தார். க. புவியரசு வரவேற்புரைக்குப்பின் 'பாசறை' இருதிங்கள் இலக்கிய இதழை வெளியிட்டுத் தோழர் தியாகு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் தமிழேந்தி தலைமையில் பாரதிதாசன் படைப்புகள் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. பொதட்டூர் புவியரசன், பு.சு. ஆறுமுகம், கவியன்பன், ச.ம. மாசிலாமணி, கி. எழில் உள்ளிட்டோர் உரையாற்றினர். அடுத்து நடைபெற்ற 'கவிதை படித்தல்' நிகழ்ச்சியில் பல இளந்தோழர்கள் ஆர்வத்தோடு தாங்கள் எழுதிவந்த கவிதைகளைப் படித்தனர். இரவு 9 மணியளவில் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றன.

## 'கிராமிய இந்தியா' சமூக, கலை-பண்பாட்டு மையம் சார்பில் முப்பெரும் விழா

21-02-2016 ஞாயிறு முற்பகல் 11 மணியளவில் தி.மலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், அப்துல்லாபுரம் 'ரிஸ்க்' அரங்கில் உலகத் தாய்மொழிநாள் விழா, பெருங் கவிக்கோ வா.மு.சே. அவர்களின் தமிழ்ப் பரப்புரை ஊர்திப் பயண வரவேற்பு விழா, அரசுப் பணி நிறைவு பெற்ற 'காஞ்சி கலைக்குழு' தோழர்களுக்குப் பாராட்டு விழா என முப்பெரு விழா சிறப்பாக நடைபெற்றது. டாக்டர் விமுனாமூர்த்தி தலைமையேற்க, பொன்மதி க. முருகன் அனைவரையும் வரவேற்றார். மா. மாதவன் தொடக்கவுரைக்குப் பின், பல்வேறு தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர். உலகத்தாய் மொழி சிறப்புக் குறித்து முனைவர் வா.மு. சேதுராமன் மற்றும் தமிழ். முகிலன் சிறப்புரையாற்றினர். அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற கோ.மு. சுப்பிரமணியன் (பாவெல்), க. சம்பத்குமார் (சங்கீதன்), செ.ஆ. செயராமன் (உலகஒளி), ஆகிய காஞ்சி கலைக் குழுத் தோழர்களைப் பாராட்டி சி. நடராசன், அரங்க சானகிராமன், க. கோதண்டன், அமுதகீதன், காஞ்சி அமுதன் உள்ளிட்ட தோழர்கள் உரையாற்றினர். நிறைவாகக் கவிஞர் தணிகைச்செல்வன் சிறப்புரையாற்றி சி. ஏழுமலை நன்றியுரையுடன் நிகழ்வு இசையோடும் பாட்டோடும் சிறப்பாக நிறைவுற்றது

# பொதுக்கடன் பொறுப்பு :
# மாநில அரசுக்கா? நடுவண் அரசுக்கா?

- குட்டுவன்

பொதுக்கடன் (Public Debt) எவ்வாறு உருவாகிறது? நடுவண், மாநில அரசுகள் தனித்தனியே வரிவிதிக்கும் அதிகாரங்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ளன. இந்திய அரசமைப்புச் சட்ட அவையில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதியதிகாரங்கள் மிகமிகக் குறைவாக உள்ளன என்று பலர் வாதிட்டனர். குறிப்பாக டி.டி.கிருஷ்ணமாச்சாரி, கே.சந்தானம், ஏ.ராமசாமி முதலியார் ஆகியோர் 1935ஆம் ஆண்டு சட்டத்தில் உள்ள நிதிப் பிரிவுகள்தான் புது அரசமைப்புச் சட்டத்திலும் உள்ளன. இச்சூழலில் மாநில அரசுகள் மக்களுக்குப் பணியாற்றும் துறைகள் அதிகம் உள்ளன. இந்த அமைப்பு முறை செயல்பட்டால் மாநிலங்கள் நடுவண் அரசிடம் பிச்சை எடுக்கும் நிலை ஏற்படும் (The states will be the beggars at the door steps of the Centre) என்று குறிப்பிட்டனர்.

இந்த எதிர்ப்புக்குப் பின்னரே நடுவண் அரசின் வரிகளில் இருந்து மாநிலங்களுக்குத் தொகையைப் பிரித்துக் கொடுக்கும் நிதிக்குழுவை (Finance Commission) உருவாக்கும் அதிகாரம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 280ஆவது பிரிவில் வகை செய்யப்பட்டது.

இதற்குப் பின்பும் மாநில அரசுகள் ஏன் கடனை அதிகரித்து வந்தன என்ற கேள்வி எழும். 1950லிருந்து தொடர்ந்து மாநிலங்களுக்கு நடுவண் அரசின் வரிவருவாயிலிருந்து கிடைக்க வேண்டிய நிதிப்பங்கை நிதிக்குழுவே பரிந்துரை செய்திருந்தால் இன்றைக்கு நாம் காண்கிற நிதிப்பற்றாக்குறை பிரச்சினை, கடன் பிரச்சினை பெருமளவில் தொடர்ந்திருக்காது. 1950க்குப் பிறகு நாடாளுமன்றச் சட்டத்தால் திட்டக்குழு உருவாக்கப்பட்டது. அரசமைப்புச் சட்டம் உருவாகிய போது திட்டக்குழு பற்றிய விவாதமே அரசமைப்புச் சட்ட அவையில் இடம் பெறவில்லை. சமூக, பொருளாதார திட்டமிடுதல் நடுவண் அரசு மாநிலங்களுக்குப் பொதுவான முறையில் பொதுப்பட்டியலில்தான் இடம் பெற்றது. ஆனால் நடுவண் அரசின் திட்டக்குழு எவ்வித நிதி அல்லது பொருளாதார வரையறைகளின்றி மாநில அரசுகளுக்கு நிதியுதவியைத் தொடங்கியது. நிதியுதவி என்றால் பொதுவாக நடுவண் அரசு மாநில அரசுகளுக்கு அதிக தொகையை அளித்தது போல் எண்ணத் தோன்றுகிறது. ஆனால் திட்டக்குழு மாநில அரசுகளுக்கு வழங்கிய திட்ட மானியம் சில காலங்களில் 20 விழுக்காடாகவும் 80 விழுக்காடு கடனாகவும் இருந்தது.

1967இல் பல மாநிலங்களில் காங்கிரசு அல்லாத அமைச்சரவைகள் உருவாயின. தமிழகத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் திமுக ஆட்சியமைத்தது. முதல் நிதிநிலை அறிக்கையிலேயே அறிஞர் அண்ணா மாநில அரசுகள் நடுவண் அரசிடமிருந்து கடன்களைப் பெற்று அதிக வட்டியைச் செலுத்துகின்றன. நிதிக்குழு வழியாக வரும் தொகை மாநில அரசுகளின் பணிகளுக்கு ஏற்ப அதிகரிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். எனவே மத்திய-மாநில அரசுகளின் உறவுகளைச் சீரமைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அன்றைக்கு நடுவண் அரசின் திட்டக்குழுவின் துணைத்தலைவராக இருந்த காட்கில் திட்டக்குழு அளிக்கும் நிதிப்பகிர்விற்கு ஒரு வரையறையை வழங்கினார். மக்கள்தொகை 60 விழுக்காடு தலாவருமானம் 10 விழுக்காடு வரித்திரட்டும் முயற்சி 10 விழுக்காடு நடைமுறையில் உள்ள நீர்ப்பாசன மின்திட்டங்கள் 10 விழுக்காடு சிறப்புத் திட்டங்களுக்கு 10 விழுக்காடு என்ற வரையறைகள் 1969லிருந்துதான் முறைப்படுத்தப்பட்டன. 30 விழுக்காடு மானியத்தைப் பெறுவதற்குதான் இந்த முறை என்பது குறிப்பிடத்தக்கது. 70 விழுக்காடு கடனிற்கு மாநில அரசுகள் வட்டியைச் செலுத்தும் நிலை ஏற்பட்டது.

2002க்குப் பிறகு நடுவண் அரசு சந்தையில் கடனிற்குக் கொடுக்கப்படும் வட்டி குறைந்து காணப்பட்டதால் மாநில அரசுகள் நேரடியாகக் கடனைக் குறைந்த வட்டியில் பெற்றுத் தங்களுடைய நிதித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டது. இத்தகைய பின்னணிகளையும் முரண்பாடுகளையும் மாநில அரசுகளின் நிதிச்சுமையையும் அறிந்திருந்த பெருந்தலைவர் காமராசர் 1975ஆம் ஆண்டு சந்தித்த போது நடுவண் அரசில் அதிகாரக் குவிப்பு இருப்பது நிதி நெருக்கடிக்குத் தள்ளப்படும் என்று குறிப்பிட்டார். மேலும் தான் காங்கிரசுத் தலைவராக இருந்த போது தனக்கும் நிதியமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாய்க்கும் தெரியாமலேயே பன்னாட்டு நிதியத்தின் (IMF) அழுத்தம் காரணமாக இந்தியாவின் ரூபாய் மதிப்பை 36.5

விழுக்காடு அளவிற்கு 1966இல் குறைக்கப்பட்டது இதற்கு ஒரு சான்றாகும் என்று குறிப்பிட்டார். உங்களைப் போன்ற பொருளாதாரத்தில் ஆய்வு செய்பவர்கள் இவ்வழிமுறை சரியானதா என்றும் கேட்டார். அவர் கூறியது போல் அன்றைக்குக் குறைந்த ரூபாயின் மதிப்பு இன்றைக்கு ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் 66 என்று அளிக்கும் நிலையில் உள்ளோம்.

இந்தியாவின் உலகமயமாதல் கொள்கையால் 1975ஆம் ஆண்டு ஒப்பிடும் போது ஏற்றுமதி பெருகி யிருந்தாலும் இந்தியாவின் பணமதிப்புத் தொடர்ந்து சரிந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பணவீக் கத்தை அதிகரிப்பதற்கும் இது ஒரு காரணியாக அமைந்து விடுகிறது. நாம் வட்டியையும் கடனையும் செலுத்தும் போது இந்த ரூபாய் மதிப்பில்தான் கொடுக்க வேண்டும். இந்திரா காந்தி காலத்தில்தான் வெளிநாடுகளிலிருந்து பெறும் வணிகக்கடன் (Commercial Borrowings) அதிகரிக்கத் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

1967லிருந்து நடுவண் அரசு தனது துறைகளின் வழியாக மாநில அரசுகளுக்கு நிதியுதவியை அளிக்கத் தொடங்கியது (Centrally sponsored schemes). மாநில அரசுகளின் அதிகார எல்லையில் உள்ள பெரும்பான் மையான வளர்ச்சித் துறைகளில் இந்தத் திட்டங்கள் இருவழிகளில் குறுக்கிடத் தொடங்கின. நிதி சேதாரம் ஏற்படுவதற்கும் வழி வகுத்தன. இந்தியாவில் கல்வி பொதுச் சுகாதாரம் போன்ற துறைகளில் எல்லா மாநிலங் களும் ஒரு சீரான அளவில் வளர்ச்சி அடையவில்லை. சான்றாக கேரளா, தமிழ்நாடு, பஞ்சாப் போன்ற மாநிலங் கள் கல்வி, பொதுச்சுகாதாரத் துறைகளில் மாநில அரசின் திட்டங்களால் பெரும் முன்னேற்றத்தை அடைந்தன. மாநிலங்களிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க முற்பட்ட நிதிக்குழுக்களின் பரிந்துரைகள் நடுவண் அரசின் திட்டக்குழு வழியாக அளிக்கப்படும் நிதியாலும் அரசின் நேரடித் துறைகளால் அளிக்கப்படும் நிதியாலும் மாநிலங்களுக்கு இடையே ஏற்றத்தாழ்வுகள் மேலும் மேலும் பெருகின.

மாநில அரசுகள் கடனளவு பல லட்சங் கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்தாலும் நடுவண் அரசும் ரிசர்வ் வங்கியும் அடிக்கடி கண்காணிப்பதனாலும் கட்டுப்பாடு களை விதிப்பதாலும் தங்கள் நிதி எல்லையை மீறிக் கடனைப் பெறாத சூழல் உள்ளது. இது போன்ற நிதி முரண்பாடுகளுக்கும் சிக்கல்களுக்கும் ஒரு தீர்வைக் காண வேண்டும் என்ற நோக்கோடுதான் 1983ஆம் ஆண்டு முதன்முதலாகத் தென்னக முதலமைச்சர்கள் மாநாட்டை பெங்களூரில் அன்றைய கர்நாடக முதல்வர் ராமகிருஷ்ண ஹெக்டே கூட்டினார். அப்போது எட்டாவது நிதிக்குழு நடுவண் அரசால் அமைக்கப்பட்டு அறிவிப்பு வெளியானது. தென்னக மாநில முதல்வர்கள் எம்ஜிஆர், என்டிஆர், பாண்டிச்சேரி ராமசந்திரன் ஒன்று கூடி ஒரு பொதுவான அணுகுமுறையை எட்டுவதற்கு முயற்சி செய்தனர். கேரள மாநிலத்தில் முதல்வர் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவராக இருந்ததனால் இதில் கலந்து கொள்ளவில்லை.

மாநிலங்களுக்கு அதிக நிதியாதாரங்களை அளிக்க வேண்டும் மத்திய மாநில உறவுகளைச் சீராய்வு செய்ய வேண்டும் என்று கோரிக்கைகள் வைக்கப்பட்டன. அப்போது ஊடகங்கள் இராமர்கள் ஒன்று கூடி பத்ரகாளியிடம் நீதிக் கேட்கிறார்கள் என்று நகைச்சுவைச் சித்திரங்களை வெளியிட்டன. தென்னக முதல்வர்கள் மாநாட்டில் ஞாயிறு மாலை நடுவண்-மாநில உறவு களைச் சீராய்வு செய்ய வல்லுநர் குழு அமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளி வந்தது. இதனை அறிந்த இந்திரா காந்தி நள்ளிரவில் அரசமைப்பின் பொதுப்பட்டியல் அதிகாரத்தின்படி நீதிபதி சர்க்காரியா தலைமையில் நடுவண் - மாநில உறவுகைள ஆராயக் குழுவை அமைத்தார். பொதுபட்டியல் சார்ந்த ஒரு விதியில் அறிவிப்பை நடுவண் அரசு வெளியிட்டால் மாநில அரசுகள் அதே பொருளில் வேறு எந்த அறிவிப்பையும் அரசமைப்புச் சட்டப்படி வெளியிட முடியாது. ஊடகங்கள் வெளியிட்டபடியே இராமர்களைக் காளி அடக்கிவிட்டார். இருப்பினும் நீதிபதி சர்க்காரியா ஆணையம் மிகச் சிறந்த முறையில் நடுவண்-மாநில அரசுகளின் உறவுகளை ஆய்ந்து பல பயனுள்ள பரிந்துதுரைகளை 1983இல் வழங்கியது.

வாஜ்பாய் பிரதமராக இருந்த போது நீதிபதி வெங்கடச்சலய்யா தலைமையில் அமைக்கப்பட்ட அரசமைப்புச் சட்ட மறு ஆய்வு ஆணையம் (2000) மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்களை அளித்து நடுவண் அரசில் அதிகாரக் குவிப்பைத் தடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தது. பின்னர் மன்மோகன் சிங் தலைமையில் அமைந்த காங்கிரசுக் கூட்டணி அரசு 2007இல் நீதிபதி புஞ்சி தமையில் ஒரு ஆணையத்தை அமைத்தது. இவ்வாணையம் 2010இல் தனது பரிந்து ரைகளை அளித்தது. இருப்பினும் பொருளாதார நிதியியல் சீரமைப்பிற்காக வளர்ந்து வருகிற கடன் சுமைகளையும் கடன் தொல்லைகளையும் குறைப்பதற் கான பல குழுக்களின் பரிந்துரைகளை நடுவண் அரசு கண்டு கொள்ளவே இல்லை. மாறாக திட்டக்குழுவை பிரதமர் மோடி 2014இல் கலைத்தார். 20 விழுக்காடு

அளவிற்கு மாநிலங்களுக்குக் கிடைத்து வந்த மானியமும் கேள்விக்குறியானது. மேலும் நடுவண் அரசின் துறைகளின் வழியாக மாநில அரசுகளுக்கு அளிக்கப் பட்டு வரும் நிதியுதவியும் குறைக்கப்பட்டு வருகிறது.

அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ்த் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பெற்ற நிதியும் குறைக்கப் பட்டுள்ளது. கல்வி மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு நெருக்கடி நிலைக் காலத்தில் மாற்றப்பட்டது. ஆனால் நடுவண் அரசு உயர்கல்வியில் வெளிநாட்டு நிதி முதலீடுகளைப் பெறுவோம் என்று அறிவிப்பது கல்வி வளர்ச்சியில் முன்னிலையில் உள்ள மாநிலங்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக கல்வி பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு அளிக்கவேண்டிய ஏறக்குறைய 1500 கோடி ரூபாயை உடனடியாக அளிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் கடிதம் அனுப்பியுள்ளார். மாநில அரசு நடுவண் அரசின் போக்கால் சந்திக்கும் நிதி இடர்களுக்கு இது ஒரு சான்றாகும்.

இச்சூழ்நிலையில் மாநில அரசுகள் கடனைச் சந்தையில் பெற முடியாத ஒரு நிலையும் உள்ளது. காரணம் 12ஆவது நிதிக்குழுத் தனது பரிந்துரையில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் (Gross State Domestic Product) 3 விழுக்காட்டிற்குள்தான் கடன் பெற வேண்டும். மீறினால் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி நடுவண் அரசின் நிதிப்பகிர்வைப் பெற முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. எனவேதான் மாநில அரசுகளில் கடன் அளவீடு 3 விழுக்காட்டிற்குள்தான் உள்ளது. ஆனால் நடுவண் அரசு நிதியியல் பொறுப்புரிமை வரவுசெலவு மேலாண்மைச் சட்டத்தை (Fiscal Responsibility Budget Management Act) 2003இல் முதன் முதலில் கொண்டு வந்தது. 2004இல் நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரம் தனது முதல் நிதிநிலை அறிக்கையிலேயே இச்சட்டத்திலிருந்து விதிவிலக்குக் கோரினார். நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியில் 5 முதல் 6 விழுக்காட்டிற்கு நிதிப் பற்றாக் குறை (Fiscal Deficit) தொடர்ந்து இருந்து வருகிறது.

பின்பு நடுவண் அரசு 2007 2012 ஆண்டுகளில் இச்சட்டத்தில் பல திருத்தங்களைக் கொண்டு வந்து நீதியாகவும் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நிதியில் மேலாண்மை செய்யப்பட வேண்டும் என அறிவித்தது. ஆனால் 2014-15இல் 5.98 விழுக்காடு நிதிப் பற்றாக்குறை உள்ளது.

**இன்றைக்கு நடுவண் அரசிற்கு 32 இலட்சத்து 11 ஆயிரத்து 850 கோடி அளவிற்கு வெளிநாட்டுக் கடன் மட்டும் உள்ளது. இதில் 40 விழுக்காட்டிற்கு மேல் வணிகக் கடன் ஆகும். இக்கடனால்தான் இந்தியா மற்ற நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய வட்டி தொகையும் அதிகரித்த வண்ணம் உள்ளது. நடுவண் அரசு ஏழைகள் தொடர்பாகச் சமூக நலத்திட்டங்களுக்கான நிதியைத் தொடர்ந்து குறைத்துவரும் நிலையில் 2014-15 ஆண்டில் 5 இலட்சத்து 90ஆயிரம் கோடி வரிச்சலுகைகளைப் பெருமுதலாளி நிறுவனங்களுக்கு வாரி வழங்கியுள்ளது. 2005-06 முதல் 2014-15 வரையிலான 10 ஆண்டுகளில் இந்த வரிச்சலுகையின் தொகை அளவானது ரூபாய் 42 இலட்சத்து 57ஆயிரம் கோடியாகக் கடந்துள்ளது.** மேற்கூறிய நடுவண் அரசின் புள்ளிவிவரங்களே அதிகரித்துவரும் வெளிநாட்டுக் கடனிற்கும் நிதிப்பற்றாக் குறைக்கும் நடுவண் அரசே பொறுப்பு என்பதையும் அதற்கு மாநில அரசுகள் பொறுப்பல்ல என்பதையும் நன்கு உணர்த்தும்.

## சென்னைப் பல்கலைக்கழகத்தில் ‘சிந்தனைச் சிற்பி’ தோழர் ம. சிங்காரவேலர் அறக்கட்டளைச் சொற்பொழிவு

18.2.2016 வியாழன் பிற்பகல் 3 மணியளவில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையும், சிங்காரவேலர் சிந்தனைக் கழக அறக் கட்டளையும் இணைந்து, சென்னை மெரினா திரு வள்ளுவர் சிலை எதிரில் அமைந்துள்ள பல்கலைக் கழக வளாகத்தில் சிங்காரவேலரின் 157ஆம் ஆண்டு பிறந்தநாளைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தன. இந்நிகழ்விற்குப் பேராசிரியர் உமாபதி தலைமை யேற்றார். சிங்காரவேலர் சிந்தனைக் கழக அறக் கட்டளை அறங்காவலர் புலவர் பா. வீரமணி வர வேற்புரையாற்றினார். ‘சிங்காரவேலரின் சமூக-பொருளாதாரச் சிந்தனைகள்’ என்ற தலைப்பில் தமிழகத் திட்டக்குழுவின் மேனாள் தலைவர் பேரா சிரியர் முனைவர் மு. நாகநாதன் அவர்கள் அரிய தோர் ஆய்வுரை நிகழ்த்தினார். இந்நிகழ்விற்கு முன்பாகக் ‘கவிக்குரல்’, ‘புதிய உலகு’ வாழ்வியல் மாத இதழ் பற்றிய திறனாய்வுப் பொழிவு போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. நிகழ்வில் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், தோழர் வே.ஆனைமுத்து, தமிழேந்தி, பாவலர் மறைமலையான் உள்ளிட் டோரும் ஏராளமான பேராசிரியப் பெருமக்களும் ஆய்வு மாணவர்களும் பங்கேற்றனர். நிறைவாக அறக்கட்டளை அறங்காவலர் வீ. கலியபெருமாள் நன்றி உரைத்தார்.

# கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய் பதிப்பு – தமிழரின் உரிமைக்குக் குழிபறிப்பு

- க. முகிலன்

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான - முன்னேற்றத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்தும் போது சிலருக்குப் பாதிப்பு ஏற்படுவது தவிர்க்க இயலாததாகும்; பாதிக்கப்படுவோர் நாட்டின் நலன்கருதி இதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆட்சியாளர்கள் கூறுவது வழக்கமாகிவிட்டது. ஆனால் ஆட்சியாளர்களின் இக்கூற்று, இந்தியப் பெருமுதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் நாட்டின் நிலம், கனிம வளம், நீர் முதலான ஆதார வளங்களைக் கொள்ளையடிப்பதற்கான ஒரு மூடுதிரையாக - மக்களை ஏய்ப்பதற்கானதாகவே பயன்படுத்தப்படுகிறது.

தனியார் மயம், தாராள மயம், உலக மயம் என்பவை 1991இல் இந்திய அரசின் கொள்கையாக அறிவிக்கப்பட்டபின், உயர்நீதித்துறையும் மக்களின் உரிமைக்கான - வாழ்வாதாரத்திற்கான கோரிக்கைகளை - போராட்டங்களை ஒடுக்குவதில் அரசுகளையும் விஞ்சிய வகையில் கேடான தீர்ப்புகளை வழங்கி வருகிறது.

இத்தன்மையில் உச்சநீதிமன்றம், 'கெயில்' எனப்படும் இந்திய எரிவாயு ஆணையம் (Gas Authority of India Limited - GAIL) தமிழகத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், கிருட்டிணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களில் எரிவாயுக் குழாய்களைப் பதிக்கும் திட்டத்தைத் தடையின்றிச் செயல்படுத்தலாம் என்று 2.2.2016 அன்று, தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி டி.எஸ். தாக்கூர், நீதிபதி ஏ.கே. சிக்ரி, ஆர். பானுமதி ஆகியோரைக் கொண்ட அமர்வு அறிவித்தது.

இந்திய எரிவாயு ஆணையம் (கெயில்) 2003 அக்டோபர் 22 அன்று நடுவண்அரசின் பெட்ரோலியத் துறையின் அறிவிக்கை வாயிலாகக் கொச்சியிலிருந்து மங்களூருக்கும், கொச்சியிலிருந்து தமிழ்நாட்டின் ஏழு மாவட்டங்களின் வழியாக பெங்களூருக்கும் நீர்ம எரிவாயுவை நிலத்தடியில் குழாய்கள் மூலம் கொண்டு செல்லும் திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்தின்படி, மொத்தம் 871 கி.மீ. தொலைவிற்குக் குழாய்கள் பதிக்கப்படும். கேரளத்தில் 510 கி.மீ., தமிழ்நாட்டில் 310 கி.மீ., கர்நாடகத்தில் 60 கி.மீ. தொலைவுக்குக் குழாய்கள் பதிக்கப்படும்.

24 அங்குலம் கொண்ட குழாய்கள் நிலத்தில் 5 அடி ஆழத்தில் புதைக்கப்படும். குழாய்களைப் புதைப்பதற்காகக் குழாய் புதைக்கப்படும் இடத்தின் இருபுறமும் 10 மீட்டர் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையை (Right of Use - ROU) கெயில் நிறுவனம் எடுத்துக் கொள்ளும். குழாய்களைப் புதைப்பதற்கான இந்த 20 மீட்டர் அகலம் கொண்ட நிலத்தில் இருந்த மரங்களை கெயில் நிறுவனம் வெட்டத் தொடங்கியது; பம்புசெட்டுகளை இடித்தது; பண்ணை வீடுகளைத் தரைமட்டமாக்கியது; கிணறுகளைத் தூர்த்து மூடியது. எனவே உழவர்கள் கெயில் நிறுவனம் குழாய்களைப் பதிக்கும் திட்டத்தை எதிர்த்துக் கடந்த நான்கு ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். இந்த ஏழு மாவட்டங்களில் பாதிக்கப்படும் உழவர்கள் ஒன்றுகூடிப் பேசி, 2012 சூன் 12 அன்று கெயில் திட்டத்தை எதிர்ப்பதற்காக, 'உழவர்கள் வாழ்வாதாரப் பாதுகாப்புக் குழு' என்பதை அமைத்தனர். போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர்.

உழவர்கள் சில இடங்களில் கெயில் நிறுவனத்தின் குழாய்களை உடைத்தும், இயந்திரங்களைச் சேதப்படுத்தியும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். எனவே கெயில் நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் "குழாய்களைப் புதைக்கவும், இயந்திரங்களைக் காக்கவும் காவல்துறையினர் பாதுகாப்பு அளித்திட தமிழ்நாட்டு அரசை அறிவுறுத்த வேண்டும்" என்று கோரி வழக்குத் தொடுத்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கே.சந்துரு, 2012 சூலை 26 அன்று இந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார். நீதிபதி கே.சந்துரு அளித்த தீர்ப்பில், "கெயில் நிறுவனம் தன் பொருள்களைச் சேதப்படுத்தியவர் யார் என்ற பட்டியலைத் தரவில்லை. தங்கள் நிலம் கையகப்படுத்தப்படும்போது, உழவர்கள் தங்கள் எதிர்ப்பை, சனநாயக முறையில் தெரிவிப்பார்கள் என்பது இயல்பான ஒன்றேயாகும். இதில் நீதிமன்றம் தலையிட முடியாது" என்று கருத்துரைத்திருந்தார்.

கெயில் நிறுவனம், நீதிபதி கே. சந்துரு வழக்கைத் தள்ளுபடி செய்தது குறித்துச் சென்னை உயர்நீதிமன்றத்தின் முதலாவது அமர்விடம் மேல்முறையீடு செய்தது. தலைமை நீதிபதி எம்.ஒய். இக்பால், நீதிபதி டி.எஸ். சிவஞானம் ஆகியோரைக் கொண்ட அமர்வு இதுகுறித்து 2012 அக்டோபர் 4 அன்று தீர்ப்பளித்தது. அதில், "தலைமைச் செயலாளர் கெயில் நிறுவனத்தால் குழாய்ப் பதிக்கப்பட உள்ள ஏழு மாவட்ட ஆட்சியாளர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும், ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதற்குமுன் மேற்கொள்ளப்படும், பொதுமக்கள் கருத்தறிதல் போன்ற நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அதன்பின் தமிழக அரசு இதுபற்றி முடிவெடுக்க வேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது. கண்




துடைப்பான தன்மையில் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்தறிதல் கூட்டங்கள் சில நடந்தன.

ஆனால் செயலலிதா தலைமையிலான தமிழ்நாட்டு அரசோ, தலைமைச் செயலாளர் சாரங்கி மூலம் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள், கெயில் நிறுவனம் குழாய்கள் பதிக்கும் பணிக்கு முழுமையான பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கூறியது. 2012 திசம்பர் 5 அன்று தலைமைச் செயலாளர் நடத்திய மாவட்ட ஆட்சியர் கூட்ட நடவடிக்கைக் குறிப்பில், ‘‘இந்தக் கட்டத்தில் குழாய்களை வேறு பாதையில் கொண்டு செல்வது என்பது இயலாத ஒன்றாகும். இத்திட்டத்தை எதிர்க்கும் உழவர்களிடம் மாவட்ட ஆட்சியாளர்கள் சட்டம் தன் கடமையைச் செய்யும் என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிவித்திட வேண்டும்’’ என்று எழுதப் பட்டுள்ளது.

பெட்ரோலியப் பொருள்களைக் கொண்டு செல்வ தற்காக நிலம் கையகப்படுத்துவதை எதிர்க்கும் உழவர் களை அச்சுறுத்தும் வகையில், 2011 திசம்பர் 19, 27 மற்றும் 2012 சனவரி 4, மார்ச்சு 7, ஏப்பிரல் 20 ஆகிய நாள்களில் மன்மோகன் சிங் தலைமையிலான நடுவண் அரசு, கடுமையான புதிய விதிகளை 1962ஆம் ஆண்டின் சட்டத்தில் சேர்த்தது. புதியதாகச் சேர்க்கப் பட்ட விதி 15(2)இன்படி, எவரொருவர் வேண்டு மென்றே குழாயில் செல்லும் பெட்ரோலியப் பொருள் களை எடுத்தாலோ அல்லது குழாய்களைச் சேதப் படுத்தினாலோ பத்து ஆண்டுகள் கடும் சிறைத் தண்ட னையும் அபராதமும் விதிக்கப்படும்.

அடுத்து, புதியதாக இணைக்கப்பட்ட விதி 16(அ) வின்படி, குழாயிலிருந்து எடுக்கப்பட்டதாகக் கருதப்படும் பெட்ரோலியமோ, கருவிகளோ, வாகனமோ ஒருவரிட மிருந்து கைப்பற்றப்பட்டால், அதைத் திருடவில்லை என்று மெய்ப்பிக்க வேண்டியது குற்றம் சாட்டப்பட்ட வரின் பொறுப்பாகும். எனவே இந்த விதியின்படி, ஒரு உழவர் தன் நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள குழாயைப் பாதுகாக்க வேண்டிய காவலர் என்ற கொடிய நிலைக் குத் தள்ளப்படுகிறார்.

புதியதாகச் சேர்க்கப்பட்ட விதிகளின் கொடுமை யால் மேலும் சினமுற்ற உழவர்கள், கெயில் திட்ட எதிர்ப்புப் போராட்டத்தை 2013இல் முடுக்கிவிட்டனர். உழவர்களின் போராட்டம் சட்டமன்றத்தில் எதிரொலித் தது. இதன்விளைவாக முதலமைச்சர் செயலலிதா 2013 ஏப்பிரல் 2 அன்று, ‘‘கெயில் நிறுவனம் குழாய் பதிக்கும் பணியை உடனடியாக நிறுத்த வேண்டும்; தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியவாறு குழாய் பதிக்கும் மாற்றுத் திட்டத்திற்கு வழிகாண வேண்டும்’’ என்று மடல் எழுதினார்.

கெயில் நிறுவனம், தமிழக அரசின் தடை ஆணையை எதிர்த்துச் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. 2013 நவம்பர் 25 அன்று தலைமை நீதிபதி ஆர்.கே. அகர்வால், நீதிபதி எம். சத்தியநாராய ணன் ஆகியோரைக் கொண்ட அமர்வு, ‘நாட்டின் பொது நலனைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசின் தடை ஆணை செல்லாது’ என்று தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்துத் தமிழக அரசு உச்சநீதி மன்றத் தில் முறையீடு செய்தது.

இதன்மீது உச்சநீதிமன்றம், 2.2.2016 அன்று அளித்த தீர்ப்பில்தான் தமிழக அரசு கெயில் நிறுவனத் துக்கு விதித்த தடை ஆணை செல்லாது என்று கூறிவிட்டது. தமிழகச் சட்டப்பேரவைக்கு விரைவில்

பொதுத் தேர்தல் நடைபெற இருப்பதால், எல்லா அரசியல் கட்சிகளும் வரிந்து கட்டிக்கொண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்பைக் கண்டனம் செய்தன. தே.மு.தி.க. தலைவர் விசயகாந்த் 6-2-16 அன்று உச்சநீதிமன்றத்தில் சீராய்வு விண்ணப்பம் அளித்தார். தமிழ்நாட்டு அரசின் சார்பில் 8-2-16 அன்று சீராய்வு விண்ணப்பம் அளிக்கப் பட்டது. இச்சீராய்வு விண்ணப்பத்தில் தமிழக அரசு, “ஏழு மாவட்டங்களில் கெயில் நிறுவனம் குழாய் பதிப்பதால் பல ஆயிரம் உழவர்கள் தங்கள் நிலத்தில் பயிரிட முடியாத நிலை ஏற்படும்; அவர்களின் கட்ட டங்கள் இடிக்கப்படும்; 1,20,000 பழ மரங்கள் வெட்டப் படும்; எனவே தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள நிலப்பகுதியின் வழியாகக் குழாய்களை அமைக்க வேண்டும்” என்று கோரியுள்ளது.

**குழாய் பதிக்கப் பெறும் இடத்திலிருந்து இருபது மீட்டர் பரப்பில் உள்ள நிலத்தின் பட்டா பெயரளவில் மட்டுமே உழவரின் பெயரில் இருக்கும். ஆனால் அதன் பயன்பாட்டு உரிமை கெயில் நிறுவனத்திடம் இருக்கும். கரும்பு, வாழை, மரவள்ளி முதலான பயிர்களைப் பயிரிடக் கூடாது.** கோழிப் பண்ணை அமைக்க முடியாது. வங்கிகள் கடன்தரமாட்டா. இந்த 20 மீட்டர் நிலத்தின்மீது வாய்க்கால் மூலம் நீரைக் கொண்டு செல்ல முடியாது. இந்த நிலத்தை வாங்க எவரும் முன்வரமாட்டார்கள். இவ்வாறு உழவர்களின் உரிமைகளை முடக்கும் பல நிபந்தனைகள் விதிக்கப் பட்டு, இந்த நிலத்தின் மீதான பயன்பாட்டு உரிமை 99 ஆண்டுகளுக்கு, கெயில் நிறுவனத்திடம் இருக்கும். விளை நிலங்களில் குழாய்கள் பதிக்கப்படுவதால் உழவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழப்பதுடன், அவர்களின் வழித்தோன்றல்களும் பலவகையான துன்பங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் இலக்கா வார்கள்.

பல மாநிலங்களில் நெடுஞ்சாலை வழியாகத்தான் எரிவாயுக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டுகள் சில : மராட்டியத்தில் மஜிம்-தாசிர் எரிவாயுத் திட்டத்தை மகாநகர் கேஸ் நிறுவனம், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே நெடுஞ்சாலை வழியாகவும், குசராத்தில் ஆமதாபாத்-பகோதரா் மற்றும் காந்திநகர்-சார்கட்ஜ் எரிவாயுத் திட்டத்தை, அதானி கேஸ் நிறுவனம் நெடுஞ்சாலை வழியாகவும், உத்தரப்பிரதே சத்தில் இந்தியன் ஆயில் நிறுவனம் பரோனி - கான்பூர் நெடுஞ்சாலை வழியாகவும், குசராத் மாநிலத் தில் ஓ.என்.ஜி.சி., ஐ.ஓ.சி.எல்., இந்தியன் ஆயில், ஜி.எஸ்.பி.சி. போன்ற நிறுவனங்கள் 500 கிலோ மீட்டர் தொலைவுக்கு ஆமதாபாத் - வதோதரா நெடுஞ்சாலையில் குழாய் பதித்தும் தான் எரிவாயுவை எடுத்துச் செல்கின்றன.

தமிழ்நாட்டுக்கு மட்டும் இந்த உரிமை மறுக்கப்படு வது ஏன்? நடுவண் அரசும் உச்சநீதிமன்றமும் தமிழ்-தமிழர்-தமிழ்நாடு உரிமைக்காப்பு என்பவற்றில் தமிழர் நலனுக்கு எதிராகவே செயல்படுகின்றன. ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் கொடிய முறை யில் ஒடுக்கப்பட்டதற்கும் தில்லி ஆட்சிபீடம் கொண் டுள்ள தமிழர் பகை உணர்ச்சியே முதன்மையான காரணமாகும். கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பு, சேதுக் கால்வாய்த் திட்டம், காவிரிச் சிக்கல், முல்லைப் பெரியாறு அணை போன்ற எல்லாவற்றிலும் தமிழர் நலனுக்கு எதிராகவே நடுவண் அரசு செயல்படுகிறது. இதற்கு உச்சநீதிமன்றமும் ஒத்து ஊதுகிறது. தமிழ் நாட்டில் தி.மு.க., அ.தி.மு.க. எனும் இரண்டு பெரிய திராவிட அரசியல் கட்சிகள் தமிழர் நலனைப் புறக் கணித்துவிட்டுத் தமக்கிடையே நடத்தும் பங்காளிச் சண்டையும், ஆட்சி அதிகாரத்திலிருந்து கொண்டு கொள்ளையடிப்பதற்காக நடுவண் ஆட்சியாளர்களை நத்திப்பிழைப்பதும் தமிழரின் உரிமைப் பறிப்புகளுக்கு மற்றொரு காரணமாகும்.

2-2-2016 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பில் உச்சநீதி மன்றம், “2006ஆம் ஆண்டின் இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலியம் ஒழுங்காற்றுச் சட்டப்படி தமிழ் நாட்டில் உள்ள நிலத்தின்மீது தமிழ்நாட்டு அரசுக்கு உரிமை இல்லை; கெயில் நிறுவனத்தின் நிலப் பயன் பாட்டு உரிமையில் தலையிட தமிழ்நாட்டு அரசுக்கு அதிகாரம் இல்லை” என்று கூறியிருக்கிறது. இது 7.5 கோடி தமிழர்களின் சுயமரியாதைக்கு விடுத்துள்ள அறைகூவல் அல்லவா?

காவிரிப் படுகையில் 667 சதுர கிலோ மீட்டர் பரப்பள வில் மன்னார்குடி பகுதியில் மீதேன் எரிவாயுவை எடுப்பதற்காக, ‘கீழை ஆற்றல் பெரு நிறுவனம்’ - ‘கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேசன் லிமிடெட்’ (GEECL) என்ற தனியார் நிறுவனத்துக்கு 2010 சூலை 29 அன்று இந்திய அரசு உரிமம் வழங்கியது.

தி.மு.க. ஆட்சி 2011 சனவரி 4 அன்று அத்தனி யார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. இம்மீத்தேன் திட்டத்திற்கு எதிராகக் காவிரிப் பாசனப் பகுதிகளில் மட்டுமின்றி, தமிழகம் முழுவதும் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போராட்டங் களின் விளைவாக 2015 மார்ச்சு மாதம் 11 அன்று நடுவண் அரசால் இத்திட்டம் கைவிடப்பட்டதாக நாடாளு மன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

எனவே மீத்தேன் திட்ட எதிர்ப்பைவிட இன்னும் போர்க்குணத்துடன் கெயில் எரிவாயுக் குழாய் பதிக்கும் திட்டத்தைத் தமிழர்கள் ஒன்றுதிரண்டு எதிர்த்துப் போராட வேண்டும். மக்கள் திரள் போராட்டங்களை வீறுடன் நடத்துவதன் மூலமே தமிழர்கள் தங்கள் மொழி, நிலம், பண்பாடு, பொருளியல், அரசியல் சார்ந்த உரிமைகளை மீட்டெடுக்க முடியும். தமிழர்க் கான உண்மையான தன்னுரிமை ஆட்சியை நிறுவ முடியும்.

# சட்டம் செய்ய வேண்டிய திருடர்களுக்கு...

இந்தியாவில் குடிஅரசு ஆட்சி முறை இருக்கிறது.

மேலோட்டமாக, இது, பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறை ஆட்சி என்று கருதப்படுகிறது.

பிரிட்டனில் நாடாளுமன்றம் இருக்கிறது; பிரதமர் இருக்கிறார். நாடாளுமன்றத்துக்கும் பிரதமருக்கும் கட்டுப்பட்ட அரசன் அல்லது அரசியும் இருக்கிறார்.

இந்தியாவில் நாடாளுமன்றம் இருக்கிறது; பிரதமர் இருக்கிறார்; இவர்களுக்குக் கட்டுப்பட்ட குடிஅரசுத் தலைவர் இருக்கிறார்.

இந்திய நிர்வாகத் துறை இருக்கிறது. இதுவும் நாடாளுமன்றத்துக்கும் பிரதமருக்கும் கட்டுப்பட்டது.

ஆனால், இந்திய உயர்நீதித்துறை, இந்த பிரிட்டிஷ் சட்டமுறைப்படி இல்லை.

இந்திய உயர்நீதித்துறை குடிஅரசுத் தலைவர், நாடாளுமன்றம், சட்டமன்றம், நிர்வாகத் துறை முதலான எல்லாவற்றையும் விமர்சிக்கலாம்; கண்டனம் செய்ய லாம்; நாடாளுமன்றமும் சட்டமன்றங்களும் இயற்றும் சட்டங்களைச் செல்லக் கூடியவை என்று சொல்லலாம்; செல்லாதவை என்றும் சொல்லலாம்.

அரசியல் சட்டம் என்று ஒன்று இருந்தாலும், “இந்தச் சட்ட வாசகத்திற்கு இதுதான் பொருள்” என்று அடித்தும் இடித்தும் இறுதி முடிவைக் கூறும் அதிகாரம் இங்கு உச்சநீதிமன்றத்திற்கு மட்டுமே உண்டு.

11.11.1994இல், தில்லி உச்சநீதிமன்றம், கர்நாடக மாநில இடஒதுக்கீடு மசோதா பற்றிய வழக்கில் ஒரு தீர்ப்பை அளித்தது.

“உச்சநீதிமன்றத்தின் ஆணையைச் செயலிழக்கச் செய்வதை நாங்கள் சும்மா வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.”

“சட்டம் இன்னதுதான் என இந்த மன்றம் வரை யறை செய்துவிட்டது. அதை எல்லோரும் சரிவரப் பின்பற்ற வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.”

என, மேலேகண்ட தீர்ப்பில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் குல்திப் சிங், பி.எல். ஹன்சாரியா இருவரும் அடித்துக் கூறி எச்சரிக்கை செய்துள்ளனர்.

**கர்நாடக மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோர் என்கிற பிரிவினருக்கு மட்டும் 55 விழுக்காடு தனி இடஒதுக் கீடு தந்து, மொத்த இடஒதுக்கீட்டை 73 விழுக்காடு என உயர்த்தி, அரசு ஒரு தனி மசோதாவை அண் மையில் நிறைவேற்றியது.**

**தமிழ்நாடு அரசு 69 விழுக்காடு இடஒதுக்கீட்டைக் காத்திட வேண்டித் தனி மசோதாவை நிறைவேற்றி, அது நாடாளுமன்றத்தில் ஏகமனதாகச் சட்டமாக ஏற்கப்பட்டதைப் போல, கர்நாடக மசோதாவும் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுச் சட்டமாக ஏற்கப்படும் என நம்பி, கர்நாடக அரசு 73 விழுக்காடு இடஒதுக் கீடு மசோதாவை நிறைவேற்றியது.**

**ஆனால், கர்நாடக அரசு நிறைவேற்றிய இடஒதுக் கீடு மசோதா செல்லாது என, 11.11.94இல், உச்சநீதி மன்றம் அடித்துக் கூறிவிட்டது.**

**“தமிழ்நாடு அரசின் இடஒதுக்கீட்டுப் பாதுகாப்புத் தனிச்சட்டம் செல்லாது” என்று உச்சநீதிமன்றம் விரை வில் தீர்ப்புக் கூறப்போவதற்கு, இது ஒரு முன் னறிவிப்பு. ஏன்?**

பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்கு டியினர் ஆகிய மூன்று பிரிவினருக்கும் கல்வியிலும், வேலையிலும் மொத்தமாகவோ தனித்தனியாகவோ எத்தனை விழுக்காடு ஒதுக்கீடு தர வேண்டும் என்று சட்ட விதி 15(4) அல்லது விதி 16(4)இல் இல்லை.

எத்தனை விழுக்காடு தரவேண்டும் என்று முதன் முதலில் உச்சநீதிமன்றம் கருத்துக் கூறியதே, 1963இல் தான்!

**அரசியல் சட்ட விதியிலுள்ள எந்தச் சொல்லாட் சியை வைத்து உச்சநீதிமன்றம் அப்படிக் கூறியது?**

சட்டத்தின் ஒரு சொல்லாட்சியிலும் அந்த விழுக்காடு அளவு பற்றிக் கூறப்படவே இல்லை.

தங்கள் கருத்துக்கு ஒத்துப் போகிற மாதிரியில், அரசியல் சட்ட வரைவுக் குழுவின் தலைவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் நாடாளுமன்றத்தில் 1949இல் பேசியுள்ளதில் ஒரேயொரு சொற்றொடரை மட்டுமே 1963இல் உச்சநீதிமன்றம் ஆதரமாகக் காட்டியது.

**ஆனால், அதே உச்சநீதிமன்றம், [நீதிபதி ஃபசல் அலி] 1976இல் - அதே சட்ட விதிகளுக்கு வேறுவித மாக விளக்கம் தந்தது.**

“ஒரு மாநிலத்தில் சமுதாயத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்டோர் 80 விழுக்காடு இருப்பார்களா னால்-அவர்களுக்கு 80 விழுக்காடு இடஒதுக்கீடு தருவது விதி 16(4)க்குப் பொருந்தாது என்று கூறமுடியுமா? (முடியாது)” என்று ஒரு வினாவை எழுப்பி, விடையும் கூறி, உண்மையை விளங்க வைத்து, அத்துடன் நிறுத்தியது.

அதாவது, “பிற்படுத்தப்பட்டோருக்கு விகிதாசார இடஒதுக்கீடு தருவது அரசியல் சட்டப்படி செல்லுபடி யாகும்” என உச்சநீதிமன்றம் கருத்துக் கூறியது.

இது சிறுபான்மை எண்ணிக்கை நீதிபதியின் கருத்து.

ஆனால், மண்டல் பரிந்துரை வழக்கில், 16.11.1992 இல் இறுதியாகத் தீர்ப்புக் கூறிய உச்சநீதிமன்றம், "மொத்த இடஒதுக்கீடு 50 விழுக்காட்டுக்குள்தான் இருக்க வேண்டும்" என்று திட்டமாகக் கூறிவிட்டது. அப்போதும் அம்பேத்கருடைய பழைய பேச்சை மட்டுமே ஆதாரமாகக் கூறியது.

"தீர்ப்பில் இப்படிக் கூறப்பட்டிருந்தாலும், எட்டாப் பட்டியாக (remote) உள்ள பிரதேசங்கள் போன்றவற்றில் 50 விழுக்காட்டுக்குமேல் இடஒதுக்கீடு இருக்கலாம்" என்றும் 16.11.1992 தீர்ப்பிலேயே கூறப்பட்டுள்ளது.

**இது, தமிழகத்தின் தனிப்பட்ட நிலைமையையும், கர்நாடகத்து நிலைமையையும் மனத்தில் (Mind) கொண்டு கூறப்பட்டது அன்று.**

**இது மேகாலயாவை மட்டும் மனத்தில் கொண்டு, அரசியல் காரணங்களுக்காக, 16.11.1992இல், உச்சநீதிமன்றத்தால் கூறப்பட்டது.**

மேகாலயாவில் பழங்குடியினர் 95 விழுக்காட்டு பேர். இவர்களுக்கு 1987 முதல் 90 விழுக்காடு இடஒதுக்கீடு தரப்படுகிறது. இதை மனத்தில் கொண்டே உச்சநீதிமன்றம், ஒரு விதிவிலக்கான இக்கருத்தையும் கூறியது.

இதன் வலிமையை மட்டுமே கொண்டு, தமிழகத்தில் உள்ள 69 விழுக்காடு இடஒதுக்கீட்டைக் காப்பாற்றிடத் தமிழக அரசு செய்த தனிச்சட்டம் உறுதியாகச் செல்லுபடியாகாது.

இதைத் தமிழக அரசும், தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழக அரசியல் கட்சித் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அனைத்திந்தியக் கட்சிகளின் தலைவர்களும், திராவிடர் கழகத்தினரும், வழக்குரைஞர்களும், முன்னாள் நீதிபதிகளும் புரிந்திருக்க வேண்டும்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் மேல்சாதி - மேல் வர்க்க நலன் காக்கும் திருடர்கள் என்பதால், அவர்கள் "சட்டம் செய்யும் அதிகாரத்தையே" தங்கள் கையில் எடுத்துக் கொண்டார்கள். மேல்சாதி நலம் நாடும் இத்திருடர்களின் இந்தச் சூது நமக்குப் புரிகிறது.

ஆனால், பெரியார் பெயரால், அம்பேத்கர் பெயரால், லோகியா பெயரால், கட்சி-கொள்கை, சட்ட அறிவு என்பவற்றின் பெயரால் தமிழக இடஒதுக்கீடு பாதுகாப்புச் சட்டத்தை வரைவு செய்தவர்களுக்கும், அதை ஆதரித்தவர்களுக்கும், நிறைவேற்றியவர்களுக்கும் இது ஏன் புரியவில்லை?

இது புரிந்தாலும், "பிற்படுத்தப்பட்டோரின் ஒரே காவலர்" என்கிற பெயரும் புகழும் தத்தமக்கு வர வேண்டும் என்று கருதிய அயோக்கியத்தனத்தாலும், கூர்த்த சட்ட அறிவின்மையாலுமே இது இவர்களுக்குச் சரிவரப் புரியவில்லை.

**அரசியல் சட்ட விதிகள் 15(4), 16(4), 338(10) இவற்றில், "பிற்படுத்தப்பட்டோருக்கு விகிதாசார இட ஒதுக்கீடு உண்டு" என்கிற சொற்றொடர் இடம்பெறுகிற தன்மையில் அரசியல் சட்டம் திருத்தப்படுவது மட்டுமே இதற்கு ஒரே தீர்வாகும்.**

இப்படிப்பட்ட ஒரு திருத்தம் செய்யப்பட்ட பின்னரும் கூட, இந்திய உச்சநீதிமன்றம் இதில் தலையிட இடம் உண்டு.

இந்திய உச்சநீதிமன்றம் பிரிட்டிஷ் நீதிமன்ற முறையில் அமைந்தது அன்று. அதற்கு மாறாக, அமெரிக்க நாட்டு உச்சநீதிமன்ற முறையில் அமைந்தது. ஆதியில் 1948-1950இல் அரசியல் சட்டத்தை உருவாக்கிய மேதைகள் (!) வேண்டுமென்றே - முற்போக்குக்கு முட்டுக்கட்டை போடுவதற்கென்றே எல்லாச் சட்ட அதிகாரமும் கொண்டதாக உச்சநீதிமன்றத்தை உருவாக்கி விட்டனர்.

இத்தகைய இந்திய உச்சநீதிமன்றம், "சாதி அடிப்படையில் இப்படி இடஒதுக்கீடு செய்வது அரசியல் சட்ட அடிப்படை அமைப்புக்கு (Basic Structure) எதிரானது" என்று கூறித், தன் வர்க்க நலனைக் காக்கிற திருட்டுப் புத்தியையே மறுபடியும் காட்ட முடியும்.

இவ்வளவு சிக்கல்களையும் கணக்கில் எடுத்துக் கொண்ட ஒரே காரணத்தால்தான் தந்தை பெரியார் அவர்கள், "பார்ப்பனர், பார்ப்பனரல்லாத மேல் வகுப்பினர், பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதித் திராவிடர், இஸ்லாமியர், கிறித்துவர் - ஆங்கிலோ இந்தியர் என்கிற ஆறு வகுப்பினருக்கும் கல்வியில் இருந்த இடஒதுக்கீடு செல்லுகிற மாதிரி அரசியல் சட்டத்தைத் திருத்துக!" என, 3.12.1950இல் கோரிக்கை வைத்தது போன்று, "இந்தியாவில் உள்ள ஒன்பது பிரிவினர்க்கும் அவரவர் மக்கள் எண்ணிக்கை விகிதாசாரப்படி கல்வியிலும், வேலையிலும் இடஒதுக்கீடு தந்து, அரசியல் சட்டத்தைத் திருத்துக!" என்கிற தெளிவானதொரு கோரிக்கையை - இடஒதுக்கீட்டுச் சிக்கலுக்கான இறுதித் தீர்வாக, 25.9.1993இலேயே மா.பெ.பொ.க. மய்ய அரசிடம் முன்வைத்தது.

வாக்குவேட்டை அரசியல் பேசும் அயோக்கியர்களும், இடஒதுக்கீட்டுத் தத்துவத் தலைவர்களின் பெயரால் உலாவரும் அறிவிலிகளும் இன்னமும் ஒடுக்கப்பட்டோரை ஏமாற்றுகிற வழியைக் காட்டாமலும் பின்பற்றாமலும் திருந்துவார்களாக!

**- வே. ஆனைமுத்து**

(01.12.1994, "சிந்தனையாளன்")

# சுல்தானின் தாடியும் சாதிய ஒடுக்கலுக்கு எதிரான சட்டங்களும்

- இராமியா

ஹைதராபாத் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மாணவராக இருந்த ரோகித் வெமுலா என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவரை அப்பல்கலைக்கழக நிர்வாகிகளும் மற்ற உயர்சாதி மாணவர்களும் படிக்கவும், ஆராய்ச்சி செய்யவும் விடாமல் இடையூறுகள் செய்து வந்துள்ளனர். இதனால் தாங்க முடியாத மன உளைச்சல் அடைந்த அம்மாணவர் தற்கொலை செய்து கொண்டார்.

இந்நிகழ்வுக்குப் பின் நாடு முழுவதும் கல்வி நிறுவனங்களில் போராட்டங்கள் நடந்தன. பா.ஜ.க.வின் சாதிய ஒடுக்குமுறைகளைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் உரக்கக் குரல் கொடுக்கின்றன. புது தில்லியில் உள்ள நேரு பல்கலைக் கழகத்திலும் இந்நிகழ்வின் தொடர்ச்சி யாகப் போராட்டம் வெடித்தது. இப்போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பா.ஜ.க. அரசு தேசத் துரோகக் குற்றச்சாட்டைச் சுமத்தி உள்ளது.

பா.ஜ.க. அரசுக்கு எதிராகவும், நேரு பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவாகவும் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) மற்றும் பிற கட்சிகள் 23.2.2016 அன்று புது தில்லியில் ஒன்று திரண்டனர். இதில் கலந்து கொண்ட இராகுல் காந்தி, அர்விந்த் கெஜ்ரிவால், பிருந்தா காரத் ஆகியோர் கல்வி நிறுவனங் களில் சாதிய ஒடுக்குமுறைகளை ஒழிப்பதற்கு ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும் என்றும், அச்சட்டத்திற்குச் சாதிக் கொடுமைக்குப் பலியான ரோகித் வெமுலாவின் நினைவாக "ரோகித் சட்டம்" (Rohit Act) எனப் பெயரிடலாம் என்றும் கூறினர்.

சாதிக் கொடுமைகளுக்கு எதிராக என்றும், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் முன்னேற்றத்திற்காக என்றும் பல சட்டங்கள் உள்ளன. ஆனால் சாதிய ஒடுக்கல் குறைந்தபாடில்லை. அது மட்டுமா? சாதிய ஒடுக்கலை முன்னெடுக்கும் ஆதிக்கச் சாதியினர் இச்சட்டங்களினால் தண்டிக்கப்படவே இல்லை. இந்த இலட்சணத்தில் ரோகித் சட்டம் என்று ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வருவதால் மட்டும் என்ன பயன் விளைந்து விடப்போகிறது?

முல்லாவின் கதைகள் என்ற பெயரில் ஒரு கதை உண்டு. ஒரு நாட்டில் ஒரு சுல்தான் இருந்தானாம். அவன் தன்னைப் பார்த்துத் தன்னை வாழ்த்திப் புகழ்ந்து பாடும் புலவர்களுக்குப் பரிசளிக்கும் முறை விநோதமாக இருக்குமாம். ஒரு புலவர் தன் மீது பாடலைப் பாடிய பின் தன் இரு கைகளாலும் தன் தாடியைக் கோதுவாராம். அப்படிக் கோதும் போது அவருடைய கைகளில் எவ்வளவு மயிரிழைகள் வருகின்றனவோ அந்த எண்ணிக்கைக்கு ஏற்பப் பரிசு அளிப்பாராம். ஒரு முறை முல்லா அந்த சுல்தானைப் பாடிவிட்டுப் பரிசுக்காக நின்ற போது சுல்தான் தன் இரு கைகளாலும் தாடியைக் கோதினா ராம். ஆனால் ஒரு மயிரிழையும் வரவில்லையாம். சுல்தான் வருத்தத்துடன் முல்லாவிற்கு அதிர்ஷ்டம் இல்லை என்று கூறினாராம். உடனே முல்லா சுல்தான் தன் கைகளால் தன் தாடியைக் கோதுவதால் தான் தனக்கு அதிர்ஷ்டம் இல்லாமல் போய்விட்டது என்றும், தன்னுடைய கைகளால் சுல்தானின் தாடியைக் கோத விட்டு இருந்தால் தனக்குப் பெரும் அதிர்ஷ்டம் இருந்திருக்கும் என்றும் கூறினாராம்.

அது போல் இங்கும் சாதிய ஒடுக்கலில் ஈடுபடுகிற ஆதிக்கச் சாதியினர் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஆதிக்கச் சாதியினரிடமே இருப்பதால் சுல்தானின் தாடியில் இருந்து மயிரிழைகள் வரத் தயங்குவது போல மிக மிக மென்மையாகவே, பல சமயங்களில் முல்லா விற்காக ஒரு மயிரிழையும் வராமல் போனது போல நடவடிக்கையே எடுக்கப்படாமலேயே போய் விடுகிறது.

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே! சாதி / வகுப்புக் கலவரங் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களிடமே இருக்க வேண்டும் என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். இதைப் பற்றி விவாதம் நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்; பொதுக் கருத்தை உருவாக்குங்கள். இறுதியில் சட்டமாக வென்றெடுங்கள்.

அப்படிச் செய்தால்தான் சாதிய / வகுப்புக் கலவரங் களுக்கு முடிவு கட்ட முடியும். ரோகித் வெமுலா போன்ற ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் அறிவுத் திறன் வீணாகப் போகாமல் நாட்டு முன்னேற்றத்திற்குப் பயன் படும். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் திறமைகள் வெளி வராமல் பார்த்துக் கொள்வதன் மூலம் உயர் சாதிக் கும்பலில் உள்ள திறமை குறைவானவர்கள் உயர் நிலை வேலை களை ஆக்கிரமித்து நிர்வாகத்தைச் சீரழிப்பதால் நாட்டிற்கு ஏற்படும் அளவிலா இழப்புகள் தடுக்கப்படும்.

கட்டுரைத் தொடர்-37

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

**ஈ.வெ.ரா. அறிக்கை: பரீக்ஷை பார்க்க தொண்டர்களுக்கு வேண்டுகோள்.**

இதுவரை எந்தப் பத்திரிகைகளுக்கும், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சம்பந்தமாக நான் ஒரு அறிக்கையும் விடுக்க வில்லை.

ஆனால், இப்பொழுது இந்தி எதிர்ப்பு இயக்கத்தைக் குறித்து எனது அபிப்பிராயத்தை வெளியிட வேண்டும் என நான் கருதுகிறேன். அதோடு கனம் பிரதம மந்திரி தோழர் சி.ராஜகோபாலாச்சாரியார் இந்தி எதிர்ப்பாளர்களைக் குண்டர்கள் என்றும் குண்டர்கள் கிளர்ச்சி என்றும் கூறியிருப்பதற்கும் இச்சமயத்தில் பதில் எழுத வேண்டுமென்று கருதுகின்றேன்.

சென்ற வாரம் பொப்பிலி ராஜா சாஹிப் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைக் குறித்து ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அது மிக்கப் பெருந்தன்மையாகவும் அவரது பரம்பரைக்கு ஏற்றதாகவும் இருந்தது என்பதுடன் அதில் நிலைமையை நன்கு ஆராய்ந்து விளக்கப் பட்டுமிருந்தது. மேலும் அதில் இந்திப் பிரச்சினையைக் குறித்துப் பொதுஜன வாக்கு எடுக்க வேண்டும் என்றும் இரு கட்சியினரும் இதற்குக் கட்டுப்பட வேண்டுமென்றும் காட்டப்பட்டிருந்தது.

அது ஒரு நேர்மையான யோசனைதான். அதை எவரும் மறுக்கவுமாட்டார்கள். காங்கிரசுக்காரர்களும் காந்தி யாரும் இந்தப் பொதுஜன வாக்கை மதித்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் இது சமயம் மாத்திரம் கனம் ராஜகோபாலாச்சாரியார் இந்த யோசனையைக் கண்டு ஆத்திரங் கொண்டுவிட்டார். வேறு பதில் சொல்ல வகையில்லாததால் இந்த இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்களை வாயில் வந்தபடி கன்னா பின்னா என்று வசைமாரி பொழிய ஆரம்பித்துவிட்டார். இதன் மூலம் ஆச்சாரியாரின் உண்மை நிறம் விளங்கிவிட்டதுடன் இந்தி எதிர்ப்பாளர் மீது கிரிமினல் திருத்தச் சட்டத்தைப் பிரயோகித்தது காங்கிரஸ் மந்திரிகளுக்கு எவ்வளவு முரணான காரியம் என்பதையும் ராஜா அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்தி எதிர்ப்பாளர் மீது காங்கிரஸ் மந்திரிகள் ‘‘கொடிய’’ கிரிமினல் திருத்தச் சட்டத்தைப் பிரயோகிப்பதை ராஜா சாஹிப் மட்டுமல்ல; தோழர் ஆச்சாரியாரின் அந்தரங்க நண்பர்களும் கண்டித்திருக்கிறார்கள்.



தோழர் ஆச்சாரியார் கிரிமினல் திருத்தச் சட்டத்தை உபயோகிப்பதை அவரது நண்பர்கள் மட்டுமல்ல, வடநாட்டு காங்கிரஸ் பத்திரிகைகள் எல்லாமும் கண்டித்திருக்கின்றன.

அப்படியிருந்தும் ‘‘ராஜாவுடன் ராஜீய விஷயங்களைக் குறித்தோ நிர்வாக விஷயங்களைக் குறித்தோ வாதஞ்செய்ய விரும்பவில்லை’’ என தோழர் ஆச்சாரியார் கூறுகிறார். வாதத்துக்கு ஆதாரமிருந்தால் ஆச்சாரியார் அப்படிச் சொல்லி மறைந்து கொண்டிருப்பாரா?

தோழர் ஆச்சாரியாருடன் ராஜீய விஷயங்களைக் குறித்தோ நிர்வாக விஷயங்களைக் குறித்தோ வாதஞ் செய்ய ராஜா சாஹிப் ஆவல் கொண்டிருக்கிறார் என நான் கருதவில்லை.

அன்று எந்தச் சட்டத்தை தோழர் ஆச்சாரியாரும் அவரது சகாக்களும் கண்டித்தார்களோ - இன்னும் அவரது சகாக்கள் கண்டித்து வருகிறார்களோ அதே சட்டத்தைத் தோழர் ஆச்சாரியார் உபயோகித்து வரும் மதியீனத்தைத்தான் ராஜா சாஹிப் விளக்கியிருக்கிறார்.

கிரிமினல் திருத்தச் சட்டத்தை உபயோகிப்பதற்குத் தகுந்த காரணங்கள் நாளதுவரை தோழர் ஆச்சாரியார் விளக்காமல், பொருத்தமற்ற கதைகளையும் பழமொழிகளையும் உதாரணங்களையும் சொல்லிக் கொண்டு, தமது தப்பிதத்தை மறைத்துக் கொண்டு ராஜா சாஹிப்பின் நண்பர்களையும், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரர்களையும் குறைகூறிக் கொண்டு அவர்கள் மீது பழிசுமத்தி வருகிறார்.

இதுவரை அவர் தமது செய்கைக்குச் சமாதானமாகக் கூறுவது, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரர்கள் வாயில் வந்தபடி ஆபாசமான வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள் என்றும், அதைத் தடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தை உபயோகிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

இதைத்தான் அவர் திருப்பித் திருப்பிச் சொல்லி வருகிறார். வடநாட்டுத் தலைவர்களும் இதை நம்பியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

தோழர் காந்தியார்கூட இந்தி எதிர்ப்பாளர் ஆபாசமான வார்த்தைகளை உபயோகித்து வருவதாகக்

கருதுகிறாராம். இதற்குக் காரணம் தோழர் ஆச்சாரி யார் விடாமல் அதையே சொல்லிக் கொண்டு வருவது என்பதேயாகும்.

எனது நண்பர் தோழர் ஆச்சாரியார் சொல்வது உண் மையாயிருந்தால், தூஷணையான வார்த்தை களை உபயோகிப்பவர்கள் மீது ஏன் அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

இதுவரை கிரிமினல் திருத்தச் சட்டப்படி சுமார் 300 பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களில் எவரும் ஆபாசமான வார்த்தைகளை உபயோகித்தனர் என்று குற்றம் சாட்டப்படவில்லையே.

இந்தி எதிர்ப்புத் தொண்டர்கள் தோழர் ஆச்சாரியார் வீட்டுமுன் கூச்சல் போடும்போது போலீஸ்காரர்கள் பிரசன்னமாயிருக்கிறார்கள். அவர்கள் இம்மாதிரி ஆபாச வார்த்தைகளைச் சொல்லியிருந்தால் அப்போலீஸ்காரர் களை சாட்சியாகச் கொண்டு வந்திருக்கலாம். ஏன் தோழர் ஆச்சாரியார் இந்த அற்ப விஷயத்தைச் செய்ய வில்லை? இதைச் செய்யமாட்டாத இவர் இந்தி எதிர்ப்பா ளர்கள் காலித்தனமாக நடந்து கொள்ளுகிறார்கள்; அதை அடக்க கிரிமினல் திருத்தச் சட்டத்தை உபயோகிக்கிறேன் என்று சொல்லுவது உண்மை யாகுமா?

இக்காரியத்தை நோக்கும்போது, எனக்கு ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது ஆங்கிலத்தில், "Give the dog a bad name and hang it" என்று ஒரு பழமொழி உண்டு. அதாவது நாயைக் கொல்ல வேண்டுமானால் அதற்கு முதலில் கெட்ட பெயரை உண்டு பண்ணி அப்புறம் அதைக் கொன்றுவிடு என்பதாகும். அதுபோலவே ஒரு இயக்கத்தையோ, ஒரு முயற்சியையோ அழிக்க வேண்டுமானால், அதற்கு ஒரு கெட்ட பெயரையோ அல்லது அதன்மீது ஒரு பொய்ப் பழியையோ உண்டு பண்ணிப் பிரச்சாரம் செய்து அழித்துவிடுவது என்பதாகும்.

"நடு இரவில் வீட்டில் திருடன் புகுந்துவிட்டால் கைக்குக் கிடைத்த ஆயுதத்தைக் கொண்டு தானே திருடனைத் தாக்க வேண்டு"மென திருவல்லிக்கேணி கடற்கரையில் தோழர் ஆச்சாரியார் பேசுகையில் தனது அடக்குமுறைக்கு சமாதானம் கூறியிருக்கிறார்.

இந்த ஒரு கூற்றே தோழர் ஆச்சாரியார் மனக் கருத்தைப் பளிங்கு போல் விளக்கிவிட்டது.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி வலுவடைந்து வருவதைக் கண்டு, தோழர் ஆச்சாரியார் உடல் தளதளர்த்து - விடவிடத்து விட்டார் என்பதில் சந்தேகமில்லை.

இந்தி எதிர்ப்புக்கு நாட்டில் எவ்வளவு செல்வாக் கிருக்கிறது என்பதைத் திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டங்கள் நன்கு விளக்கிவிட்டன.

ஆதலால், தோழர் ஆச்சாரியார், இந்தி எதிர்ப்பாளர் ஆபாச வார்த்தைகளைச் சொல்லி வருகிறார்கள் என்று சாக்குச் சொல்லிவரும் வாதத்தை ஒழிப்பதற்காக, இனி மேல் இந்தி எதிர்ப்புத் தொண்டர்கள், பொது ஜனங் களுக்கு உண்மையை அறியச் செய்ய வேண்டியது அவசியமாகும். எப்படி என்றால் மறியல் என்றால் அது எப்படி நடக்கிறது? அங்கு என்னென்ன நடக்கிறது? தொண்டர்கள் என்ன சொல்லுகிறார்கள்? என்பன போன்ற விஷயங்கள் பொது ஜனங்கள் அறியமுடியாத படி ஒரு மூலையில் குடி இருக்கும் தோழர் ஆச்சாரி யார் வீட்டுக்குப் பக்கத்தில் தொண்டர்கள் நிற்பதால் அவர்கள் என்ன வேண்டுமானாலும் கற்பித்துக் கொள்ள சவுகரியமாகிவிடுகிறது. ஆதலால் அதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று தொண்டர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழ் வாழ்க", "இந்தி வீழ்க" என்ற கோஷங் களைத் தவிர வேறு கோஷங்களை இந்தி எதிர்ப்பு வாலிபத் தொண்டர்கள் செய்யமாட்டார்கள் என்பதும்- செய்யவில்லை என்பதும் எனக்கு நன்கு தெரியும். சமாதானமாகவும், ஒழுங்காகவும் நடந்துகொள்வார்கள் என்பதும் எனக்கும் தெரியும் என்றாலும் இது எல்லோரும் அறியும்படி இப்போது நடந்து வருவதைப் போலவே இனிமேலும் பள்ளிக்கூடத்தின் முன் மட்டும் நடத்திப் பார்ப்பது நலமாகும். இதன் பேரிலாவது தோழர் ஆச்சாரியார் இந்தப் பழிகூறாமலும் கிரிமினல் திருத்தச் சட்டத்தைக் கொண்டு அடக்கப் பார்க்காமலுமிருக்கிறாரா என்று பார்ப்போம்.

தோழர் காந்தியார் கூட அந்தச் சட்டத்தின் கொடுமை யான பகுதிகள் தாமதமன்னியில் ஒழிக்கப்பட வேண்டு மென தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்பொழுது இங்கு தோன்றியுள்ள பிரச்சினை இக்கிரி மினல் திருத்தச் சட்டம் இந்தி எதிர்ப்பாளர் மீது மட்டுந்தான் பிரயோகிக்கப்படுமா, மற்ற விஷயங்களி லும் பிரயோகிக்கப்படுமா என்பதாகும். ஏனெனில் ஜான்சிபார் கிராம்பை பகிஷ்கரித்துக் கடைக்காரர்கள் முன் மறியல் செய்த காங்கிரஸ்காரர்கள் மீதும் அதற்கு ஆதரவளித்துக் கட்டளை இட்ட தலைவர்கள் மீதும் ஏன் இந்தச் சட்டம் பிரயோகிக்கப்பட வில்லை?

ஒருவேளை தோழர் ஆச்சாரியாருக்கு ஆளுக்கொரு நீதி காட்டும் குணம் இருக்கிறது போலும்.

ஆகவே தோழர் ஆச்சாரியார் வீட்டு முன் மறியல் செய்வதை நிறுத்தி வைத்துப் பார்க்க வேண்டுமென்று

இந்தி எதிர்ப்புத் தொண்டர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு : இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தொடர்பாக சுய மரியாதை இயக்கத் தலைவர் தோழர் ஈ.வெ.ரா. செப்டம்பர் 16இல் செய்தித்தாள்களுக்கு அளித்த அறிக்கை.

விடுதலை அறிக்கை 17-9-1938
குடிஅரசு - அறிக்கை - 18.09.1938

★ ★ ★

## திருச்சி ஜெயிலில் இந்தி எதிர்ப்புக் கைதிகள் முகமலர்ச்சியோடு காணப்படுகிறார்கள்.

**உப்புநீர், சோள அரிசி உணவு அருந்துகிறார்கள். நெல் குத்தல், மூட்டை தூக்கும் வேலை கொடுத்து காங்கிரஸ் ஆட்சி கொடுமை செய்கிறது.**

தமிழ்நாட்டில் நடைபெறும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டதாகக் காங்கிரஸ் சர்க்காரால் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்ட தமிழர்களில் சென்னைச் சிறையிலிருந்து பலர் பல்லாரிக்கும், திருச்சிக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதனால் 83 பேர்கள் வரை இவ்வூர் (திருச்சி) மத்திய சிறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் இரு வரை (எல்லாரையும் ஒரே சமயத்தில் பார்க்க முடியாதா கையால்) பார்க்க அடியில் ஒப்பமிட்டுள்ள நாங்கள் மனுச் செய்திருந்தபடி 14-9-1938 மாலை 4.30 மணிக்கு ஜெயிலின் முன் அறையில் உள்ள ஜன்னல் மூலம் மேற்படி இருவருடன் சுமார் அரை மணிநேரம் உரையாடினோம். சிறைச் சிப்பந்திகள் எங்கள் உரை யாடலைக் கூர்ந்துநோக்கி உலாவிக் கொண்டிருந் தனர்.

தோழர்கள் வெகு உற்சாகத்தோடு தமிழ்த்தாய்க் காகச் சிறைவாசஞ் செய்வதாக அவர்களின் முக மலர்ச்சியால் தெரிந்துகொண்டோம். ஜெயில் கம்பி களுக்கு வெளியே நடைபெறும் தமிழர் போராட்டத் தின் நிகழ்ச்சியை அவர்கள் வெகு ஆவலோடு விசாரித் துச் சந்தோஷமடைந்தனர். தோழர்களெல்லாம் ஒரே பிளாக்கில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். குடிதண்ணீர் வசதிக்குறைவால் அவதிப்படுகிறார்கள். கிணற்று உப்பு நீர்தான் அவர்கள் அருந்துவது. முனிசிபாலிடியார் ஜெயிலுக்கு சரியாக தண்ணீர் சப்ளை செய்ய முடியாக் காரணமென்று அதிகாரிகள் கூறுகிறார்கள். பச்சை அரிசியுடன் சோளமும் கலந்த ‘மிக்ஸட் டயட்’ தோழர் கட்குக் கொடுக்கப்படுகிறது. முள்ளங்கியும் கீரைத் தண்டும் போட்ட குழம்பு கொஞ்சம் ஊற்றப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படும் வேலையோ கடுமை யாக இருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சிக்கு முன் ஜெயிலில் நெல் மிஷின் வைக்கப்பட்டிருந்தது. கொல்லை வழி மந்திரி ஜீவகா ருண்யத் தால் இரும்பு உரல் ஜெயிலுக்கு வாங்கப் பட்டு, தோழர்களை நெல் குத்தும்படியும், மூட்டை தூக்கும்படியும் செய்யப்பட்டி ருப்பது பிரிட்டிசார் அரசாங் கத்தையே நமக்கு நினைப்பூட்டு கிறது. ஏதாகிலும் குறைகளை சூப்ரண்டிடம் முறையிட்டுக் கொண்டால், அவர் நான்சென்ஸ் என்று அடிக்கத் தொடங்கி விடு கிறார். கீழ் அதிகாரிகள் இவர்களிடம் நன்றாக நடந்து கொண்டால் உயர் அதிகாரிகள் கண்டிக்கிறார்கள்.

பொதுவாக இந்தி எதிர்ப்புப் போராட்டக் கைதிகள் சாதாரண கிரிமினல் குற்றவாளிகளைவிட கொடுமை யாகவே நடத்தப்படுகிறார்கள்.

இப்படிக்கு,
**கொ. இலட்சுமணன், மருதநாயகம்,**
**ரா. ரெங்கையா, நந்தகோபால்.**

- விடுதலை, 17-9-1938
(தொடரும்)

## புதுவையில் சுடர் கண்ணன் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு

*புதுவை மொழியில் பண்பாட்டு ஆராய்ச்சி நிறு வனம் சார்பில் 15.02.2016 திங்கள் காலை 10 மணியளவில் நடைபெற்ற மேற்காண் முதல் அறக்கட்ட ளைச் சொற்பொழிவு நிகழ்விற்கு பேரா.ம.இல. தங்கப்பா தலைமை ஏற்றார். சீனு அரிமாப் பாண்டி யன், பாவலர் சி.மா.பாலதண்டாயுதம், க.குணத் தொகையன், எழில் இளங்கோ ஆகியோர் முன் னிலை வகித்தனர். முனைவர் பக்தவத்சல பாரதி வரவேற்க, தமிழறிஞர் இளங்குமரனார் ‘தனித் தமிழ்’ எனும் பொருளில் அறக்கட்டளைச் சொற் பொழிவு நிகழ்த்தினர். முனைவர் இரா.சம்பத் நன்றி யுரைடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.*

## பெரியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு

26.02.2016 அன்று காலை 10 மணிக்குச் சென்னை, தரமணி உலகத் தமிழராய்ச்சி நிறு வனத்தில் ‘பெரியாரின் வாழ்வியலில் கருத்துப் போர்’ என்ற தலைப்பில் சியோன் மலை முரம்பு பாவாணார் கோட்ட ஆட்சிப் பொறுப்பாளர் புலவர் ஆ.நெடுஞ்சேரலாதன் சிறப்பான அறக்கட்டளைச் சொற்பொழிவு வழங்கினார். அறக்கட்டளையாளர் திராவிடர் கழகச் செயலகத் தலைவர் க.திருநாவுக் கரசு ஆவார்.

# படித்துப் பாருங்களேன்...

ஆ. சிவசுப்ரமணியன்

**புதுவை முரசு இதழ் தொகுப்பு (ஆறு தொகுதிகள்)**

தொகுப்பாசிரியர் : **வாலாசா வல்லவன்** (2009)
**தமிழ்க் குடியரசு பதிப்பகம்,** 4/11, சி.என்.கே. சந்து, சேப்பாக்கம், சென்னை - 5. விலை : ரூ.1200.00
தொடர்புக்கு : 7299214554

இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் இயக்க வரலாறுகள் குறித்து ஆய்வு செய்யப் பெரிதும் துணை நிற்பன இக்காலக் கட்டத்தில் வெளியான இயக்க இதழ்களாகும். ஆனால், அனைத்து வாசகர்களின் பார்வைக்கும் இவை கிட்டுவதில்லை. சில குறிப்பிட்ட நூலகங்களில் மட்டுமே இவை கிடைக்கின்றன. ஆய்வாளர்கள் மட்டுமே இவற்றைப் பயன்படுத்தும் நிலை உள்ளது. இதே காலத்தில் வெளிவந்த இலக்கிய இதழ்களில் தேர்வு செய்யப்பட்ட பகுதிகள் மட்டுமே நூல் வடிவில் வெளிவந்துள்ளன.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் பெரியார் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கமும், திராவிடர் கழகமும் தமிழக வரலாற்றில் புறக்கணிக்க முடியாத இயக்கங்களாகும். இவ்வியக்கம் நடத்திய இதழ்களும் கூட மேற்கூறிய நிலையிலேயே இருந்து வந்தன. திருவாளர் கி.வீரமணி, கொளத்தூர்மணி, ஆனைமுத்து ஆகியோர், பெரியார் நடத்திய குடி அரசு இதழை, கால வரிசையில் தொகுத்து முழுமையாக வெளியிட்ட பின் இக்குறை நீங்கியது.

தமிழகத்துடன் நிர்வாக அடிப்படையில் எவ்விதத் தொடர்பும் இன்றி, பிரெஞ்சு காலனியப் பகுதியாக இருந்த புதுச்சேரி, காரைக்கால் பகுதிகள் தமிழகத்தின் அண்டை நிலப்பகுதிகளாக மட்டும் இன்றி மொழி, பண்பாடு என்பனவற்றின் அடிப்படையில் நெருக்கமான பிணைப்புக் கொண்டிருந்தன. தமிழகத்தில் வளர்ந்த பொதுவுடைமை இயக்கமும் திராவிட இயக்கமும் இப்பகுதிகளிலும் வேர்ப்பிடித்து வளர்ந்தன.

எனவே, இங்கும் இவ்விரு இயக்கம் சார்ந்த இதழ்கள் தோன்றி வெளிவந்தன. இவற்றுள், பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பரப்ப உருவான ஒரு முக்கியமான இதழ் புதுவை முரசு ஆகும். இதன் முதல் இதழ் 10-11-1930 இல் வெளிவந்துள்ளது. 1932 மே, இரண்டாம் நாள் இதழ்வரை பதிப்பாசிரியருக்குக் கிடைத்துள்ளது.

இதற்குப் பின்னரும் இதழ் வெளிவந்திருக்கும் என்பது பதிப்பாசிரியரின் கருத்தாகும். தாம் பதிப்பித்த இதழ்களின் எண்ணிக்கை குறித்தும், பதிப்பித்த முறை குறித்தும்

'என்னிடம் உள்ள எழுபது இதழ்களில் முதல் இதழில் முதல் ஆறு பக்கம் காணவில்லை. எவ்வளவோ முயன்றும் இதழ்கள் முழுமை யாகக் கிடைக்கவில்லை. கடைசி இதழிலும் சந்தா கட்டவும், ஏஜெண்டுகள் தேவை என்ற விளம்பரமும் வெளி யிடப்பட்டுள்ள தால், இதழ் தொடர்ந்து வெளிவந்திருக்கக் கூடும் என்று எண்ணுகிறேன்.

இதழ் தொகுப்பு என்ற முறையில் பெட்டிச் செய்திகளைக் கூட நான் விட்டுவிட வில்லை. ஏனென்றால் அதிலும் இயக்கச் செய்திகள் ஏராளமாக உள்ளதால், விளம் பரங்கள் தவிர்த்து மற்ற எல்லாச் செய்தி களையும் தொகுத்துள்ளேன்.

ஆறு தொகுதிகளாகப் பிரித்து நூலாக்கி யுள்ளேன். மொத்தம் 2496 பக்கங்கள் உள்ளன.'

எனக் குறிப்பிட்டுள்ளார்.



**பதிப்பாசிரியர்**

பதிப்பாசிரியரான வாலாசா வல்லவன் (செ.சேகர்) பெரியாரின் கொள்கைகள் மீது பற்றுக் கொண்டவர், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சென்னை மாவட்டச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

**இதழின் ஆசிரியர்கள்**

இதழ் தொடங்கிய போது தேங்காய்த்திட்டு க. இராமகிருட்டிணன், முதல் ஏழு இதழ்களுக்கு ஆசிரிய ராக இருந்துள்ளார். இவரை அடுத்து, குத்தூசி குருசாமி 29-12-1930 வரை ஆசிரியராக இருந்துள்ளார். அரசுப் பணிக்கு அவர் சென்றமையால் 11-05-1931 முதல் 18-01-1932 வரை ஆசிரியர் பெயர் இல்லாமல் இதழ் வெளிவந்தது. இடையில் நான்கு இதழ்கள் வெளிவராது போன நிலையில் மீண்டும் 28-12-1931 முதல், இதழ் வெளி வந்துள்ளது. பின்னர் பூவாளூர் பொன்னம்பல னார் ஆசிரியராக இருந்துள்ளார்.

**இதழில் எழுதியோர்**

ஓர் இதழின் சிறப்புக்கு அதில் வெளியாகும் படைப்புகள் முக்கிய காரணமாகும். பொழுது போக்கிற்காக அன்றி ஒரு கருத்தைப் பரப்பும் நோக்கில் ஆதாயம் விரும்பாது நடத்தப்படும் பத்திரிக்கையில் வெளியாகும் படைப்புகள் வேறுபாடான முறையில் அமைவது அவசியம். இப்படைப்புகளை எழுதத் தகுதியான எழுத்தாளர்கள் தேவை.

புதுவை முரசு இதழுக்கு எழுத்தாளர்கள் பஞ்சம் இருந்ததாகத் தெரியவில்லை. குத்தூசி குருசாமி மட்டும் இன்றி, அதில் எழுதியோர் குறித்துப் பதிப்பாசிரியர் தரும் பெயர்ப்பட்டியல் வாயிலாக இதை உணர முடிகிறது. பதிப்பாசிரியர் தரும் பட்டியல் வருமாறு

> பாரதிதாசனும், புதுவை சிவப்பிரகாசமும் பிழைத்திருத்தம் செய்து கொடுத்தும், கட்டுரைகள், கவிதைகளைத் தொடர்ந்து அதில் எழுதிக் கொண்டும் இருந்தனர். ஏராளமான சுயமரியாதை இயக்கத் தோழர்களின் பேச்சுக்களும், கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக சாமி. சிதம்பரனார், ம. சிங்காரவேலர், மாயவரம் சி.நடராசன், நாகை என்.பி.காளியப்பன், செல்வி நீலாவதி, குஞ்சிதம், பூவாளூர் அ.பொன்னம்பலனார், எஸ்.இராமநாதன், சித்தர்க்காடு இராமையா, சாத்தான்குளம் அ.இராகவன், நாகர்கோவில் பி.சிதம்பரம் பிள்ளை, காரைக்குடி சொ.முருகப்பா, ஊ.பு.அ.சௌந்தரபாண்டியன் மற்றும் பலரின் சொற்பொழிவுகளும் எழுத்துக்களும்; இங்கர்சாலின் கடவுள், மதம் போன்ற தலைப்புகளிலான சொற்பொழிவுகளின் தமிழாக்கமும் வெளியிடப்பட்டுள்ளன. குருசாமியும், பாரதிதாசனும் போட்டி போட்டுக் கொண்டு சுயமரியாதை உணர்ச்சியைச் சூடேற்றும் வகையில் மிகவும் எழுச்சியான நடையில் எழுதிக் குவித்தனர். பாரதிதாசன் உரைநடையிலும் கவிதையிலும் கடவுளை யும், மதங்களையும், கண்மூடிப் பழக்க வழக்கங்களையும் கண்டித்து அதிக அளவில் துடிதுடிப்புடன் எழுதியுள்ளார்.

**இதழின் நோக்கம்**

1930 நவம்பர் 10இல் வெளியான புதுவை முரசு முதல் இதழில் இவ்விதழின் நோக்கம் சுயமரியாதை உணர்வைப் பரப்புவதுதான் என்பது தெளிவாகப் பதிவாகியுள்ளது. இது குறித்து அதன் தலையங்கம்

> புதுவை முரசு என்பதற்குப் புதுவையிலுள்ள மக்களில் ஒரு தொகுதியினரின் முழக்கம் என்பது தேர்ந்த பொருள். அம்முழக்கத்தை யுடையது புதுவை முரசுப் பத்திரிகை என்க. புதுவையிலுள்ள ஒரு தொகுதியினர் ஆவார் யாவர்? அவர்தாம் சுயமரியாதைக் கொள் கையுடைய கூட்டத்தார் என்று பட்டவர்த் தனமாக அறிக.
>
> சுயமரியாதை என்பதற்குத் தன்மானம் என்பது பொருளாதலின் தேச மக்கள் எவரும் தம் மரியாதையைக் காத்திட வேண்டும் என்பதே சுயமரியாதைக் கொள் கையாம்.
>
> சுயமரியாதைக் கொள்கை ஓர் மதமன்று மக்களின் முன்னேற்றத்துக்குத் தடை செய்வனவற்றை நீக்குவதாலும் அரன் செய்வனவற்றை ஆக்குவதாலும், தேச மக்கள்பால் சுயமரியாதைக் கொள்கை உதிக்கும். ஆதலின் சுயமரியாதைக் கொள் கையை தேசத்தில் இயக்குவதோர் இயக்கம் என வேண்டும்.

சுயமரியாதைக் கொள்கையை, பிரெஞ்சிந்திய மக்களிடமும், இந்திய மக்களிடமும் பரப்புவதே இதன் நோக்கமாகும் என்பதையும் இத்தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளனர். இதை உறுதி செய்யும் வகையில் ஈரோடு இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்களின் சாரம் முதல் இதழில் வெளியாகி யுள்ளது. தந்தை பெரியாரும் 4-1-1931 குடிஅரசு இதழில்,

‘புதுவை முரசு என்னும் வாரப்பத்திரிக்கை ஒன்று புதுவையில் இருந்து சில மாதங் களாக வெளிவருவது யாவருக்கும் தெரிந்த தாகும். அப்பத்திரிக்கை... சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்பவேண்டும் என் கின்ற எண்ணத்தின் மீதே துவக்கப்பட்ட தாகும்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆறு தொகுதிகளிலும் வெளியாகியுள்ள செய்திகள், கட்டுரைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால் பின்வரும் கருத்துக்களைப் பரப்புவதில் புதுவை முரசு இதழ் ஆர்வம் கொண்டி ருந்தமை புலனாகிறது.

1. தீண்டாமை எதிர்ப்பு
2. மத எதிர்ப்பு
3. பெண் விடுதலை
4. மூட நம்பிக்கை எதிர்ப்பு
5. சாதி எதிர்ப்பு
6. காங்கிரஸ் இயக்க எதிர்ப்பு

கட்டுரைகளாக மட்டும் இன்றி கவிதைகள், துணுக்குகள் என்பனவற்றின் வாயிலாகவும் மேற்கூறிய கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். சாதி மறுப்புத் திருமணம் தொடர்பான விளம்பரங்களும் இடம் பெற்றன.

கவிஞர் பாரதிதாசனின் பங்களிப்பு இதில் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது. அவரது கவிதைத் தொகுப்புகளில், பின்னர் இடம்பெற்ற பல கவிதைகள் இதில் வெளியாகியுள்ளன. இதழின் முதல் பக்கத்தில் அவரது தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு ‘சஞ்சீவி பர்வதத்தின் சாரல்’ என்று, இரு குறு நூல்களுக்கான விளம்பரம் வெளியாகி வந்தது. இவ்விரு நூல்களையும் புதுவை முரசு இதழே வெளியிடப்பட்டுள்ளது. கே.எஸ், நாடோடி, அடுத்த வீட்டுக்காரன், சுயமரியாதைக்காரன், வழிப்போக்கன், கிண்டல்காரன், உண்மை உரைப்போன் ஆகிய புனைப் பெயர்களில் பாரதிதாசன் இவ்விதழில் எழுதி வந்ததாக, கோகுல் காந்திநாத் குறிப்பிடுகிறார்.

இக்கட்டுரையில் தீண்டாமை எதிர்ப்பு, மத எதிர்ப்பு என்பன தொடர்பாக புதுவை முரசு வெளியிட்ட கருத்துக்கள் மட்டும் அறிமுகம் செய்யப்படுகின்றன.

### தீண்டாமை எதிர்ப்பு

புதுவை முரசு வெளியான காலத்தில்தான் இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்கமானது, தீண்டத்தாகாதோர் என்ற பெயரில் ஒதுக்கி வைக்கப்பட்ட மக்கள் மீது தன் பார்வையை, செலுத்தத் தொடங்கியது. அரிஜனங்கள் என்ற பெயரை இம்மக்களுக்கு இட்டு, இவர்களின், அவலநிலை குறித்தும், அவர்கள் முன்னேற்றம் குறித்தும் பேசத் தொடங்கியது.

புதுவைமுரசும் தீண்டாமை என்ற சமூகக் கொடுமையை வெளிப்படுத்தும் பணியில் ஈடுபட்டது, சுயமரியாதை இயக்கம் தலித் மக்களின் பால், சார்பு நிலை எடுக்கவில்லை என்றும், இவ்வியக்கம் பிற்படுத் தப்பட்ட சமூகத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கியது என்றும் ஒரு கருத்து இன்று சிலரால் முன்வைக்கப் படுகிறது. இக்கருத்து தவறு என்பதற்கான சான்றுகள் புதுவை, முரசில் காணப்படுகின்றன.

தேவகோட்டையிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலும் வாழும் நாட்டார் சாதியினர், அங்கு வாழும் தீண்டத்தகாதோர் என ஒதுக்கி வைக்கப்பட்ட மக்கள் மீது சில கட்டுப்பாடுகளை விதித்தனர். இச்செயல் இந்தியா முழுவதும் விவாதத்திற்குரிய ஒன்றானது. ஹட்டன் என்ற ஆங்கிலேயர் ‘இந்தியாவில் சாதிகள்’ என்ற நூலிலும், அம்பேத்க்கர் தமது கட்டுரை ஒன்றிலும் இது குறித்து எழுதியுள்ளனர். புதுவை முரசு இதழ் சுயராஜ்யம் கேட்க வெட்கமில்லையா? என்ற தலைப்பில் தலையங்கம் எழுதியுள்ளது. (5-1-1931)

தலையங்கத்தின் தொடக்கத்தில் நாட்டார்கள் விதித்த எட்டு கட்டுப்பாடுகளை,

1. ஆதித் திராவிடர்கள் தங்கம் வெள்ளி நகைகள் அணியக் கூடாது.
2. ஆதித்திராவிட ஆண்கள் முழங்காலுக்குக் கீழும் இடுப்பைச் சுற்றிலும் உடுத்தக்கூடாது.
3. ஆண்கள் கோட்டு, ஷர்ட்டு, பனியன் எதுவும் அணியக்கூடாது.
4. ஆதித்திராவிடர் யாரும் தலைமயிரை வெட்டிவிட்டுக் கொள்ளக் கூடாது.
5. மண்பாண்டங்கள் தவிர வேறு எதையும் ஆதி திராவிடர்கள் தம் வீடுகளில் உபயோகிக்கக் கூடாது.
6. ஆதித்திராவிடப் பெண்கள் இடுப்பிற்கு மேல் இரவிக்கை, தாவணி முதலிய உடைகளணிந்து மூடக்கூடாது.
7. ஆதித்திராவிடப் பெண்கள் பூ, மஞ்சள் அணியக் கூடாது.
8. ஆண்கள் வெயிலுக்கும், மழைக்கும் குடைபிடிக் கவோ செருப்புப் போட்டுக்கொள்ளவோ கூடாது.

என்று பட்டியலிட்டு விட்டு, தலையங்கத்தின் இறுதிப் பகுதியில்,

ஆங்கிலேயர்களோ, அவர்களுடைய அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டவர்களோ நமக்குச் செய்வதாகச் சொல்லப்படும் கொடுமைகள் நாட்டார்களின் கொடுமைக்கு

> உறைபோடக் காணுமா? அன்றியும் மார்பி னால் ஊர்ந்தாவது தெருவில் போகலாம் என்று சொன்ன டயர் பொல்லாதவனா? மக்கள் செருப்பு, குடை உபயோகிக்கக் கூடாது என்றும், பெண்கள் அரைநிர்வாண முறையிலிருக்க வேண்டுமென்றும் கட்டாயப் படுத்தும் நாட்டார்கள் பொல்லாதவர்களா?

என்று வினவுகிறது.

காரைக்குடி பகுதியில் உள்ள, மாத்தூர், இலுப்பக்குடி ஊர்களிலும், தேவகோட்டைப் பகுதியில் உள்ள கல்லிவயலிலும் வாழும் தீண்டாமைக்கு ஆட்பட்டிருந்த மக்கள் வாழும் பகுதிக்கு 6-3-1931 இரவில் தீயிட்ட தையும் அம்மக்களைக் கொடூரமாகத் தாக்கியதையும் பள்ள சுப்பன் என்ற இளைஞரும் மற்றொரு இளைஞரும் கொலை செய்யப்பட்டதையும் குறித்த செய்திக் கட்டுரை 30-3-1931 இதழில் வெளியாகி உள்ளது.

22-12-1930, 29-12-1930 நாளிட்ட இரு இதழ்களிலும், 'ஆதித் திராவிடப் பிள்ளைகள் படும்பாடு என்ற தலைப்பில் வெளியான கட்டுரை, தொட்டில் பருவம் தொடங்கி சிறார்ப்பருவம் வரை ஆதித்திராவிடப் பிள்ளைகள் எத்தகைய அவல வாழ்க்கையை எதிர் கொள்ள நேரிடுகிறது என்பதை அழுத்தமாகப் பதிவு' செய்துள்ளது. ஆனால் கட்டுரையின் இறுதியில் தங்கள் சொந்தப் பிள்ளைபோல் இந்த எளிய ஆதித்திராவிடப் பிள்ளைகள் மீது குற்றமிருக்கில் கொடூரமாய்த் தண்டிக்காமல் அன்பு பாராட்டி வருவார்களாக என்று முடித்திருப்பது வேடிக்கையாய் உள்ளது.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதியை, புதுவை முரசு ஆதரித்துள்ளது.

**மத எதிர்ப்பு**

சைவம், வைணவப் புராணங்கள், கோவில் அர்ச்சகர்கள் தொடர்பான விமர்சனம் பரவலாக இடம் பெற்றுள்ளது. இத்துடன் இல்லாமல் இஸ்லாம் கிறித்துவம் தொடர்பான விமர்சனங்களும் இடம் பெற்றுள்ளன.

பெண் குழந்தைத் திருமணத்தைத் தடுக்கும் நோக்கில், பெண்களின் திருமணவயதை உயர்த்திய சாரதா சட்டததை இஸ்லாமியர்களும் நடைமுறைப் படுத்தவேண்டும் என்ற இஸ்லாமியப் பெண்களின் வேண்டுகோள் முஸ்லீம் வைதிகர்களுக்கு சரியான சவுக்கடி, 'முஸ்லீம் பெண்களின் ஆத்திரம்' என்ற தலைப்பில் 9-2-1931 இதழில் வெளியாகியுள்ளது.

கிறித்துவம் குறித்த கடுமையான விமர்சனங்கள் பரவலாக இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பெரும்பாலா னவை, கத்தோலிக்க கிறித்துவத்தில் நிலவும் தீண்டாமை, குருக்கள் துறவியரின் பாலியல் தவறுகள், சடங்குகளின் பெயரால் நிகழ்த்தப்படும் பொருளாதாரச் சுரண்டல் என்பனவற்றை மையமாகக் கொண்டுள்ளன. புதுச்சேரி யின் காலனியவாதிகளான பிரெஞ்சுக்காரர்கள் கத்தோலிக்கர்கள் என்பதால் இங்கு கத்தோலிக்கத்தின் பரவல் அதிகம். எனவே கத்தோலிக்கம் மீதான விமர்சனம் மேற்கொள்வது இயல்பான ஒன்றாக அமைந்துவிட்டது.

"இங்கிலாந்து சர்ச்", சண்டே டைம்ஸ்" என்ற இரு ஆங்கில ஏடுகளில் வெளிவந்த செய்திகளை அடிப்படை யாகக் கொண்டு 19-01-1931 இதழில் 'கிறிஸ்து மதத்தின் நிலைமை' என்ற கட்டுரை வெளியானது. அதில், நன்கொடையிலும் திருமுழுக்குப் பெறுவோர் மதக் குருக்கள் எண்ணிக்கையிலும் பின்னடைவை இங்கிலாந்து கிறித்துவத் திருச்சபை எதிர்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டிருந்தது.

புதுச்சேரி கத்தோலிக்கத் திருச்சபையின் இதழான 'சர்வவியாபி' இதை மறுத்து கடிதம் ஒன்றை 11-02-1931இல் வெளியிட்டது. இம்மறுப்பிற்கு 'சர்வ வியாபிக்குப் பதில்' என்ற தலைப்பில் புதுவை முரசு 23-03-1931 இதழில் தலையங்கம் வெளியிட்டது.

> ரோமல் காத்லிக் மதமானது இந்து மதத்தைவிட மிகவும் மோசமானது என்றும், அதற்குப் பணச்செருக்கைத் தவிர வேறு எதுவும் செல்வாக்கோ யோக்கியதையோ கிடையாததால் அம்மதம் பகுத்தறிவு உலகத் தின் ஜோதியில் சீக்கிரம் தானாகவே எரிந்து விடுமென்றும் நினைத்து இதுகாறும் அதற்கு மறுப்பு எழுதாமலிருந்தோம். ஆயினும், புதுவையிலும் இன்னும் மலை யாளம் முதலிய இடங்களிலுமுள்ள "ரோமன் காத்லிக்", மதத்தை ஏற்கெனவே தழுவியிருந்த சுயமரியாதை அன்பர்கள் பலர் அம்மறுப்பின் ஆதாரமற்ற தன்மையைப் பொது ஜனங்களுக்கு விளக்க வேண்டியது அவசியம் என்று விரும்புகிற படியாலும், நாமும் கிறிஸ்துவ மதத்தின் தன்மையை நமது மக்களுக்கு விளக்குவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று கருதுகிறபடியாலும் சர்வவியாபிக்குப் பதில் என்று தலைப்பிட்டு இதை எழுதத் துணிந்தோம்.

என்று முடிவுற்றது. இதன் தொடர்ச்சி 30-03-1931 இதழில் வெளியானது. அதில் கல்வி, மருத்துவம் என்பனவற்றைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கத்தோலிக் கம் வழங்குவதை ஒப்புக்கொண்டும், அதை மதத்தின் அடிப்படையில் இன்றி மனிதன் என்னும் முறையில் செய்தால் ஏற்றுக் கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக,

இதைவிட்டு, பெயரளவில் மாத்திரம் காலேஜ் கட்டினதையும் ஆஸ்பத்திரி கட்டினதையும் பறையடித்துக் கொண்டும், பெயரளவில் மாத்திரம் “புனித மார்க்க”மென்று சொல்லிக் கொண்டு, பாமர மக்களிடத்தில் பணத்தாசையைக் காட்டி ஏமாற்றிச் சேர்த்துக் கொள்வதும், பிறகு பார்ப்பானுக்கு “மேரீஸ் தோப்பும்”, பறையனுக்குத் தனி “சர்ச்சும்” கட்டிக் கொடுப்பதும், அந்தோணி பிள்ளை, ஆரோக்கியசாமி முதலியார், அற்புதசாமி உடையார், தெய்வசிகாமணி நாடார் என்று பாழும் இந்து மதத்திலிருந்த வால்களை விடாமல் கிறிஸ்துவப் பெயர்களோடு சேர்த்துத் தொங்கவிட்டுக் கொண்டு, தெருத் தெருவாய் அலைவதும், பாவ மன்னிப்பின் பேரால் ஏழைகளிடம் அகப்பட்டவரையில் சுரண்டுவதும் இன்றும் இம்மாதிரியான ஆபாசங்களும் அட்டூழியங்களும் கிறிஸ்து மதத்தின் பேராலும் நடைபெற்றுக் கொண்டு வருவதால்தான், சர்வவியாபிக்குப் பதில் எழுத வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படு கிறது.

தலையங்கத்தின் இறுதிப்பகுதியில் பின்வரும் வினாக்கள் இடம் பெற்றிருந்தன.

எல்லா மதங்களும் மனிதர்களால் ஏற்படுத் தப்பட்டனவா? கடவுள்களால் என்றால் ஒரு மதத்திற்கு ஒரு மதம் கீரியும் பாம்புமாக இருப்பதற்குக் காரணம் என்ன? கிறிஸ்து மதம் ஏற்படுவதற்கு முன்பு இருந்த மனிதர் களெல்லாம் பாவ மன்னிப்புப் பெறாததால் என்னவானார்கள்? இப்போது பிற மதங்களில் இருப்பவர்களின் கதியென்ன? கிறிஸ்து மதக் கடவுள், இந்து மதக்கடவுள், இஸ்லாம் மதக்கடவுள் ஆகிய பல கடவுள்கள் உண்டா? இல்லையென்றால் எந்த மதத்திலிருந்தால் தான் உங்களுக்கென்ன? “கடவுளே” புறக்கணிக்கப்பட்ட புத்தமதத்தைச் சேர்ந்த வர்களின் கதியென்ன? அவர்களெல்லாம் நரகத்திற்குப் போகிறவர்களா?

இத்தலையங்கத்தை எதிர்த்து, பதினெட்டு கத்தோலிக்கக் குருக்கள் பிரெஞ்சு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். ஆளுக்கு ரூபாய் 100 நட்ட ஈடு கேட்டிருந்தனர். இது குறித்து “கிண்டற்காரன்” என்ற பெயரில் பாரதிதாசன் எழுதிய பின்வரும் துணுக்கு 24-07-1931 இதழில் வெளியானது.

**ஏழை:** ஐயா என்ன? நீர் கடவுள் பேரால் எல்லா விஷயங்களையும் நடத்துவதாகச் சொல்லிக் கொண்டு உமது இஷ்டத்துக்குக் கோர்ட்டில் வழக்குப் போடுகிறீரே?

**ஆஸ்திகர்:** கடவுள்பேர் மக்களை ஏமாற்ற; வழக்குப் போடுவது அந்த ஏமாற்றுக்களைக் காப்பாற்ற.

புதுவை முரசு இதழின் நிர்வாகியான ம. நோயல், பதினெட்டு குருக்களுக்கும் தலைக்குப் பத்து ரூபாய் தர வேண்டுமென்றும், அரசுக்கு 500 பிராங் அபராதம் செலுத்தவேண்டும் என்றும் தீர்ப்பாகியது. ஒரு மாதம் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. இனி இத்தகைய குற்றத்தை அவர் மேற்கொள்ளாதவரை அதை அனு பவிக்க வேண்டியதில்லை என்று நீதிபதி குறிப்பிட்டி ருந்தார்.

இத்தீர்ப்பை எதிர்த்து, புதுச்சேரி உயர்நீதிமன்றத் தில் நோயல் மேல் முறையீடு செய்தார். அதில் 500 பிராங் அபராதம் 250 பிராங் ஆகக் குறைக்கப்பட்டது. இதை அடுத்து பாரிசில் உள்ள நீதிமன்றத்தில் நோயல் மேல் முறையீடு செய்தார். இம்மனுவின் மீதான தீர்ப்பு வெளிவரும் முன்னர், புதுவை முரசு நின்றுபோய்விட்டது. மேற் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதாக ‘சர்வவியாபி எழுதியுள்ளது. மேற்முறையீட்டில் நோயல் வெற்றி பெற்றதாக, புதுச்சேரி வரலாறு எழுதியுள்ள இராமசாமி குறிப்பிட்டுள்ளார்.

### தொகுப்பின் பயன்பாடு

புதுச்சேரியில் இருந்து வெளிவந்த போதிலும் சுயமரியாதை இயக்கம் தமிழ்நாட்டில் செயல்பட்டமை குறித்த செய்திகளையும் புதுவை முரசு வெளியிட்டு வந்துள்ளமையால் இவ்வியக்கம் குறித்த ஆய்வுக்கு இத்தொகுப்பு மிகவும் பயன்படும். சுயமரியாதை இயக்கத்தின் செயல்பாடு, சுயமரியாதை இயக்கம் சார்ந்தோர் எதிர் கொண்ட இன்னல்கள், இவ்வியக்கம் மீதான சில சாதியினரின் அணுகுமுறை, மதவாதிகளின் செயல்பாடு, தேசிய இயக்கம் குறித்த விமர்சனங்கள் என்பனவற்றை அறிய இத்தொகுப்பு மிகவும் உதவும்.

**ஓர் அரிய வரலாற்றாவணத்தைத் தொகுத்து வெளியிட்ட தோழர் வாலாசா வல்லவனின் பணி பாராட்டுக்குரியது. பதிப்பு முறையிலும், நூலின் வடிவமைப்பிலும் சற்று முயற்சி எடுத்திருந்தால் இத்தொகுப்பு மேலும் சிறப்பாக அமைந்திருக்கும்.**

நன்றி : **உங்கள் நூலகம்**, பிப்ரவரி 2016

# முதல் இயற்கை வேளாண் மாநிலம், சிக்கிம்

ஒரு மாநிலமே அதன் முழு விவசாயத்தையும் இயற்கை முறைக்குத் திருப்பி இருக்கிறது என்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அந்த மாநிலத்தின் பெயர் சிக்கிம். இந்த மாநிலத்தின் முதல்வர் பவன்குமார் சாம்லிங் விவசாயக் குடும்பத்தில் இருந்து வந்தவர். என்னதான் அரசியலில் அவர் ஜாம்பவனாக இருந்தாலும், ஐந்து முறை தொடர்ச்சியாக மக்கள் முதல்வராகத் தேர்ந்தெடுத்திருந்தாலும், அவர் மனதின் ஓரத்தில் விவசாயம் என்ற உன்னதம் உறங்காமல் விழிப்போடு இருந்து கொண்டே இருந்தது. விவசாயத்தை விஷமாக மாற்றும் இன்றைய நவீன விவசாயத்தில் இருந்து மாற்று விவசாயத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கனவு கண்டார். அந்த விவசாயம் இயற்கை முறையில் தான் இருக்க வேண்டும் என்றும் விரும்பினார். அவர் தனது விருப்பத்தை 2003ஆம் ஆண்டு சிக்கிம் சட்டப்பேரவையில் அறிவித்தார். மேலும் சிக்கிம் இனி ஒரு ‘ஆர்கானிக் ஸ்டேட்’ என்றார்.

அதன்படி மாநிலத்தில் இரசாயன உரங்களுக்கும், பூச்சிக்கொல்லிகளுக்கும் முற்றாகத் தடை விதிக்கப்பட்டது. தடையை மீறுவோருக்கு ஒரு இலட்ச ரூபாய் அபராதம், மூன்றாண்டுகள் சிறை தண்டனை அறிவிக்கப்பட்டன. ‘ஆர்கானிக் ஸ்டேம் போர்டு’ என்ற வாரியம் உருவாக்கப்பட்டது. இதையடுத்து முதலில் மக்களின் மனநிலையை மாற்ற வேண்டி இருந்தது. அதற்காகத் தொடர்ந்து ஒரு பக்கம் மக்களுக்கு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தந்து கொண்டிருக்க வேண்டியிருந்தது. அத்தனை நிலங்களையும் இயற்கை வேளாண்மைக்கு மாற்ற, நிறைய இயற்கை உரங்கள் தேவை. அந்த அளவிற்கு மாநிலத்தில் இயற்கை உரங்கள் உற்பத்தி செய்யப்படவில்லை. இதனைச் சரிசெய்வதற்கு, மாநிலம் முழுவதும் 24,536 இயற்கை உரத் தயாரிப்பு மையங்களையும், 1,447 பசுந்தாள் உரத் தயாரிப்பு மையங்களையும் அரசு உருவாக்கியது. **இயற்கை உரங்களைத் தயாரிக்க தாராளமாக மானியங்களை மாநில அரசு தந்தது. இயற்கை உரம் தயாரிக்கும் முறையை விவசாயிகளுக்குப் பயிற்சி மூலம் சொல்லிக் கொடுத்தது. அதோடு நின்றுவிடவில்லை. ‘சிக்கிம் ஆர்கானிக் மிஷன்’ என்ற அமைப்பை உருவாக்கி, அதன்மூலம் பல கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டன. அந்த கிராமங்களில் எல்லாம் இயற்கை வேளாண்மை முறைகள் பிரபலப்படுத்தப்பட்டன.** இந்த கிராமங்களை ‘பயோ வில்லேஜ்’ அதாவது ‘உயிர் கிராமங்கள்’ என்று அழைத்தார்கள். இவ்வாறான தொடர் அதிரடி நடவடிக்கையால் 2009ஆம் ஆண்டு இறுதியில் 8 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் இயற்கை வேளாண்மைக்கு மாறின. அப்போது மற்றோர் அறிவிப்பையும் பவன்குமார் வெளியிட்டார். இனி சிக்கிம் மாநிலத்துக்கு இரசாயன உரக் கோட்டா வேண்டாம். அதற்கான மத்திய அரசின் மானியமும் வேண்டாம் என்றார். மாநிலத்தில் இரசாயன உரத்துக்கான அனைத்துப் பாதைகளும் அடைக்கப்பட்டுவிட்டன. எப்படிப்பட்ட உன்னதத் திட்டங்களும் அதனை தொடர்வதற்கான ஆராய்ச்சிகளும், ஆய்வு முறைகளும் இல்லாததால் பலன் தராமல் தோல்வி அடைந்துவிடுகின்றன. இதைக் கச்சிதமாகப் புரிந்துகொண்ட சிக்கிம் அரசு ‘சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் பார் ஆர்கானிக் பார்மிங்’ என்ற இயற்கை வேளாண்மைக்கான ஆராய்ச்சி மையத்தை உருவாக்கியது. அதன்மூலம் சிக்கல்கள் அவ்வப்போது தீர்த்து வைக்கப்பட்டன.

**இத்தனை ஏற்பாடுகளையும் போர்க்கால அடிப்படையில் செய்ததால் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் சிக்கிம் மாநிலம், நஞ்சில்லா விளைநிலங்கள் கொண்ட விவசாய பூமியாக மாறியது. ஆரம்பத்தில் ஏகப்பட்ட சிரமங்களைச் சந்தித்தாலும் நாள்கள் செல்லச் செல்ல சிக்கிம் விவசாயிகள் இயற்கை வேளாண்மையின் மகத்துவத்தைப் புரிந்துகொண்டார்கள். இன்றைக்கு சிக்கிமில் விளைவிக்கப்படும் விளைபொருட்களை வாங்க உலக நாடுகள் தவம் கிடக்கின்றன. இவ்வாறாக, சிக்கிம் மாநிலம், நாட்டின் முதல் இயற்கை வேளாண் மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.**

நன்றி : “தினத்தந்தி”, 12-2-2016



# பெரியார் கொள்கைக் காவலர் மு. இராமசாமியின் மகன் பெரியார் பெருந்தொண்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி மறைந்தார்!

தந்தை பெரியாரின் சுய மரியாதைக் கொள்கைக்காவல ராக விளங்கியவர் போற்றுதலுக் குரிய பெரம்பலூர் மு. இராம சாமி அவர்கள்.

பெரம்பலூர் வட்டத்தின் மேற் குப் பகுதியில் ரெட்டி சமூகத்தினர் அடர்த்தியாக உள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் நடுத்தர வேளாண் நில உடைமைக்காரர்கள். நல்ல வைதீகக் கொள்கைகளைப் பின்பற்றுகிறவர்கள்.

அச்சமூகத்தில் நக்க சேலத்தில் பிறந்த மு. இராமசாமி அவர்கள், 75 ஆண்டுகளுக்கு முன்னர், தம் சாதி வழக் கத்தை மீறி, ஓர் இளங் கைம்பெண்ணை மணந்து கொண் டார். அதனால் சாதி விலக்கம் என்கிற கொடுமைக்கு ஆளா னார். தன் முயற்சியில் நம்பிக்கை உள்ள அப்பெருமகனார், வட்டத் தலைநகராக விளங்கிய பெரம்பலூரில் குடியேறினார். சொந்தப் பொறுப்பில் பின்னல் (Fabrication) தொழிற் பட்டறையைத் தொடங்கி, அப்போது பலருக்கும் தேவைப்பட்ட இரப்பர் டயர் மாட்டு வண்டிகளை உற்பத்தி செய்து விற்றுப் பெரும் பொருள் ஈட்டினார். தம்மக்கள் ஜெயபாலன், கிருஷ்ண மூர்த்தி, ஜெயப்பிரகாஷ் ஆகியோர்க்கு நல்ல கல்வியை அளித்தார்.

பெரம்பலூர், லாடபுரம், அம்மாபாளையம், அந்தூர், கூடலூர் பகுதிகளில் திராவிடர் கழகத் தொண்டர்களாக விளங்கிய லாடபுரம் இரத்தினசாமி, ஆசிரியர் இளையபெரு மாள் (எ) ஜெயபால், பெரம்பலூர் மு. சின்னப்பன், சின்னசாமி, அரும்பாவூர் கி. அரி, இராமசாமி, மேட்டூர் இரா. சின்னசாமி, அந்தூர் கி. இராமசாமி, கூடலூர் தி.க. சுப்பய்யா, இலந்தங் குழி ஆ.செ. தங்கவேலு, ஆசிரியர் கி. முகுந்தன், வே. ஆனைமுத்து முதலியவர்கள் 1950-1980களில் பெரியாரின் கொள்கை களைப் பட்டி தொட்டியெல்லாம் பரப்பிடப் பொருள் உதவிபுரி யும் வள்ளலாக மு. இராமசாமி விளங்கினார். அவர் அவை யில் தோன்றுவதை விரும்பாதவர்; விளம்பரம் வேண்டாத வர்; பகட்டாக உடை உடுத்தாதவர்; அதிகம் பேசாதவர்; தன் னடக்கத்தின் தலைசிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர்.

திருச்சி வட்டம், வெள்ளாறையில், அவருடைய குடும்பத் திருமணத்தை, 18-11-1973 அன்று தந்தை பெரியாரைக் கொண்டு நிகழ்த்தியவர். உரம் வாய்ந்த சுயமரியாதைக் கொள்கையாளர். நானும் அத்திருமணத்தில் பங்கேற்றேன்.

தம் மக்கள் சொந்தக் காலில் நிற்கத் தம் வாழ்நாள் காலத்தில் தக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

**இம்மூவருள் நடுவலவராகத் தோன்றிய இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தம் 67ஆம் அகவையில், திருச்சி யில், அண்ணாமலை நகரில், தம் இல்லத்தில் 24-2-2016 புதன் இரவு 9.30 மணிக்கு மறைவுற்றார் என்பதை, 25 காலை 6.30 மணிக்கு அறிந்து அதிர்ச்சியுற்றேன்.**

மறைந்த தோழர் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பட்ட மேற்படிப்புப் பெற்று, உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர்.

துணிச்சல் மிக்க அப்பெருமகனார் ஆசிரியப் பணியி லிருந்து விருப்ப ஓய்வு பெற்று, ஆழ்துளைக் கிணறு தோண் டும் பொறிகளை வாங்கித் தமிழகத்திலும், வடமாநிலங் களிலும் ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டும் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டார். அதற்கென திருச்சி மேலப்புதூரில் “வள்ளலார் போர்வெல்ஸ்” என்ற பெயரில், ஒரு தனி அலுவலகத்தை நிறுவித் திறம்பட நடத்தியவர்.

பெரியார் வாழ்ந்த காலத்திலும், அவருடைய மறை வுக்குப் பிறகும் தம் தந்தையாரைப் போலவே, பெரும் பொரு ளுதவியும் ஊக்கமும் - பெரியாரின் பெயரால் இயங்கும் எல்லா இயக்கங்களுக்கும் மனமார அளித்தவர்.

திருச்சியிலிருந்து தஞ்சைக்குப் போகும் வழியில், தாம் நிறுவியுள்ள வேளாண் பண்ணைக்கு என்னை ஒருமுறை அழைத்துச் சென்று, முழு இடத்தையும் சுற்றிக்காட்டித் தம் முயற்சி பற்றிப் பெருமிதம் கொண்டவர். இயற்கை வளம் சூழ்ந்த அந்தப் பண்ணையில் 1000 ஆடுகளையும் 100 மாடு களையும் வைத்து வளர்த்துப் பெரும் பொருள் ஈட்ட முடியும்.

அண்மையில், “ஹால்மார்க் வணிகப் பயிற்சி நிறுவனம்” ஒன்றைத் தொடங்கியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாகவே புற்றுநோய்க்கு ஆளாகித் துன்புற்றார்.

அன்னாரின் உடல்நலம் பற்றி உசாவ வேண்டி, நானும், இரா. கலியபெருமாள், ந. கருணாகரன் ஆகியோரும் 2015 ஏப்பிரலில், அன்னாரை அவரது இல்லத்தில் கண்டு அரை மணிநேரம் உரையாடி விடைபெற்றோம்.

அய்யகோ! அதுவே அவருடனான என் இறுதிச் சந்திப் பாக மிக விரைவில் நிகழ்ந்துவிட்டதை எண்ணி மிகவும் வேதனை அடைகிறேன்.

அன்னாரை இழந்து வருந்தும் அவர்தம் துணைவியார் விஜயா அம்மையார், உடன்பிறந்தோரான இரா. ஜெயபாலன், இரா. ஜெயப்பிரகாஷ், மகன்கள்-மருமகள்கள்; மகள்கள்-மருமகன்கள், பெயரக் குழந்தைகள், உற்றார் உறவினர் மற்றும் பல அமைப்பினரான பெரியார் தொண்டர்கள் ஆகிய அனைவர்க்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும், என் சார்பிலும், என் குடும்பத்தார் சார்பி லும் ஆழ்ந்த இரங்கலையும் மனங்கசிந்த வருத்தத்தையும் கனத்த நெஞ்சுடன் உரித்தாக்குகிறேன்.

வாழ்க வள்ளலார் இரா. கிருஷ்ணமூர்த்தி புகழ்!

**- வே. ஆனைமுத்து**

# உடனுறைந்த மாணவத் தோழர் கல்லை த. கண்ணப்பன் மறைந்தார்!

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டத்தில் கல்லை ஒரு சிற்றூர்.

அவ்வூரிலிருந்து த. கண்ணப்பன், கோபாலகிருஷ்ணன் என்கிற இரு இளைஞர்கள் மட்டுமே, 1946-50 கட்டத்தில் உயர் வகுப்பில் படித்தவர்கள்.

நான் 1946-48இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிப்பை முடித்துவிட்டாலும், 1949 முழுவதும் சிதம்பரம் வன்னியர் வளர்ச்சிக் கழகத்தில் தங்கிக் கொண்டு, பல்கலைக்கழக நூலகத்தில் படிப்பது, சிதம்பரம் வட்டத்தில் திராவிடர் கழகக் கூட்டங்கள், திருமணங்கள் இவற்றில் பேசுவது இவற்றைச் செய்தேன். அந்த மூன்றாண்டுக்காலம் நானும், த. கண்ணப்பனும் ஒரே இடத்தில் தங்கியிருந்தோம்.

அவர் என்னைவிட ஓராண்டு இளையவ ரானாலும் சுறுசுறுப்பும் புத்திக்கூர்மையும் உள்ளவர். 1949 செப்டம்பரில் ஒருநாள் மாலை நேரம் வரையில் பல்கலை நூலகத்தில் இருந்தேன். வேர்க்க, விறு விறுக்க த. கண்ணப்பன் அங்கு ஓடிவந்தார்.

“உங்களைத் தேடி இரண்டு பெரியவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் பேசுவதைப் பார்த்தால், எனக்குப் பயமாக இருக்கிறது. நீங்கள் வந்து எச்சரிக் கையாகப் பேசுங்கள்” என்று கூறிவிட்டுச் சென்றார்.

அது உண்மையாக இருந்தது. அதாவது, 13-11-1947இல் ஆசிரியர் உடையார்பாளையம் வேலாயுதம் படுகொலை செய்யப்பட்டார். அவரைக் கொல்ல, அக்டோபரில், நான்கு பேர் சதி செய்த இடம் கல்லங் குறிச்சி கலியபெருமாள் கோவில் வாசற்படித் திண்ணை யில். அந்தச் சதி நடந்ததை நேரில் பார்த்தவன் நான் மட்டுமே.

அதனால் அந்த வழக்கில் நான் முதன்மையான சாட்சி. எனக்குப் பணம் கொடுத்து, சாட்சியம் சொல்ல, 1949 செப்டம்பரில் திருச்சிக்குப் போகாமல் தடுக்க வேண்டும்.

அதற்காக வந்தவர் தொழுதூரை அடுத்த ஆக்கனூர் இராமசாமி சேர்வை. அவர் பெரிய பஞ்சாயத்துக்காரர் என்பது எனக்குத் தெரியும். நான் வழிக்குவரமாட் டேன் என்பதால், ஆசிரியர் வீரானந்தபுரம் ந. கண பதியையும் எனக்குப் பரிந்துரைக்க, அழைத்து வந்திருந் தார்.

நான் முதலில், அடுத்த நாள் அதிகாலையில் கணபதியை எழுப்பி ஊருக்கு அனுப்பி வைத்துவிட்டேன். என்னுடன் தங்கியிருந்த மாணவர்களை உசுப்பிவிட்டு, என்னை வசப்படுத்த வந்த சேர்வையை மிரட்டி, பேருந்தில் ஏற்றி விட்டு விட்டு, அன்றிரவே திருச்சிக்குப் போய், மாவட்ட நீதிமன்றத்தில் அடுத்த நாள் சாட்சியம் பதிவு செய்தேன்.

அடுத்து, 1950 சூலை முதற்கொண்டு, நானும் ந. கணபதியும் பணமுதலீடு செய்து, “குறள்மலர்” என்கிற கிழமை இதழைத் திருச்சியில் தொடங்கி, நான் முழுப் பொறுப்பேற்று நடத்தினேன். அதுசமயம் த. கண்ணப் பன், அகரம் நா. இராமசாமி இருவரும் அங்கு கல்லூரி யில் படித்தார்கள். சில சமயங்களில் ஆலோசனை கேட்டும், பணம் கடன் வாங்கவும் என்னிடம் வருவார் கள். இருவரும் நல்ல பண்பாளர்கள். 1967க்குப் பிறகு எங்களுக்குள் அதிகம் சந்திப்பு இல்லை. அரிதாகச் சந்திக் கும்போது, அன்பு மழை பொழிவார், த. கண்ணப்பன்.

அவர், தம் ஊரில் 22-2-2016 திங்கள் அன்று தம் 90ஆம் அகவையில் மறைந்துவிட்டார் என்கிற துயரச் செய்தியை 25-2-2016 இரவு அறிந்தேன்.

அன்னாரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத் தாருக்கு, “சிந்தனையாளன்” ஆசிரியர் குழுவின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறேன்.

வாழ்க த. கண்ணப்பன் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

## அம்பத்தூரில் ஏழு தமிழர் விடுதலைப் பொதுக் கூட்டம்

தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம் சார்பில் சென்னை அம்பத்தூரில் முருகன் கோவில் அருகில் 27-2-2016 காரி மாலை 6 மணியளவில் பேரறி வாளன் உள்ளிட்ட ஏழு தமிழர் மற்றும் நீண்டகால மாய்ச் சிறையில் வாடும் இசுலாமியச் சிறையாளர்கள் விடுதலை வேண்டி நடத்தப் பெற்ற பொதுக்கூட்டத் திற்குச் சிவ. செந்தமிழ்வாணன் தலைமையேற்றார். வரவேற்க, போராளி செங்கொடியின் படத்தைத் தமிழ முகன் திறந்து வைத்தார். க.ரா.தமிழரசன் செவ்வேள், தமிழேந்தி, இயக்குநர்கள் வ. கவுதமன், திருமுருகன், தமிழ்நேயன், அ.சி.சின்னப்பாதமிழர், முத்தமிழ் மணி, ஒப்புரவாளன், பா. நாகராசன் உள்ளிட்ட தோழர் கள் விளக்கவுரையாற்றினர். நிறைவாகத் தோழர் க.இரா. தமிழரசன் நன்றி கூறினார். விடியல் கலைக் குழுவினரின் போர்ப்பறை முழக்கம் நிகழ்வில் இடம் பெற்றது.

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்



### கவிதா (எ) ரெ. அன்புச்செல்வி - கி. திருநாவுக்கரசு

12.2.2016 வெள்ளி காலை 9 மணியளவில் தூத்துக்குடி, அழகர் மகால் திருமணக் கூடத்தில் திருச்சி. பொறிஞர் ந.ரெங்கராசன்-சித்ரா கோமதி இணையரின் மகள் கவிதா (எ) ரெ. அன்புச்செல்வி, நான்குநேரி ரா. கிருட்டிணன்-கி. சுப்புலட்சுமி இணையரின் மகன் கி. திருநாவுக்கரசு ஆகியோரின் தமிழ்முறைத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

### சு. விவேக் - இரா. சைத்ரா

12.2.2016, வெள்ளி காலை 9 மணியளவில் பெங்களூர், பசவேசுவரா நகர், கங்கம்மா திம்மய்யா திருமணக் கூடத்தில் சீ. சுப்பிரமணியம்-புவனேசுவரி இணையரின் மகன் சு. விவேக், கோ.இராமு-இராசேசு வரி இணையரின் மகள் இரா. சைத்ரா ஆகியோர்தம் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

### அ. பாரதி - செ. நிவேதிதா

14.2.2016 ஞாயிறு காலை 9 மணியளவில் சென்னை, நுங்கம்பாக்கம், சிறீ. இராமா திருமண மண்டபத்தில் சென்னை மாநகர முன்னாள் மேயர் சா. கணேசன் அவர்களின் பெயரனும், க. அழகிரி-அ. கீதா இணையரின் மகனுமாகிய அ. பாரதி, இரா. செங் குட்டுவன்-செ. கோடீசுவரி இணையரின் மகளாகிய செ. நிவேதிதா ஆகியோர் திருமணம் தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன் தலைமை யில், கட்சியின் பொருளாளர் மு.க. ஸ்டாலின் முன்னி லையில், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி உள்ளிட்டோரின் வாழ்த்துதலோடு சிறப்பாக நடை பெற்றது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

### தி.பு. சத்யா - விசயகுமார் ஆறுமுகம்

சென்னை க.த. புகழேந்தி-கயல்விழி இணையரின் மகள் தி.பு. சத்யா, சி.டி. ஆறுமுகம்-வரலட்சுமி இணை யரின் மகன் விசயகுமார் ஆறுமுகம் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்வு 28.2.2016 ஞாயிறு மாலை 6 மணியளவில் சென்னை, தியாகராய நகர் ‘கிரைஸ்டால்’ கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது. திராவிடர் இயக்கத்தின் தன்மானத் தமிழ்வேங்கை மறைந்த திருவாரூர் கே. தங்கராசு அவர்களின் இல்லத் திருமண நிகழ்வு இதுவாகும்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

### சு. வீரமணி - தி. மதுமதி

சிதம்பரம் சிவசக்தி நகர் கோவி. சுந்தரமூர்த்தி-வளர்மதி இணையரின் மகன் சு. வீரமணி, சிதம்பரம், ஓமக்குளம் கோவி. திருநாவுக்கரசு-கலாவதி இணை யரின் மகள் தி. மதுமதி ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்த விழா, 03.02.2016 அறிவன் மாலை 4.30 மணிக்கு, திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலிபூங்குன்றன் அவர்கள் முன்னிலையில் சிதம்பரம் தனலட்சுமி அம்மாள் திருமண மண்டபத் தில் சிறப்பாக நடைபெற்றது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

### த. இளந்தமிழன் - ப. திவ்யா

அரியலூர் மாவட்டம், இரும்புலிக்குறிச்சி சாமி. தட்சிணாமூர்த்தி-செல்லம்மா, சரோசா இணையரின் மகன் த. இளந்தமிழன், இதே ஊரைச் சேர்ந்த இரா. பசுபதி-சுமதி இணையரின் மகள் ப. திவ்யா ஆகியோ ரின் வாழ்க்கை ஒப்பந்த விழா 7.2.2016 ஞாயிறு காலை 8 மணியளவில், முனைவர் பொற்கோ தலை மையில் செயங்கொண்ட சோழபுரம் மங்களம் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. முனைவர் ஒப்பிலா. மதிவாணன் அனைவரையும் வரவேற்றார். முன்னாள் அமைச்சர் ஆ. இராசா, எஸ்.எஸ். சிவசங்கர், ச.ம.உ., முனைவர் சா. பிச்சைப்பிள்ளை, கு.தங்கராசு, முனைவர் தங்க. மணியன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். நிறைவாக த. குமார் நன்றி கூறினார்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

### ஆ.கு.தமிழினியன்-ம.கலைச்செல்வி

பெரம்பலூர் அக்ரி ந.ஆறுமுகம்-மருத்துவர் குணகோமதி இணையரின் மகன் ந.கு.தமிழினியன், நீலகிரி மாவட்டம் பாடந்துறை மகாலிங்கம்-விசயலட்சுமி இணையரின் மகள் ம.கலைச்செல்வி ஆகியோர் திருமணம், 28.02.2016 ஞாயிறு காலை 10 மணி யளவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர் கள் தலைமையில் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. முன்னாள் நடுவண் அமைச்சர் ஆ.இராசா, குன்னம் சட்டமன்ற உறுப்பினர் சி.சிவசங்கர் முன்னிலை வகித்தனர். மணமகனின் சித்தப்பா ந.கருணாகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் தொண்டர்களும் திரளாகப் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். ஆ.கு.சித்தார்த் நன்றியுரைத்தார்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

## இரா.கிருபாகரன் - சி.சங்கீதா

சென்னை, அண்ணாநகர் மேற்கு சி.சி.இராசகோபாலன்-அமிர்தம் இணையரின் மகன் இரா.கிருபாகரன், செங்குன்றம் வெ.சின்னக்கண்ணு-சியாமளா இணையரின் மகள் சி.சங்கீதா ஆகியோர் திருமணம் 14.02.2016 ஞாயிறு காலை சென்னை, பாடி, திருமால் திருமகள் வசந்த மகாலில் சிறப்பாக நடைபெற்றது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

## சந்திரசேகரன் பாலா - கினிசிங்



7.02.2016 ஞாயிறு காலை 7.30 மணியளவில் புதுச்சேரி 100 அடிச்சாலை என்.டி.மகால் திருமணக் கூடத்தில் பா.நடராசன்-கௌரி இணையரின் மகன் சந்திரசேகரன் பாலா. இ.வ.ப, உத்திரபிரதேச மாநிலம் காசியாபாத் இரத்தன்சிங்-சுதாசிங் இணையரின் மகள் கினிசிங் இ.வ.ப. ஆகியோர் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் இருவரும் இந்திய வனப் பணி அலுவலர்கள். சாதி, இனம், மாநில எல்லைகளைக் கடந்த காதல் திருமணம் இது. செல்வி த.கு. அருள்மொழி தமிழ்வாழ்த்துப்பாட கோ. சாந்தி மாதவன் அனைவரையும் வரவேற்றார். தோழர் வே.ஆனைமுத்து மணவிழாவிற்குத் தலைமை ஏற்றுத் திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார். நிகழ்வின் மகிழ்வாகச் சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ரூ.1000/- வழங்கப் பெற்றது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

## நீதிக்கட்சியின் நூற்றாண்டு நிறைவு விழா

சென்னை, திருவான்மியூர், 130 வால்மீகி தெரு, 'இராக மங்களா'வில், 13-3-2016 ஞாயிறு காலை 10 மணிக்கு நீதிக்கட்சியின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் சுயமரியாதைச் சுடரொளிகள் நாள் நிகழ்ச்சி மருத்துவர் அ.சவுந்திரபாண்டியன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிட்டி. தியாகராயர் படத்தை எம்.பேபி ஜெயகுமார், டாக்டர் டி.எம்.நாயர் படத்தை வாலாசா வல்லவன், சிந்தனைச் சிற்பி மா.சிங்காரவேலர் படத்தை செ.வை.ர.சிகாமணி ஆகியோர் திறந்து வைத்து உரையாற்றுகின்றனர். திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு சிறப்புரை ஆற்றுகிறார் அவைரும் வருக!

**- குத்தூசி குருசாமி - குருவிக்கரம்பை வேலு சுயமரியாதைப் பேரவை**

## உலகத் தாய்மொழிநாள் - தமிழகமெங்கும் பேரணிகள்



உலகத் தாய்மொழி நாளையொட்டித் தமிழகமெங்கும் தமிழமைப்புகள் சார்பில் பல்வேறு இடங்களில் பேரணிகளும் பொதுக்கூட்டங்களும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத்தின் சார்பில் பல பகுதிகளில் இதற்கான ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப் பட்டிருந்தன. அவற்றின் ஒரு பகுதியாக 21.2.2016 ஞாயிறு காலை 10 மணியளவில் சென்னை, புது வண்ணை சுங்கச்சாவடியில் இருந்து பள்ளி மாணவ, மாணவியர், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் பங்கேற்ற சிறப்பான பேரணி ஒன்றை தமிழ் நாடு வணிகர் சங்கத் தலைவர் த. வெள்ளையன் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். ஊர்வலத்திற்கு மா. பொழிலன் தலைமையேற்றார். இறை. பொற்கொடி, முனைவர் ச. காமாட்சி முன்னிலை வகித்தனர். தமிழே கல்வி மொழி, தமிழில் படித்தவர்க்கே வேலை, தமிழ்நாட்டிற்கே கல்வி உரிமை உள்ளிட்ட கோரிக்கைகளை முழங்கி ஊர்வலம் எழுச்சியுடன் புறப்பட்டு அருணாச்சலேசுவரர் கோயில் தெருவை அடைந்தது. அங்கே நடந்த கூட்டத்தில் ஓவியர் வீரசந்தனம், பேராசிரியர் ப. சிவகுமார், பாவலர் தமிழேந்தி, கோவை. கு. இராமகிருட்டிணன் உள்ளிட்டோர் உரையாற்றினர். திருமலை தமிழரசன் நன்றி கூறினார்.

## விடுபட்ட விவரம்

2016 பிப்ரவரி இதழில் பக்கம் 6, பத்தி 2, 7ஆம் வரியில் விடுபட்ட செய்தி :

"...நாங்கள் போய்வந்த அடுத்த வாரம், மருத்துவர் ச. இராமதாசு அங்குப் போனார். ஒரு ஆதித்திராவிடர் உடல் இறுதி ஊர்வலத்தை, வன்னியர் தெரு வழியே அவர் நடத்திச் சென்றார். வன்னியப் பெண்கள் தெருவில் காறித் துப்பினார்கள்"...

தவறுக்கு வருந்துகிறோம்
- ஆசிரியர் குழு

# க.முகிலன் தம்பி மகன் வி.இனியன் நேர்ச்சியில் மறைவுற்றார்



வேலூர் மாவட்டம் சோளிங்கபுரம் க.முகிலன் (அ.கிருட்டிணன்) தம்பி அ.விநாயகம்-க.தேன்மொழி ஆகியோரின் மகன் பொறிஞர் வி.இனியன் 16.2.2016 அன்று மாலை வேலூரில் திருமண வரவேற்பில் கலந்து கொள்வதற்காக மகிழுந்தை அவரே ஓட்டிச் சென்றபோது, மகிழுந்து கட்டுப்பாட்டை இழந்து, பேருந்து நிறுத்த நிழற்குடைக் கட்டடத்தில் மோதியதில் அவ்விடத் திலேயே இறந்தார். வி.இனியன் வீட்டிலிருந்து விடை பெற்றுச் சென்ற 15 மணித்துளிகளுக்கள் நடைபெற்ற இக்கொடிய நேர்ச்சி அவரின் உயிரைப் பறித்தது.

வி.இனியன் சோளிங்கபுரத்தில் இருக்கும் டி.வி.எஸ். லூக்காஸ் நிறுவனத்தில் பொறியாளராகப் பணிபுரிந்து வந்தார். 39 அகவையினரான தம் மகன் இனியனைத் திடுமென இழந்து பெருந்துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது பெற்றோர் அ.விநாயகம்-தேன்மொழி, இனிய னின் துணைவி ஆசிரியர் புவனேசுவரி, மகன் கண்ணன் மகள் கனிமொழி இனியனின் உடன்பிறந்த வி.அல்லி, வி.எழில், குடும்பத்தினர், பெரியப்பா அ.கிருட்டிணன் (க.முகிலன்) பெரியம்மா அ.சரசுவதி (கி.கலை) அத்தை அ.ஆதிசக்தி ஆகியோர்க்கு மா.பெ.பொ.க. தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. 1981 மே மாதம் மா.பெ.பொ. சோளிங்கபுரத்தில் பத்து நாள்கள் பயிற்சி வகுப்பு நடத்திபோது தோழர்கள் வே.ஆனைமுத்து எஸ்.டிவிவேகி, சீர்காழி மா.முத்துச்சாமி, அரியலூர் ஆ.செ.தங்கவேலு உள்ளிட்ட தோழர்கள் பலரும் இந்த இல்லத்தில்தான் தங்கியிருந்தனர் என்பது குறிக்கத்தக்கதாகும்.

# சோளிங்கபுரம் இரா.தேவகி அம்மாள் மறைவு



சோளிங்கபுரம் இராசாபாதர் அவர்களின் துணை வியாரும் பேராசிரியர் இரா.கணேசன் (மறைவு) பேராசிரியர் இரா.சோதிவாணன் பொறிஞர் இரா.நரசிம் மன், வேலூர் உதவும் உள்ளங்கள் அமைப்பின் தலைவரும், கடந்த முப்பது ஆண்டுகளாகப் பொதுத் தொண்டிற்காகவே தன்னை முழுமையாக ஒப்படைத் துக் கொண்டு அரும்பணி ஆற்றி வருபவருமான இரா.சந்திரசேகரன் ஆகியோரின் அன்னையர் தேவகி அம்மாள் தன் 95ஆம் அகவையில் வேலூரில் இரா.சந்திரசேகரன் இல்லத்தில் மறைவுற்றார். மா.பெ.பொ.க. தோழர் து.அரங்கநாதன், அலிகர் பல்கலைக்கழகப் பேராசிரியர் து.மூர்த்தி ஆகியோரின் அத்தை தேவகி அம்மாள் க.முகிலன், தமிழேந்தி, பொ.காளியப்பன், மா.முருகேசன், சா.குப்பன், போன்ற பல தோழர்கள் தங்கள் இளமைக் காலம் முதலே தேவகி அம்மாள் - இராசாபாதர் குடும்பத்துடன் நெருங்கிய நட்பு கொண்டி ருப்பவர்கள். வேலூர் மாவட்ட மா.பெ.பொ. தோழர்கள் தேவகி அம்மாள் அவர்களின் இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தேவகி அம்மாள் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி வேலூர், சத்துவாச்சாரியில் உள்ள சோலை அரங்கில் 14.02.2016 அன்று காலை 10 முதல் 1 மணிவரை நடைபெற்றது. தேவகி அம்மாள் குறித்துச் சான்றோர் பெருமக்கள் பலர் உரையாற்றி னர். தேவகி அம்மாள்-இராசாபாதர் ஆகியோர் மகன்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் மா.பெ.பொ.க. ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## வேலூர் தோழர் கே.ஜி.மனோகரன் துணைவியார் சாவித்திரி மறைந்தார்

1980 முதல் மார்க்சியப் பெரியாரிப் பொதுவு டைமைக் கட்சியின் உறுப்பினரும், வேளாண் துறையில் இணை இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற வரும், வேலூர் மாவட்டம், குகையநல்லூரில் பிறந்து வளர்ந்தவருமான தோழர் கே.ஜி.மனோகரன் அவர்களின் துணைவியார் சாவித்திரி அம்மாள் நுரையீரல் தொடர்பான நோய்க் காரணமாகப் பல மாதங்களாகத் துன்பப்பட்டுவந்த நிலையில் 7.2.2016 அன்று இயற்கை எய்தினார். வேலூர் மாவட்ட மா.பெ.பொ.க. தோழர்கள் அவர் இல்லத்திற்குச் சென்று ஆறுதல் கூறியதுடன் மின்மயானத்தில் சாவித்திரி அவர்கள் உடல் எரியூட்டப்படுவதற்குப் பிறவகையிலும் துணை புரிந்தனர்.

1981இல் சோளிங்கபுரத்தில் மா.பெ.பொ.க. பத்து நாள்கள் நடத்திய பயிற்சி வகுப்பில் தோழர் கே.ஜி. மனோகரன் முழுமையாகக் கலந்து கொண்டவர். சாவித்திரி அம்மாளை இழந்து வருந்தும் தோழர் கே.ஜி.மனோகரனுக்கும் மகள் ம.குறிஞ்சி, மகன்கள் குடிஅரசு, குமணன் குடும்பத்தினர்க்கும் மா.பெ.பொ.க. தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## கெயில் நிறுவனத்திற்கு எதிராக வள்ளுவர் கோட்டம் அருகே ஆர்ப்பாட்டம்



வேளாண் நிலங்களைப் பாழ்செய்யவும், உழவர்கள் வாழ்வுக்கு உலைவைக்கவும் வரவுள்ள கெயில் நிறு வனத்தை நாட்டைவிட்டே விரட்டியடிக்கும் கண்டன ஆர்ப்பாட்டம் 23.2.2016 செவ்வாய் மாலை 4 மணி யளவில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே தமிழக மக்கள் முன்னணியின் சார்பில் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் பொழிலன் தலை மையேற்றார். தோழர்கள் விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன், குணங்குடி அனிபா, புலவர் கி.த. பச்சையப்பன், பாவலர் தமிழேந்தி, மா. பூங்குன்றன், ஓவியர் வீரசந்தனம், வழக்கறிஞர்கள் சங்கர சுப்பு, டி.எஸ்.எஸ். மணி, அன்புவாணன், காஞ்சி அமுதன், திருமுருகன், வேலுமணி, செந்தமிழ்வாணன், சின்னப்பா தமிழர் உள்ளிட்டோர் பங்கேற்றுக் கண்டன உரை நிகழ்த்தினர்.

## திருவள்ளூரில் டாக்டர் வி.சுப்புரத்தினம் படத்திறப்பு



மா.பெ.பொ.க. ஆர்வலர், நம் கட்சியின் எல்லாச் செயல்பாடுகளுக்கும் சிறந்த ஒத்துழைப்பை வழங்கி வருபவர், ஓய்வுபெற்ற வேளாண்துறை துணை இயக்குநர் தோழர் எஸ்.ஆர்.செல்வராசு அவர்களின் தந்தையார் டாக்டர் வி.சுப்புரத்தினம் அவர்கள் தம் 92ஆம் வயதில் 17.02.2016 அன்று மறைந்தார். அன்னாரின் படத்திறப்பு நிகழ்வு திருவள்ளூரில் 28.02.2016 அன்று செல்வராசு இல்லத்தில் நடந்தது. க.முகிலன் தலைமை ஏற்றார். பெரியவர் ஏ.சொக்கலிங்கம், சுப்புரத்தினம் அவர்கள் படத்தைத் திறந்து வைத்தார். நிகழ்வுக்கு வந்திருந்த அனை வரையும் செல்வராசு வரவேற்றுத் தம் தந்தை யாரின் சீர்மிகு வாழ்வின் சிறப்புகளைப் பதிவு செய்தார். அவரைத் தொடர்ந்து க.முகிலன், தமிழேந்தி, வேளாண்துறை கூடுதல் இயக்குநர் எஸ்.ரங்க நாதன் ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த் தினார். மறைந்த சுப்புரத்தினம் அவர்களின் மகள் இராணி நன்றி நவிலலுடன் நிகழ்வு நிறைவுற்றது. நிகழ்வையொட்டிப் பொரியார்-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு ரூ.5000/- வழங்கப் பெற்றது.

தாதம்பட்டி **எம். இராஜு**



பிறந்த நாள் :
**22-05-1921**

மறைந்த நாள் :
**19-01-2016**

வாழ்ந்த காலம்
94 ஆண்டு
7 மாதம் 27 நாள்

# தோழர் சிவலிங்கத்துக்கு விதிக்கப்பட்ட கொடுந்தண்டனை

**க. முகிலன்**

1980 ஆகத்து மாதம் 6ஆம் நாள் காவல் துறை சிவலிங்கம் என்பவரைக் கைது செய்து காவல் ஊர்தியில் அழைத்துச் சென்றபோது அவர் மறைத்து வைத்திருந்த நாட்டு வெடிகுண்டை வீசி வெடிக்கச் செய்ததாகச் சொல்லப்படும் வழக்கில் 36 ஆண்டுகள் கழித்துச் சிவலிங்கத்துக்கு 5 குற்றங்களுக்காக 5 ஆயுள் தண்டனையும் வெடிப்பொருள் வைத்திருந்த குற்றத் துக்காக 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதித்து 22-02-2016 அன்று வேலூர் முதன்மைக் கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதை யடுத்து 74 அகவையினரான தோழர் சிவலிங்கம் வேலூர் நடுவண் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். முதிய அகவையிலும் இவ்வளவு கடுமையான தண்ட னையைச் சிவலிங்கத்துக்கு வழங்கியிருப்பதற்கான காரணம்-இவர் தன் இளமைக் காலத்தில் நக்சலைட் டாக இருந்தார் என்பதே ஆகும்.

தோழர் சிவலிங்கம் வேலூர் மாவட்டம் சோலை யார்ப்பேட்டை அருகில் உள்ள வக்கனாம்பட்டி எனும் சிற்றூரைச் சேர்ந்தவர். 1980களில் வேலூர் மாவட்டம் திருப்பத்தூரை ஒட்டிய பகுதிகளிலும் தருமபுரி மாவட் டத்திலும் பண்ணையார்களின் கொடுமைகளுக்கு எதிராக ஊரகப் பகுதிகளில் வேளாண் கூலித் தொழி லாளரின் போராட்டங்கள் மாவோவியத் தோழர்களின் துணையுடன் நடைபெற்று வந்தன. சில வன்முறைத் தாக்குதல்கள் நடைபெற்றன.

அப்போது முதலமைச்சராக இருந்த எம்.ஜி.இராமச் சந்திரன் தான் நடித்த திரைப்படங்களில் தீயவர்களை அடித்து நொறுக்குவது போல் நினைத்துக்கொண்டு, மாவோயிஸ்டுகளைப் பெரும் தீயசக்தியாகக் கருதி டி.ஜி.பி. தேவாரம் தலைமையில் சிறப்புப் படையை ஏவி மாவோயிஸ்டுகளையும் அவர்களுக்கு ஆதரவாகச் செயல்படுவோராகக் கருதப்பட்டவர்களையும் சுட்டுக் கொன்றார்.

மாவோயிஸ்டுகளை அழித்தொழிக்கும் வேட்டையின் போது, 1980 ஆகத்து 6 அன்று காலை ஏலகிரி மலை யடிவாரத்தில் மறைந்திருந்த மாவோயிஸ்டுகள் சிவ லிங்கம், பெருமாள், இராசப்பா, செல்வம், சின்னதம்பி ஆகியோரைத் திருப்பத்தூர் வட்டக் காவல் ஆய்வாளர் பழனிச்சாமி கைது செய்து அவர்களை ஊர்தியில் அழைத்துச் சென்றனர். அப்போது சிவலிங்கம் தன் உள்ளாடைக்குள் மறைத்து வைத்திருந்த நாட்டு வெடி குண்டை ஊர்திக்குள்ளேயே முன்பக்கம் வீசி வெடிக்கச் செய்து ஓடும் ஊர்த்தியிலிருந்து குதித்துத் தப்பி ஓடினார்



*காவல்துறை தளைபடுத்தியபோதும் தளராது முழக்கமிட்டுக் கையுயர்த்தும் தோழர் சிவலிங்கம்*

என்பது வழக்கு. இந்த வெடிகுண்டுத் தாக்குதலில் காவல்துறை ஆய்வாளர் பழனிச்சாமி, காவலர்கள் ஏசுதாசு, முருகேசன் மாவோயிஸ்டுகள் பெருமாள், ராஜப்பா, செல்வம் ஆகியோர் உயிரிழந்தனர். சிவலிங்கம் தன் தோழர் சின்னதம்பியுடன் தப்பியோடிவிட்டார் என்று காவல்துறை வழக்கைப் பதிவு செய்தது.

காவல்துறை ஆய்வாளர் பழனிச்சாமியின் இறுதிச் சடங்கில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கலந்து கொண்டார். உடனே, தமிழ்நாட்டில் நக்சலைட்டுகளை ஒழிக்க பழனிச்சாமியின் மகள் அஜந்தா பெயரில் "ஆபரேஷன் அஜந்தா" என்கிற அரச பயங்கரவாதத்தைத் தொடங்கி வைத்தார். ஆபரேசன் அஜந்தா மூலம் ஆறே மாதங் களில் நக்சலைட்டு இயக்கத்தை முழுமையாக ஒழித்து விட்டதாக 'இரத்தவெறி' கொண்ட தேவாரம் இத்தீர்ப்புக் குப் பின் கூறியிருக்கிறார். ஆபரேஷன் அஜந்தா நட

வடிக்கையில் காவல்துறை நூற்றுக்கும் மேற்பட்டவர்களைச் சுட்டுக் கொன்றது. அரசு நடத்திய இப்படுகொலைக்கு நியாயம் தேடிட மனித உரிமை அமைப்புகள் மேற்கொண்ட முயற்சிகளால் பயன் ஏதும் விளையவில்லை. எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது மனித உரிமை மீறல்கள் குறித்து ஆய்வு செய்ய தில்லியிலிருந்து வந்த மனித உரிமை அமைப்பின் தலைவர் நீதிபதி தார் குண்டே அரசு ஏவிய ஆட்களால் தாக்கப்பட்டார்.

இந்த வெடிகுண்டு வழக்கு விசாரணையின் போது, சிவலிங்கத்துடன் தப்பிச் சென்ற சின்னதம்பி இறந்துவிட்டார். 29 ஆண்டுகள் சொல்லொண்ணாத் துன்பங்களைத் தாங்கிக்கொண்டு தலைமறைவாக இருந்த சிவலிங்கம் 2009 ஆம் ஆண்டு திருவள்ளூர் அருகில் காவல்துறையின் உளவுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டார். விரைவில் பிணையில் வெளிவந்தார்.

பிணையில் வெளிவந்தபின், வறுமையிலும், தலைமறைவு வாழ்க்கையின் விளைவால் ஏற்பட்ட உடல்நலக்குறைவுகளின் இயலாமைகளிலும் உழன்று கொண்டிருந்தபோதிலும், கடந்த ஆறு ஆண்டுகளாக மக்களின் சனநாயக உரிமைகளுக்காகப் பல்வேறு இயக்கங்கள் வேலூர் மாவட்டத்தில் பல இடங்களில் நடத்திய ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள், மாநாடுகள் அனைத்திலும் ஒரு இளைஞனுக்குரிய ஆர்வத்துடன் பங்கேற்றார். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி வாணியம்பாடியிலும் வேலூரிலும் நடத்திய அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார். இறுதியாக 2016 சனவரி 23, 24 ஆகிய நாள்களில் சென்னையில் மா.பெ.பொ.க. நடத்திய பொங்கல் மலர் வெளியீடு மற்றும் மாநாடுகளில் கலந்து கொண்டார்.

இன்றுள்ள இந்திய அரசமைப்புச் சட்டம் முதலாளிகள், பணக்காரர்கள், பன்னாட்டு நிறுவனங்கள், பார்ப்பனர் உள்ளிட்ட மேல் சாதியினர் ஆகியோரின் நலன்களையும் ஆதிக்கத்தையும் காப்பாற்றுவதாக இருக்கிறது. எனவே உழைக்கும் மக்களுக்கு அடிப்படை உரிமைகளையும், சமத்துவத்தையும், நல்வாழ்வையும் அளிக்கின்ற தன்மையில் அரசியலமைப்புச் சட்டத்தை அடியோடு மாற்றவேண்டும் என்பது மா.பெ.பொ.க.வின் குறிக்கோளாகும். இந்தியாவில் இதே கருத்தை வாக்கு அரசியலில் பங்கேற்காத பல்வேறு இயக்கங்களும் சமூக அக்கறை கொண்ட பல்துறை அறிஞர்களும் கூறி வருகின்றனர். மாவோயிஸ்டுகள் ஆயுதப் புரட்சி மூலம் இந்த அரசியல் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்கின்றனர். மற்றவர்கள் வீறார்ந்த மக்கள் திரள் போராட்டங்கள் மூலம் இதைச் செய்ய வேண்டுமென்கின்றனர். ஆனால் நடுவண் அரசு கடந்த முப்பது ஆண்டுகளாக 70 விழுக்காடாக உள்ள ஏழை எளிய மக்களின் துன்பங்களை நீக்கிட முயலாமல், மாவோயிஸ்டுகளை ஒடுக்குவதில் முனைப்புக் காட்டி வருகிறது. மாவோயிஸ்டுகளைத் தேசவிரோதிகள் என்று முத்திரை குத்தி மக்களிடமிருந்து அவர்களை அந்நியப்படுத்த முயல்கிறது.

இந்தப் பின்னணியில் 36 ஆண்டுகளுக்கு முன் வெடிகுண்டு வீசிய நடவடிக்கையை மய்யப்படுத்திய வழக்கில் தோழர் சிவலிங்கத்துக்கு 22-02-2016 அன்று அவரின் எஞ்சிய முதுமையின் வாழ்நாள்



*2016 பொங்கல் மலர் வெளியீட்டு விழா மாநாட்டில் ஆனைமுத்துவுக்கு இடப்புறம் தோழர் சிவலிங்கம்*

முழுவதும் சிறையில் இருக்குமாறு தண்டனை விதித்திருப்பது பெருங்கொடுமையாகும்.

இத்தீர்ப்பு அறிவிக்கப்பட்டபின் சிவலிங்கம் செய்தியாளர்களிடம், “அஜந்தா போரில் 29 பேர் கொல்லப்பட்டனர். காவல்துறையின் முதல் தகவல் அறிக்கையில் எனது பெயர் பல ஆண்டுகளுக்குப்பின் சேர்க்கப்பட்டது. திருப்பத்தூர் காவல்நிலையத்தில் கைகளைக் கட்டிய நிலையில் காரில் ஏற்றினர். அப்படி இருக்கும் போது வெடிகுண்டை எப்படி வீசமுடியும் என்பதற்குப் பதில் சொல்லவில்லை” என்று கூறினார். மா.பெ.பொ.க. வாணியாம்பாடி நகரச் செயலாளர் நா.மதனகவி 25.2.2016 அன்று வேலூர் நடுவண் சிறையில் தோழர் சிவலிங்கத்தைச் சந்தித்துப் பேசினார்.

2001 இல் நாடாளுமன்றத் தாக்குதல் தொடர்பான வழக்கில், உரிமம் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 5 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்ட இந்தி நடிகர் சஞ்சய் தத் தண்டனைக் காலத்திற்கு முன்னதாக 2016 பிப்பிரவரி மாதம் விடுதலை செய்யப்பட்டுவிட்டார். தண்டனைக் காலத்தில் 75 விழுக்காடு அளவுக் காலம் சிறை விடுப்பில் (பரோல்) வீட்டில் இருந்தார். திரைப்படங்களிலும் நடித்தார்.

பணக்காரர்களுக்கும் செல்வாக்கானவர்களுக்கும் நீதித்துறை தன் கண்களில் வெண்ணெய் வைத்துக் கொண்டு தீர்ப்பு வழங்குகிறது. ஏழை எளிய மக்களுக்கோ சுண்ணாம்புக் கண்ணுடன் தீர்ப்பு கூறுகிறது.

சனநாயக-மனித உரிமை அமைப்புகள் ஒன்றுபட்டு முயன்று தோழர் சிவலிங்கம் விரைவில் விடுதலையாகிட எல்லா வகையான நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

# கோபி மா.செல்வம் பணி ஓய்வு பெற்றார்

ஈரோடு மாவட்டம் கோபிச் செட்டிப்பாளையம் தோழர் மா.செல்வம் தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் பணியாற்றி, கூட்டுறவுத் தணிக்கை அலுவலர் பதவியிலிருந்து 29.2.2016 திங்கள் கிழமையன்று தம் அரசுப் பணியை நிறைவு செய்து, ஓய்வு பெறுகிறார்.

அவர் கூட்டுறவுத் தணிக்கைத்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவராகப் பல ஆண்டுக்காலம் தொண்டாற்றி, துறை அலுவலர்களின் நலன்களுக்கு நல்லவண்ணம் பாடுபட்டுள்ளார். அன்னார் நல்ல உடல் நலத்துடன் விளங்கி, ஒடுக்கப்பட்டோர் நலன் கருதித் தம்மால் ஆன பணிகளைச் செய்ய வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**- வே.ஆனைமுத்து**

# சென்னையில், தென்னிந்தியப் பழங்குடியினர் கூட்டமைப்பின் சார்பில் 12ஆவது மாநாடு




14.2.2016 ஞாயிறு மாலை 4 மணியளவில் ஆவடி பூந்தமல்லி சாலை, இராசா திருமண மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் தோழர் வே. ஆனைமுத்து, பேராசிரியர் அ. மார்க்சு, பேராசிரியர் ஆர்.மணிவண்ணன், தில்லி தமிழரசு, தென்னிந்தியப் பழங்குடிகள் கூட்டமைப்பின் நிறுவனர் மற்றும் தலைவர் பழங்குடி பாலு உள்ளிட்டோர் உரையாற்றினர்.

# ப. இரவிச்சந்திரன் அவர்களின் பணிநிறைவு நிகழ்ச்சி

சென்னை, திருவல்லிக்கேணி அஞ்சலகத்தில் 34 ஆண்டுகள் பொதுமக்கள் அனைவரும் பாராட்டும் வண்ணம் பணி செய்த தோழா ப.ரவிச்சந்திரன் அவர்களின் பணிநிறைவு 29-2-2016 அன்று திருவல்லிக்கேணி அஞ்சல வளாகத்தில் கே.அய்யாவு (மாநிலச் செயலாளர் மேற்பாவையாளர் சங்கம்) தலைமையில் நடைபெற்றது. முனைவர் நெல்லை சா.அசாரியா முன்னிலை வகித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கார்வேந்தன், தமிழ்மாநில காங்கிரசுக் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன், மயிலை எஸ்.சத்யா, உன்னிகிருஷ்ணன், பா.ச.க.வின் தாமரை கஜேந்திரன், என்.நாகராஜ், பிற்படுத்தப்பட்ட நல ஊழியர் சங்கக் கூட்டமைப்பின் செயலாளர் தனசேகரன், ஜெ.பிரசாத், இ.கே.ஆறுமுகம் உள்ளிட்டோர் உரை ஆற்றினர். அஞ்சலக ஊழியர்கள் ஆ.குப்பன், எம்.சரவணன், எச்.பாபு ஆகியோரும் வாழ்த்துரைத்தனர். ப.இரவிச்சந்திரன் ஏற்புரை நிகழ்த்தினார். பணிநிறைவையொட்டி தோழர் ப.இரவிச்சந்திரன் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500/- அளித்தார்.

# தேர்தல் அறிக்கையில் தேடுங்கள்! கேளுங்கள்!

- கலசம்

தேர்தல் வரும்
தேர்தல் அறிக்கையும் வரும்

கல்வி
அதிகாரப் பதவி
செல்வ வளங்கள்
அனைத்திலும்
எல்லா வகுப்புக்கும்
விகிதாசார
வகுப்புவாரிப் பங்கீடு வேண்டும்!
நூறு விழுக்காட்டையும்
பங்கிட வேண்டும்

நீதிக் கட்சியின்
சுயமரியாதை
இயக்கத்தின்
கோரிக்கையும்,
இன்று
அனைத்திந்திய
ஒடுக்கப்பட்டோர்
பேரவையின்
கோரிக்கையும்
ஒன்றே!

நீதிக்கட்சிக்கு
நூற்றாண்டுவிழா!
ஆனாலும்
தங்களுக்குரிய
பங்கினைப் பெறாத
சமூகங்கள் பல!
ஏன்
இந்த இழிநிலை?

1970ஆம் ஆண்டில்
அவ்வாறான
ஏழு சமூகங்களை
வண்ணார்
மருத்துவர்
பர்வதராசகுலம்
ஒட்டர்
வலையர்
குறும்பர்
அம்பலக்காரர் எனச்
சட்டநாதன்
பட்டியலிட்டார்!
அவர்களுக்கு
உள்ஒதுக்கீடு
கொடுத்திடப்
பரிந்துரை செய்தார்!

அன்று
சட்டநாதன்
நோக்கிய தன்மையில்
ஆனைமுத்து
நோக்கினார்
இன்று!

2016 ஆம் ஆண்டில்
வேலூர் மாநாட்டில்
அந்த ஏழுடன் கூடப்
பிற்படுத்தப்பட்ட
குயவர்
கம்மாளர்
யாதவர்
சமூகங்களும்
உரிய பங்கினைப்
பெறாத சமூகங்களே!
எடுத்துரைத்தது
ஆனைமுத்துவின்
ஒடுக்கப்பட்டோர்
பேரவை.

ஏழுடன் நான்கு
பதினொரு
சமூகங்களுக்கும்
அவர்களைப் போன்றே
உரிய பங்கு பெறாத
பிற சமூகங்களுக்கும்
உள்ஒதுக்கீடு
கோருகின்றது
ஒடுக்கப்பட்டோர்
பேரவை!

"தேசத்தின்
வளப்பெருக்கம்
பல
வகுப்புகளுக்கும்
சரிவரப்
போய்ச் சேர
வழி
இருக்கின்றதா?"1
இந்த வினா
பெரியாரின் வினா

அதற்கான விடையும்
பெரியாரின் சொற்களில்
இதோ!
"மறுபடியும்
உள்வகுப்புகள்
ஏற்படுமே என்கிற
பயம் இருக்குமானால்
அதற்கும்
நாம்
தயாராக இருக்க
வேண்டியதுதான்."2

வகுப்புரிமைக்குத்
தோள் கொடுக்கும்
தி.மு.க.,
அ.தி.மு.க.
அரசுகளும்,
சமூக நீதிக்கான
கட்சிகளும்,
கட்சித் தலைவர்களும்
வஞ்சிக்கப்பட்ட
சமூகங்களின்
உள்ஒதுக்கீட்டுக்காக
வாய் திறக்கவில்லையே!

எனவே
கட்சிகள் வெளியிடும்
தேர்தல் அறிக்கையில்...
கட்சித் தலைவர்களின்
உரையில்...
"உள்ஒதுக்கீடு கொடுக்கிறோம்"
என்று சொல்லப்பட்டுள்ளதா?
தேடுங்கள்! தேடுங்கள்!!
கேளுங்கள்! கேளுங்கள்!!

அடிக்குறிப்புகள் :

1. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுதி 3, பகுதி 1, பக்.1433.
2. பெரியார் ஈ.வெ.ரா.சிந்தனைகள் தொகுதி 3, பகுதி 1, பக்.1383

## ஈரோட்டில் ஏழு தமிழர் விடுதலைப் பொதுக்கூட்டம் தோழர் மோகனராசு 3ஆம் ஆண்டு நினைவேந்தல்

31.01.2016 அன்று ஈரோடு கருங்கல்பாளை யத்தில் தமிழ்த் தேசக் குடியரசு இயக்கத்தின் சார்பில் ஏழு தமிழர் விடுதலை கோரிப் பொதுக்கூட்டமும், தோழர் மோகனராசு 3ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றன.

மாலை 6 மணிக்குத் தொடங்கிய இந்நிகழ்விற்குச் செந்தமிழ்வாணன் தலைமையேற்றார். க.இரா. தமிழரசன் வரவேற்புரைக்குப்பின், சிறந்த தமிழினப் போராளி, தொழிற்சங்கத் தலைவர் மறைந்த தோழர் கு. மோகனராசு அவர்களின் படத்தைத் தமிழரசன் திறந்து வைத்தார். தொடர்ந்து சமர்பா குமரன், நிலவன், சி.வெ. பொன்னையன், புலிப்பாண்டியன், ஒப்புர வாளன், கண. குறிஞ்சி, வழக்கறிஞர் ப.பா. மோகன், பாவலர் தமிழேந்தி உள்ளிட்டோர் உரையாற்றினர். தோழர் பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மாள் சிறப்புரையாற்றினார். நிகழ்வின் தொடக்கத்தில் பறைமுழக்கம், பாட்டாளிகள் படிப்பக இளஞ்சிட்டுகள் சிலம்பாட்ட நிகழ்ச்சிகள் போன்றவை நடத்திக் காட்டப் பட்டன. திரளான மக்கள் பங்கேற்று பொதுக்கூட்டத் தைச் சிறப்பித்தனர்.

## சீயோன்மலை, முரம்பில் பாவாணர் பிறந்த நாள் விழா தனித்தமிழ் இயக்கத்தின் நூற்றாண்டு விழா

9.2.2016 செவ்வாய் மாலை 6 மணியளவில் விருதுநகர் மாவட்டம், சீயோன்மலை பாவாணர் கோட்டத்தினர் மற்றும் உலகத் தமிழ்க் கழகத்தின் சார்பில் பாவாணர் பிறந்த நாள் விழாவும், தனித் தமிழ் இயக்கத்தின் நூற்றாண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

உலகத் தமிழ்க் கழகக் கொடியைப் பல்லடம் மெய்யறிவின்பன் உயர்த்தினர். உலகத் தமிழ்க் கழகச் செயற்பாட்டு ஊக்கப் பரிசு சிவகாசி உலகத் தமிழ்க் கழகத் திற்கு வழங்கப்பட்டது. பாவாணர் கொள்கை பரப்புநர் விருது பொறிஞர் அகன் அவர்களுக்கு அளிக்கப் பெற்றது. பேராசிரியர் பி.தமிழகன் விழாச் சிறப்புரையாற்றி னார். பாவாணர் கோட்டப் பொறுப்பாளர்கள் புலவர் ஆ. நெடுஞ்சேரலாதன், அ. இளங்கண்ணன், இல. நிலவழகன் உள்ளிட்டோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## இடஒதுக்கீட்டில் அநீதி இழைக்கும் நடுவண் அரசைக் கண்டித்துச் சென்னையில் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம்

மண்டல் குழு பரிந்துரைகள் நடப்புக்கு வந்து 25 ஆண்டுகள் ஆன பின்னரும், 12 விழுக்காட்டு மக்களுக்கே வேலை வாய்ப்பை வழங்கி மூன்று தலை முறை பிற்படுத்தப் பட்ட இளைஞர்களுக்கு இரண்டகம் இழைத்து வரும் நடுவண் அரசைக் கண்டித்து, அகில இந்திய OBC ஊழியர் நலச் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் 13.02.2016 காரி காலை 10 மணியளவில் சென்னை வள்ளுவர் கோட் டத்தில் நடைபெற்ற தொடர் முழக்க ஆர்ப்பாட் டத்திற்கு ரங்கராசன் தலைமை வகித்தார். கே. தனசேகரன் முன்னிலை ஏற்க, கே. விசுவநாதன் அனைவரையும் வரவேற்றார். திராவிடர் விடுதலைக்கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பேராசிரியர் டாக்டர் ஈ. முரளிதரன் உள்ளிட்ட பல்வேறு நடுவண் அரசின் பொதுத்துறை பிற்படுத்தப்பட்ட ஊழி யர் நலச் சங்கங்களின் செயல்வீரர்கள் பங் கேற்று உரையாற்றினர். கோரிக்கைத் தொடர் முழக்கங்களும் எழுப்பப்பட்டன. நிறைவாக ஆர்.பி. இளங்கோ நன்றி உரைத்தார்.

## ஆவடியில் ஈகி முத்துக்குமார் 7ஆம் ஆண்டு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்

22.1.2016 வெள்ளி மாலை 6 மணியளவில் சென்னை ஆவடி அண்ணாசிலை அருகில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் ஈழம் காக்கத் தன் இன்னுயிரை ஈகம் செய்த கு. முத்துக்குமார் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. ந.க. தமிழ்ச் சிற்பி தலைமை ஏற்றார். ஆவடி நாகராசன் வரவேற்பு ரையாற்ற, இரா. பரந்தாமன், முத்தமிழ்மணி, கரு. அண்ணாமலை, ம.தி.மு.க. வழக்கறிஞர் ஆவடி அந்திரிதாஸ் உள்ளிட்டோர் உரையாற்றி னர். முத்துக்குமார் படத்தைத் திறந்து வைத்து பாவலர் தமிழேந்தி சிறப்புரையாற்றினார். திரளான மக்கள் கூட்டத்தில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

# கொள்ளையர்கள் உங்களைத் தேடி வருவார்கள் எச்சரிக்கை! எச்சரிக்கை!

கடந்த 45 ஆண்டுகளில் மக்களுக்கு நன்மை செய்வதாகக் கூறிக் கூத்தாடிகள் கூடாரம் போட்டு ஆட்சி செய்து வந்துள்ளனர். உங்கள் வாக்குகளை கணினி இயந்திரத்திலும் தேர்தலில் ஓட்டுக் கொள்ளையடித்து வென்றதாகக் கூறி ஆட்சி செய்தவர்கள் வலம்வரும் நேரம் நெருங்கிவிட்டது; எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நமக்கு இதுவரை நல்ல கல்வி, ஏற்றத்தாழ்வு அற்ற சமச்சீர் கல்வி கிடைக்கவில்லை. இன்றுவரை ஏழைக்கு ஒரு படிப்பு, பணம் படைத்தவருக்கு ஒரு படிப்பு! ஒரே தரமான சமச்சீர் படிப்பு கொடுப்பதாகக் கூறி ஓட்டுக் கேட்டவர்கள், இதைப்பற்றிச் சிந்திக்கா மலிருக்க நல்ல வழி கண்டு உங்களுக்கு மதுக்கடை களை அரசே நடத்துகின்றது. குடித்த எவனாலும் சிந்திக்க முடியாது என்ற உறுதியான நம்பிக்கையுடன் அரசியல்வாதிகள் உங்களை மயக்கி ஓட்டுக் கேட்க வருகின்றார்கள்.

**நம்மிடம் வாங்கும் வரிகளின் வகைகள் :**

1. தொழில் வரி, 2. தொழிலாளர் வரி, 3. சேவை வரி, 4. விற்பனை வரி, 5. வணிகர்களுக்கு வணிக வரி, 6. தண்ணீர் வரி, 7. கழிவுநீர் வரி, 8. கல்வி வரி, 9. உயர்கல்வி வரி, 10. வாகன வரி, 11. சாலை வரி, 12. சுங்க வரி, 13. கலால் வரி, 14. வருமான வரி, 15. வீட்டு வரி, 16. விற்பனை வரி, 17. கூடுதல் விற்பனை வரி, 18. உபரி வரி, 19. ஓட்டல் உணவுக்கு வரி, 20. கேளிக்கை வரி, 21. சாலை சுங்கவரி போன்ற பல வரிகளை மக்களிடம் வாங்கியும் அரசு, மது விற்பனை, குடிதண்ணீர் விற்பனை போன்ற வியா பாரத்தால் கிடைக்கும் இலாபத்தில்தான் அரசு இயங்க முடிகிறது என்பது நமக்கு அவமானம்.

இப்பொழுது பேருந்துகள் அனைத்தும் மிதவைப் பேருந்து, குளிர்சாதனப் பேருந்து, விரைவுப் பேருந்து, மிக மிகச் சிறந்த சொகுசுப் பேருந்து (Ultra) போன்ற பேருந்துகளைத் தவிர மக்கள் அதிகம் பயன்படுத்தும் காலை மற்றும் மாலை அலுவலக நேரங்களில் இயக்கி, போக்குவரத்துத் துறையின் மூலம் மக்கள் பணத்தைக் கொள்ளையடிக்கின்றனர். சாதாரணக் கட்டணப் பேருந் துக்குக் காத்திருந்து காலம் கடந்து செல்லும் ஏழை, அலுவலகம் மற்றும் தொழிலில் காலதாமதத்திற்கு உரிய தண்டனையுடன் பணிசெய்கின்றனர்.

உழவுத் தொழில் செய்பவர்களும், மீனவர்களும், நெசவாளர்களும் நாட்டின் முதுகெலும்புகளாக உள்ளனர். இவர்களின் உற்பத்தி அதிகமானால் இடைத்தரகர்கள், கடன் வாங்கி உற்பத்தி செய்த பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்குகின்றனர். பால் உற்பத்தி அதிகரித் தால் அரசே நடத்தும் ஆவின் நிறுவனம் பாலை வாங்க மறுத்துள்ளது. இதே ஆவின் நிறுவனம் நுகர்வோருக் குத் தண்ணீர் கலந்து 3000 கோடிக்குமேல் அரசு உதவியுடன் கொள்ளையடித்துள்ளனர். இதை திசை திருப்ப வேறு பிரச்சனையை அரசே தூண்டிவிட்டு மூடி மறைக்கின்றது. கொள்ளையர்கள் தண்டனையி லிருந்து தப்பித்து விடுகின்றனர்.

**- உழவர் மகன்**

## உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாக்கு! சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரைத் தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என மாற்ற வேண் டும். உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாகத் தமிழ் இடம்பெற வேண்டும். போராட்டம் நடத்திய வழக்கறிஞர்களை விடுதலை செய்ய வேண்டும். உயர்நீதிமன்றத்தில் உள்ள நடுவண் பாதுகாப்புப் படையைத் திரும்பப் பெறவேண்டும் உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்தி, 4.2.2016 அன்று மாலை 4 மணியளவில் தமிழ் உரிமைக் கூட்டமைப் பின் சார்பில், கூட்டமைப்பின் தலைவர் புலவர் கி.த. பச்சையப்பன் தலைமையில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற் றது. தோழர் காஞ்சி அமுதன் வரவேற்றார். தொடக்கத்தில் தோழர் தமிழேந்தி கண்டன முழக்கங்கள் எழுப்ப, மற்றவர்கள் பின் முழங்கினர். தமிழர் தேசிய முன்னணித் தலை வர் பழ. நெடுமாறன், பெ. மணியரசன், இராசேந்திரசோழன், பொழிலன், மா. பூங் குன்றன், பா. இறையெழிலன், வீ. இறை யடிகள், திருமுருகன் காந்தி, தமிழ்நேயன், அன்புவாணன், சின்னப்பா தமிழர், செந்தமிழ் வாணன், பேராசிரியர் ப. சிவக்குமார், கோச் சடை, கல்விமணி, வழக்கறிஞர்கள் சங்கர சுப்பு, புகழேந்தி, பகத்சிங், ஓவியர் வீரசந்த னம் உள்ளிட்டோர் பங்கேற்று உரையாற்றி னர்.

## “கண்ணியம்” ஆ. குலோத்துங்கன் அவர்களுக்கு நன்றி!

“கண்ணியம்” திங்கள் இதழ் ஆசிரியர் திரு. ஆ.கோ. குலோத்துங்கன் அவர்கள், “பெரியார் ஈ.வெ.ரா.-நாகம்மை ஆய்வு நூலகத்திற்கு ரூபா 13,000 (பதின்மூன்றாயிரம்) மதிப்புள்ள 260 நூல்களையும் மற்றும் பருவ இதழ் களான ‘கண்ணியம்’, ‘திசைஎட்டும்’, ‘வாழும் வள்ளுவம்’, ‘அரிமா நோக்கு’ மற்றும் சிறப்பு இதழ்கள் ஆகியவற் றையும் நன்கொடையாக வழங்கியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெரியார் ஈ.வெ.இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளையின் சார்பில், அப்பெருமகனாருக்கு நன்றியை உரித்தாக்குகிறோம்.

01-3-2016 **வே. ஆனைமுத்து**
தலைவர் மற்றும் மேலாண்மை அறங்காவலர் &
அறங்காவலர்கள்

## சிந்தனையாளன்

### உரிமை மற்றும் வெளியீடு பற்றிய விவரம் அறிக்கை படிவம் IV [விதி எண்.8இன்படி]

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடப்படும் இடம் | : 2B/85, K.S.R.நகர், MWB 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை-53. |
| 2. | அச்சிடுவோர் | : பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் |
| 3. | வெளிவரும் காலம் | : மாதந்தோறும் |
| 4. | வெளியிடுவோர் பெயரும் முகவரியும் | : வே. ஆனைமுத்து 2B/85, K.S.R.நகர், MWB 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை-53. |
| 5. | ஆசிரியார் பெயரும் முகவரியும் | : மேலே உள்ளபடி |
| 6. | இதழுக்கு உரிமையாளர் களின் பெயர்(களும்) முகவரி(களும்) | : மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி 2B/85, K.S.R.நகர், MWB 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை-53. |

இங்கு மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவை என்று இதன்மூலம் உறுதி கூறுகிறேன்.

ஒப்பம்
சென்னை **வே. ஆனைமுத்து**
01.03.2016

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி மார்ச்சு-2016

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| புலவர் **இரத்தினவேலு** | சென்னை-78 | 500/- |
| **எம். சுப்பையா** | ஆவுடையார்கோயில் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இளவரசன்** தமிழ்க்களம் | அரியலூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மார்ச்சு - 2016

| | | |
|---|---|---|
| முனைவர் **ஆ. முத்தமிழ்ச்செல்வன்** | சென்னக்குணம் | .... 500/- |
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் | .... 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர்,** சென்னை-53. ☎ : 044-2625 2119